Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර

ஏப். 01-07, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 402

## யுத்தம் தந்த பிட்ஷா பாத்திரம்

# பட்ஜெட்



## நெஞ்சை உலுக்கும்

# உண்மைத் தொடர்

## பரபரப்பான ஆரம்பம்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## அகதிகளுக்கு 1000 வீடுகள்

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

யாழ்ப்பாணத்தின்
வலிகாமப் பிரதேசத்தில்
உயர் பாதுகாப்பு வலயமாகப்
பிரகடனம் செய்யப்பட்ட
பகுதியிலிருந்து
இடம் பெயர்ந்து,
நலன்புரி நிலையங்களில்
தஞ்சம் புகுந்து வாழும்
தமிழ் மக்களுக்கு
ஆயிரம் வீட்டுத்
திட்டமொன்றை
அமைத்துக் கொடுக்க
வடமாகாணப்
புனர்வாழ்வு அமைச்சினால்
எடுக்கப்பட்ட முயற்சிக்கு
தமிழர் விடுதலைக் கூட்டணி
எதிர்ப்புத் தெரிவித்ததைக்
கண்டித்து அம் மக்கள்
ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை
நடத்தியிருந்தார்கள்.

இத்தகைய வீட்டுத்திட்டம்
அகதி முகாம்களில்
வாழும் மக்களை
திரும்பவும் தமது
பிரதேசத்துக்குச் செல்லாது
நிறுத்திவிடுமென்ற காரணத்தை
தமிழர் விடுதலைக் கூட்டணி
முன்வைக்கிறது.

ஆனாலும் இதில்
அரசியல் லாபமே
பிரதான உட்கிடையென்பது
எவருக்கும் புரியக்கூடிய ஒன்று.

மாற்றுத் தரப்புக்கு
மக்களாதரவு போய்விடக்கூடாது
என்ற காழ்ப்புணர்வில்
மக்களின் நலன்களுக்கே
குறுக்காக நிற்க முனைவது
மனசாட்சியற்றது என்பதுடன்
முட்டாள்தனமானதும்கூட.

என்றோ ஒருநாள்
அமைதி திரும்பும்போது
இந்த இடம்பெயர்ந்த மக்கள்
தமது வீடுகளுக்குத்
திரும்ப வேண்டுமென்பதற்காக-
அன்றுவரை
எந்தவித அடிப்படை வசதியுமற்ற
அகதி முகாம்களிலேயே
அவர்கள் அல்லலுற
வேண்டுமென
இவர்கள் எதிர்பார்ப்பது
மிகவும் விசித்திரமானது.

மக்களை வாழவைக்கவே
அரசியல் தலைவர்கள்
என்ன வேண்டுமேயன்றி
மக்களைத் தமது
அரசியலுக்காகப் பயன்படுத்த
எண்ணக்கூடாது.

ஆயிரம் வீட்டுத் திட்டத்தை
எதிர்த்த கூட்டணித் தலைவர்
ஆனந்தசங்கரியிடம்
அகதி முகாம் வாசியொருவர்
கேட்டுள்ள கேள்வி
அர்த்தபுஷ்டியானது.

அகதி முகாமிலேயே
தாங்கள் வாழவேண்டுமென
ஆனந்தசங்கரி கூறுவாராயின்
அவரும் தம்முடன்வந்து
அந்த முகாமில்
வாழத் தயாராவென
அவர் கேட்டிருந்தார்.

இதற்கு ஆனந்தசங்கரி
பதில்கூறப்
போவதில்லையென்பது
தெரிந்த விடயமாயினும்,
ஓர் உண்மையைமட்டும்
இந்தக் கேள்வி
எடுத்தியம்புகிறது.

மக்களின்
கஷ்டங்களையும் துயரங்களையும்
பொறுப்பெடுக்கத் தயாரில்லாத
எந்த அரசியல் தலைவர்களும்
மக்களுக்காகக் குரல் கொடுக்கத்
தகுதியற்றவர்கள்
என்ற உண்மையை இது
இடித்துரைக்கிறது.

அந்த மக்கள்
சொந்த இடங்களுக்குத்
திரும்ப வேண்டுமென்றால்
யுத்தத்துக்கு முடிவுகட்ட
முயற்சிப்பதே வழி.

ஆயிரம் வீட்டுத்திட்டத்தை
தடுப்பதல்ல!
கொடுக்க முடியாவிட்டாலும்
கெடுக்க முயலாதிருக்கட்டும்!

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்


## ஆண்டவன் பெயரில் அர்ச்சனை

**நா**ம் பக்தியுடன் கோயிலுக்குச் சென்று சுவாமியை வழிபடும் போது தேங்காய், பழத்துடன் அல்லது குங்குமத்துடன் இறைவனை அர்ச்சிக்க விரும்புகின்றோம். அப்போது அர்ச்சகர் பெயர், நட்சத்திரம் ஆகியவைகளை கேட்கிறார். சில பக்தர்கள் சுவாமி பெயருக்கு அல்லது அம்பாள் பெயருக்கு அர்ச்சனை செய்யுங்கள் என்கிறார்கள். இது சரிதானா?

மனிதர்கள் தான் சுகமாக வாழவேண்டும். அந்த சுகமான வாழ்க்கையை இறைவன் நமக்கு வழங்க வேண்டும். இறைவனை வாழ வைக்க நாம் யார்? மனிதர்களுக்குத் தான் சூனியம், கிரக தோஷம், பிரச்சனைகள், நோய்கள், குழப்பங்கள் எல்லாம் உள்ளன. இறைவனுக்கு அல்ல. அதனால், நமது பெயரில்தான் அர்ச்சனை செய்ய வேண்டும். இறைவனுக்கு நாம் அர்ச்சனை செய்வதால் ஆகவேண்டிய காரியம் எதுவுமில்லை. நமக்குத்தான் இறைவனால் ஆக வேண்டிய காரியங்கள் நிறைய உள்ளன. அதனால் இனிமேல் நமது பெயருக்கு அர்ச்சனைசெய்து நமது தோஷங்களிலிருந்து விடுபடல் நலமே!

ரீ.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.

## அச்சமூட்டி எச்சரிப்பவன் அல்லாஹ்!



★ **வா**னத்திலிருப்பவன், உங்களைப் பூமிக்குள் செருகிவிடுவான் என்பதை மறந்து நீங்கள் அச்சமற்றிருக்கின்றீர்களா? (பூமியாகிய அது எந்நேரத்தில் குமுறி நடுங்கும்.)

★ அல்லது வானத்திலிருப்பவன் உங்கள் மீது கல்மாரியை அனுப்பி வைக்கமாட்டான் என்பதிலிருந்து நீங்கள் அச்சமற்றிருக்கின்றீர்களா? அவ்வாறாயின், எச்சரிக்கை (செய்யப்பட்ட வேதனை) எவ்வாறிருக்கும் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

★ மேலும், இவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்கள் இவர்களைப் போலவே நம் வசனங்களைப் பொய்யாக்கி (நிராகரித்துக்) கொண்டிருந்தனர். ஆனால் (அவர்களை அழிப்பது கொண்டு) என்னுடைய தண்டனை எவ்வாறிருந்தது?

அல்குர்-ஆன் 67: 16-18)

★ மேலும், தம் வாழ்க்கை வசதிகளின் மேம்பாட்டால் (அட்டூழியம் செய்து) வரம்பு மீறி விட்ட எத்தனையோ ஊ(ரா)ர்களை நாம் அழித்திருக்கிறோம். அவை அவர்களின் குடியிருப்புகளாகும்; கொஞ்ச (நேர)மே தவிர அவர்களுக்குப் பின் (யாராலும்) குடியிருக்கப்படவில்லை; நாமே (அவைகளுக்கு) வாரிசுகளாக ஆகி விட்டோம்.

(அர் குர்-ஆன் 28: 58)

தொகுப்பு: ஏ.எச்.ஏ.ஹுஸைன்-ஏறாவூர்.

## கர்த்தரில் நிலைத்திராவிட்டால் வரும் தீமைகள்

"...என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்க மாட்டீர்கள்".

(யோவான் 15:4)

எனக்கு அன்பானவர்களே, நாம் கர்த்தரில் நிலைத்திராவிட்டால் நம் வாழ்வு கனியற்றதாக மாறிவிடும். நாம் நம்முடைய கனிகளாலே அறியப்படுவோம் என்று வேதம் கூறுகிறது. கனி என்பது நமது பண்புகள், நமது குணாதிசயங்கள் நம் செய்கைகள் ஆகும். கர்த்தரில் நாம் நிலைத்திராவிட்டால் கனியற்ற ஒரு வாழ்வுக்கு நாம் ஆளாவோம். அதுமாத்திரமல்ல கர்த்தருக்குள் நிலைத்திராவிட்டால் நம்முடைய அதிகாரம் சுதந்திரம், ஆசீர்வாதம் சகலவற்றையும் இழந்து ஒரு காய்ந்த உலர்ந்த வாழ்வுக்கு உட்படுகிறோம்.

எனவே நம்முடைய தேவைகள் சந்திக்கப்பட, சுதந்திரம் காக்கப்பட நாம் நம்மை சிருஷ்டித்த சிருஷ்டிகருடன் இணைந்தும் நிலைத்தும் இருக்க வேண்டும். அப்போது அநேக நன்மைகள் அடைந்து சந்தோஷமாக வாழமுடியும்.

தி.தேவபாலன்-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.402



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 07.04.2001

கவிதைப் போட்டி இல.402
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.399



### பரிசுக்குரிய கவிதை

**நியாயமா!**

சிலைகளுக்காக
அழுகிறார்கள்!
உயிர்களுக்காக
சிந்திக்கிறார்களா??

எஸ்.பி.பாலமுருகன்-
பதுளை.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### உன் வாழ்வு..

எத்தனை இழப்புக்களையும்
தாங்கித்தானேயாக வேண்டும்...
மனிதனாய் இம்மண்ணில் வந்து
ஜனனித்த பாவத்திற்கு,
நீ துயருற்று வாடினும்
உன் வாழ்வு உன்கையில்..!

சிறிதர்-திக்கம்.

### நான் பிறந்த மண்

அகதிகள் என்று அண்டை தேசம் சென்றும்
கண்ட பயன் ஒன்றும் இல்லை.
நாடு கடத்தப்பட்டதால்.
சொந்த மண்ணில் சோகங்கள்பல இருந்தும்
நாம் பிறந்த மண் இது
தலை நிமிர்ந்து தைரியமாய் வாழலாம் மானிடா!

அலி மூஸா-நிந்தவூர்-03.

### பாதிப்பு

உரிமைகள் இழந்தால்
உலகியல் வாழ்க்கை
திறந்த வெளியில்
சிறைச் சாலை.

க. நாகராசா-
கோண்டாவில்.

### பூகம்பம்

என்னையும் என் நிழலையும்
தாங்கும் பூமியே...
உன் அதிர்ச்சியினால்
தொலைந்துபோன என்
முகவரியைத் தேடுகின்றேன்.

சி.அபிராமி-கல்கிசை.

### சுரக்குமா?

தோண்டினால் பாலையிலும்
நீர் சுரக்கும்-சுரக்காதே
அமைதிநீர் இம்மண்ணில்
இனவாதம் பேயாட்டம்
ஆடும் வரை!

அ.சந்தியாகோ-கண்டி.

### இழப்பு

இயற்கையின்
சீற்றத்தால்
இழந்துவிட்டேன்
என் உறவுகளை
மட்டுமல்ல,
என் உணர்ச்சிகளையும்.

பெரோஸ்-ஆரையம்பதி.

### சுமை

போரின் சுமையைப்
பொறுத்துக் கொண்டேன்
வாழ்க்கைச் சுமையைப்
பழகிக் கொண்டேன்
என்னுயிரே எனக்கின்று
சுமையானதால்
இருந்து விட்டேன்!

மெ.மரியதாஸ்-பண்டாரவளை.

### பூரிப்பு...

துளிகூட நீரில்லாது
வரண்டுபோன நிலத்திலே-என்
கடந்தகால நினைவுகள்
கண்ணீராய் உருவெடுத்து
சிந்தும் நீரதில் சிலிர்க்கும் இப்பூமி
எப்போது பூரிக்கும்?

புங்கை நதி-நீர்கொழும்பு.

### சிந்தித்துப் பார்!

கோடை வெயிலின்
உக்கிரம் தணிந்தபின்
தேடும்படலம்
தொடர்ந்திடலாமே!
ஓ..மனிதா..
பாயில்படுத்து நோயில் வீழ்ந்தால்
தாயைப் போல் உனைக்காக்க
தரணியிலே எவருண்டு?

சஹறுல் எம்.சலாஹுடீன்-உக்குவளை.

### எதிர்காலம்

உறவில் சொந்தமென்று
பெயருக்கு எவருமில்லை.
அருவருப்பு, உடை அணிந்தும்
நெஞ்சிலோர் அழுக்குமில்லை
கருவிலே உதிக்கும் போதே
அகதி என்று அறியவில்லை
தெருவிலே குந்தியிருந்து
தேடுகிறோம் எதிர்காலம்!


பேபி அந்தோனி அம்மா-சீனக்குடா.

### கா(பா)த்திருப்பு

இருபக்கப்பேச்சுக்கள்
சுமுகமாய் வந்திட்டால்
இடம் பெயர வேண்டிய
அவசியம் இனியில்லை!!

லிங்கராஜா கிரிசாந்தி-மட்டக்களப்பு.

## அறிவுப் பசி தீர்க்கிறது



'முரசு' குடும்பத்தவர்க்கு, நேற்றுப் போல் எண்ணம், முதல் முரசை வாங்கிப் பரவசமடைந்த நாள், முதல் இதழிலேயே மனம் முழுவதையும் தன்பால் முரசு என்னை ஆட்கொண்டது. இன்று காலை 400வது இதழை வாங்கியபோது முதல் இதழ் வாங்கிய அனுபவம். 400 இதழ்களும் கலைக் களஞ்சியமாக என்னுடன் வாழ்கின்றன.

மேலும் 400வது இதழில் எக்ஸ்ரேரிப்போர்டில் நரன் அவர்கள் எனது மூத்த தலைமுறையிரை அவர்களது போராட்ட வாழ்வை உண்மையாகக் கூறியது; எனக்கு தெரியாத பல விடயங்களை அறிய முடிந்தது. இன்றைய இளையத்தலைமுறை வடக்கு-கிழக்கு தமிழர்கள் எங்களுடன் நட்புறவாடுவது என்னைப் பொறுத்தவரையில் சந்தோஷமான விடயம். முரசும் எங்களை அரவணைப்பது எங்கள் வாழ்விற்கு விடிவெள்ளியாகும்.

எங்களை இந்திய தமிழர்கள் எனக்கூற எவருக்கும் எதுவித உரிமையுமில்லை. ஏனென்றால் இந்தியா என்ற பெரிய நாடும், அங்குள்ள ஆறு கோடி தமிழர்களும் எங்களை 'சிலோன்காரன்' என ஏளனமாகப் பார்ப்பது உலகறிந்த உண்மை. எங்கள் மக்களது வாழ்வு உயர்ச்சி பெற முரசு மென்மேலும் பங்களிக்க வேண்டுமென்பது என் நியாயமான விருப்பம்.

அரசியல் பற்றி ஆழமான அறிவில்லாத எனக்கு 'முரசு'தான் பல விடயங்களை உணர்த்துகின்றது. இலங்கையிலுள்ள அனைத்து தமிழ் மக்களின் பிரச்சனைகள் பற்றி ஐரோப்பிய, மேற்கு நாடுகள் மேம்போக்காக நோக்குவது வேதனைக் குரிய விடயம். ஏன் எமது அயல் நாடான இந்தியாவே இரட்டை வேஷம் போடுவதுதான் புதியாத புதிராகவுள்ளது.

உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு அறிவுப் பசி, சிந்தனை என்பவற்றுக்கு தீனி போட்டு வளர்க்கும் முரசு அடுத்த தலைமுறையினருக்கும் கலைக்களஞ்சியமாக இருக்கும் என்ற அதீத நம்பிக்கையுடன், சகலகட்டுரை ஆசிரியர்கள், ஆசிரியர் அனைவருக்கு என் இதயபூர்வமான நன்றிகள், வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகும் வண்ணம்...

ஆர்.கார்த்திகேயன்-குருந்துவத்தை.

# வாசக[ர்] சாலை

நண்பா முரசே!
நீ அருமை, உன் இருபது பக்கமும் பெருமை. அதிலும் என்னை கவர்வது முரசம், கவிதைப் போட்டி, பாப்பா முரசு, இலக்கிய நயம், ஸ்போர்ட்ஸ், நில்-கவனி-முன்னேறு.
அற்புதமான படைப்பே!
அற்புதனின் ஆசியுடன் வலம் வருவாயாக. தொடரட்டும் உன் பணி. மொத்தத்தில் நீ என் வார நண்பன்.

ஜெ.ஜெயதாஸ்-
பெரிய கல்லாறு-01.

### மலையக நிலை

எங்கள் மலையக மக்களின் சோக வாழ்க்கையை கடந்த வார தினமுரசில் படம் போட்டு காட்டியிருந்தீர்கள். இந்திய மண்ணிலிருந்து கூலிகளாக அழைத்து வரப்பட்ட நாள் முதல் இன்று வரை விதவிதமான மனிதர்களால் அவர்களின் பதவி பட்டங்களால் எங்கள் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்தனர்-வருகின்றனர். தொழிற்சங்கம் என்ற பெயரில் எவ்வளவோ அநியாயங்களும், அட்டூழியங்களும் ஏமாற்று வித்தைகளும் இன்றும் இடம் பெற்று வருகின்றன.

எங்கள் மக்களின் சோக வாழ்க்கையை எடுத்துக்கூறும் பத்துக்கும் மேற்பட்ட சிறு கதைகளை தினமுரசில் எழுதியுள்ளேன். தொடர்ந்தும் எழுதுவேன்.

எங்கள் மக்களின் சோக வாழ்க்கை எப்படி எவ்வாறு முடியுமோ இறைவனுக்குத்தான் வெளிச்சம். ஏமாற்றுபவர்கள் இருக்கும்வரை எங்கள் மக்களின் வாழ்க்கையும், ஏமாந்துக்கொண்டுதான் வளர்ந்து மரமாக வேண்டிய தேயிலைமரம், தேயிலைச் செடியாக என்றுமே வளர்வது போல ஒரு கோமாளித்தனமான தொலைந்து போன வாழ்வாகவே இருக்கும்.

க.பொ.புஷ்பராஜா-
சிலாபம்.

வசந்தத்தில் ஒரு நாள் வியாழக்கிழமையானதும் உன்னை எதிர்பார்த்தேன். நீ வந்தாய் என் இதயத்தில் புகுந்தாய். புரட்டினேன் புரட்டினேன். அதில் இடைவிடாத எழுத்துடன் கண்ணில் தோன்றும் வர்ணக்கலரும் என்னில் தோன்றும் மர்மக் கதையும் சொல்லில் தோன்றும் தேன்கவிதையும் நில் கவனி முன்னேறு என்று சொல்லி, முன்னேற வைத்த தினமுரசே வாழ்க புகழுடன் வாழ்க.

மாகியப்பிட்டி-யூட்.

என் அன்பின் முரசே,
நீ தாங்கி வரும் பொது விடயங்கள், கவிதைகள், அரசியல் தொடர்கள், ஸ்போர்ட்ஸ் அனைத்தும் சூப்பர். உலகில் பல பாகங்களிலும் இருந்து செய்திகள், தகவல்களை அள்ளித் தரும் முரசு பாராட்டப்பட வேண்டியது. இனியும் இன்பமுடன் இதயங்களை இதமாக்கும் ஆக்கங்களுடன் மிளிர வேண்டுகிறேன். முரசு மென்மேலும் சிறந்து விளங்க நல்லாசிகள் என்றும்.

எம்.எம்.மஸீஹுஸ் ஸமான்-
ஹொரவபொத்தான.

எனது அபிமான
தினமுரசே!
நீ.. வியாழன் தோறும்
வலம் வருகிறாய். நீ..
சுமந்து வரும் சிந்தியா
பதில்கள், சிறுகதை,
தேன்கிண்ணம், சினிமா
பகுதிகள் என அத்தனை
அம்சங்களும்
அருமையிலும் அருமை.

எஸ்.சிவா.19 டின்சின்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்-
உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

# பிரித்தானியாவைப்போல் விடுதலைப் புலிகளை ஃபிரான்சும்

# தடைசெய்ய வேண்டுமென ஜனாதிபதி கோரவிருக்கிறார்!

இலங்கை இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஃபிரான்ஸ் நாட்டின் உதவியையும் நாடிச் சென்றிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கும் ஜனாதிபதி அண்மையில் தான் சென்று திரும்பினார். அந்த நாடுகளிலும் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை அந்நாட்டுத் தலைவர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு வந்திருந்தார்.

அந்தப் பயணத்தின்போது ஃபிரான்ஸ் நாட்டுக்கு ஜனாதிபதி செல்ல முடியாது இருந்தமையினால் இப்போது அவர் அங்கு சென்றுள்ளார்.

இங்கிலாந்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதையடுத்து ஏனைய ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளை விஸ்தரிக்க முற்படலாமென இலங்கை அரசு கருதுகின்றது. இதன் காரணமாகவே அந்நாடுகளின் தலைமைப் பீடத்தை எச்சரிக்கவும் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பது தொடர்பாக விளக்கமளிக்கவும் ஜனாதிபதி சென்றிருந்தார்.

பிரித்தானியாவில் இலண்டன் மாநகரில் 'ஈழம் ஹவுஸ்' என்ற புலிகளின் தலைமையகம் அமைந்திருந்தபோதிலும் ஃபிரான்ஸ் நாட்டிலேயே அவர்களது நடவடிக்கைகள் விரிவான முறையில் நடைபெற்று வருகின்றன. ஃபிரான்சை மையமாக வைத்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் விடுதலைப் புலிகள் அமைப்பினர் தமது தொடர்புகளை விரிவுபடுத்தி வந்துள்ளனர்.

எனவே ஃபிரான்ஸ் நாடும் பிரித்தானியாவைப் பின்பற்றி புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை தடுக்க முன்வர வேண்டுமென ஜனாதிபதி தமது ஃபிரான்ஸ் விஜயத்தின் போது அந்நாட்டுத் தலைவர்களிடம் கோரிக்கை விடுவாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி சந்திரிக்கா பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் போது இலங்கை அரசின் தரப்பிலிருந்து முன்வைக்கப்படவிருக்கும் தீர்வுத் திட்டங்கள் பற்றியும் ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களுக்கு விளக்கமளித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ■

## திருக்கோவில் அகதிகள் 12 ஆண்டுகளின்பின் மீளக் குடியமர்வு

(நமது நிருபர்)

கிழக்கில் கடந்த 12 வருடங்களின் முன்னர் ஏற்பட்ட வன்செயல்களின் போது இடம் பெயர்ந்துள்ள அகதிகள் மீண்டும் தத்தமது இடங்களில் மீளக் குடியமர்த்தப் படவுள்ளார்கள்.

அறுகம்பை, சாகாமம், கஞ்சிகுடிச்ச ஆறு போன்ற பகுதிகளிலிருந்து சுமார் 1200 குடும்பங்கள் இடம் பெயர்ந்து கடந்த 12 வருடங்களாக திருக்கோவிலில் வாழ்கிறார்கள்.

'எகெட்' எனப்படும் அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் அகதிகளைக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகக் கூறப்படுகிறது. ■

## விபுலாநந்த அடிகளார் 109வது பிறந்ததினவிழா

(காரைதீவு நிருபர்)

காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்தினர் சுவாமி விபுலாநந்தரின் 109 வது பிறந்த தினத்தை எதிர்வரும் 29 ஆம் திகதி விபுலாநந்த மணி மண்டபத்தில், உப தலைவர் இ.தங்கராஜா தலைமையில் நடாத்தவுள்ளனர்.

அன்று காலை அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தலுடன் ஆரம்பமாகும் பிறந்த தின விழாவில் விசேட ஆராதனைகள், பூஜைகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெறவுள்ளன.

இ.கி.மி.ஆண்கள் பாடசாலை மாணவரின் 'வெள்ளைநிற மல்லிகையோ' என்ற விசேட பாபாடும் நிகழ்ச்சியும் சாரதா சிறுமியர் இல்ல மாணவியரின் விபுல சங்கீர்த்தனையும் இடம் பெறவுள்ளன.

## புலிகளின் பிராந்தியத் தலைவர் கருணா கிழக்குக்கு வந்துள்ளார்!

(நமது நிருபர்)

தமக்குக் கிடைத்திருக்கும் புலனாய்வுத் தகவல் மூலம் கிழக்குப் பகுதிக்கு மீண்டும் புலிகளின் பிராந்தியத் தலைவர்களில் ஒருவரான கருணா அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது என்று படையினர் கூறுகின்றனர்.

தாம் ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனப் படுத்தியுள்ள போர் ஓய்வுக் காலத்தின்போது யுத்த வியூகங்களை வகுப்பதற்காகவே கருணா கிழக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

"எல்லைப் பகுதிகளில் புலிகள் தமது நிலைகளைப் பலப்படுத்துகின்றனர் என்ற தகவல் பொதுமக்கள் மூலம் எமக்கு நாளுக்கு நாள் எட்டுகிறது.

எனினும் புலிகளின் எந்த விதமான தாக்குதலையும் முறியடிக்கக் கூடிய நிலையில் படையினர் இருக்கின்றனர்" என்று படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## அரசாங்க அதிகாரிகளுக்கு படையினரின் உத்தரவு

விடுதலைப் புலிகளின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க உயரதிகாரிகள் சிலர் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அடிக்கடி சென்றுவருவதாக தகவல்கள் வெளியானதையடுத்து எதிர்காலத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு செல்லும் முன்னர் இராணுவ தரப்பின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிகாரிகளின் பாதுகாப்பு கருதியே இத்தகையதொரு உத்தரவை பிறப்பித்துள்ளதாக இராணுவ உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அரசாங்க உயரதிகாரிகளுடன் இது விடயம் குறித்து தாம் கலந்துரையாட உள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## முறைசாராக் கல்வி ஆசிரியர்களுக்கான கட்டணங்கள் உயர்வு

(காரைதீவு நிருபர்)

முறைசாராக் கல்வி தொழில் நுட்பப் பாட நெறிகளுக்கான போதனாசிரியர் கட்டணங்களும் அதிபர்களின் மேற்பார்வைக் கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் முறைசாரா தொடர் விசேட கல்விக்கான கல்விப் பணிப்பாளர் கே.சமரசிங்க தெரிவித்தார்.

போதனாசிரியர் ஒருவருக்கு அ வகைப் பாடநெறியாயின் 03 மணித்தியாலம் கொண்ட 14 அமர்வுகளுக்கு 2100 ரூபாவும் ஆ வகைப் பாடநெறியாயின் 03 மணித்தியாலம் கொண்ட 10 அமர்வுகளுக்கு 1200 ரூபாவும், விசேட பாடநெறியாயின் 03 மணித்தியாலம் கொண்ட 14 அமர்வுகளுக்கு 2500 ரூபாவும் வழங்கப்படும்.

அதிபர் ஒருவருக்கு மேற்பார்வைக் கொடுப்பனவாக மாதமொன்றுக்கு ஒரு பாடநெறி நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் 200 ரூபாவும் இரண்டு பாடநெறிகள் அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் 300 ரூபாவும், மூன்று பாடநெறி அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் அதிபரின் உதவியாளருக்கு 200 ரூபாவும் வழங்கப்படும்.

அதேவேளை எழுத்தறிவு வகுப்பு கற்றல் நடவடிக்கை நிலையங்கள் மதவழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்ட முறைசாராக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பொறுப்பான போதனாசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கான மாதாந்த கொடுப்பனவுகளும் உயர்த்தப்பட்டுள்ளன.

## கிழக்கில் புனர்வாழ்வு முகாம் அமைக்க படைத்தரப்பு யோசனை

கிழக்கு மாகாணத்தில் படையினரிடம் சரணடையும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக அந்தப் பகுதியில் புனர்வாழ்வு முகாம் ஒன்றை அமைக்குமாறு படைத்தரப்பு அரசாங்கத்தை கோரியுள்ளதாக தெரியவருகின்றது.

புனர்வாழ்வு முகாம்கள் யாழ்ப்பாணத்திலும் வேறுசில தூர இடங்களிலும் அமையப்பெற்றிருப்பதால், கிழக்கு மாகாணத்தில் படையினரிடம் சரணடைபவர்களை அங்கு கொண்டு செல்வதும் அத்தகையவர்களை அவர்களது பெற்றோர்கள் வந்து பார்வையிடுவதிலும் பல்வேறு பிரச்சனைகள் எதிர்நோக்கப்படுவதாக படையினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் புனர்வாழ்வு முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதன் காரணமாக பண்டாரவளை பிந்துனுவெவயில் நடைபெற்றது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடை பெறாமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கத்திலுமே இத்தகையதொரு ஆலோசனை அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டிருப்பதாக அறியக்கிடக்கின்றது.

## அரசாங்க அதிகாரிகளுக்கு புலிகளின் கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்து கருத்தரங்குகளை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது

கிராம சேவகர்கள், சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோரை ஒன்று திரட்டி நடாத்தப்படும் இந்தக் கருத்தரங்குகளின்போது யுத்தம் தொடர்ந்து நடைபெறுமானால் தமிழீழம் சாத்தியமாகுமா? என்ற அடிப்படையிலான கருத்துரைகள் வழங்கப்படுவதாக அறியக் கிடைக்கின்றது.

கட்டுப்பாடற்ற பகுதிகளான கொக்கட்டிச்சோலை, போரதீவு, கரடியனாறு, வாகரை, கதிரவெளி போன்ற இடங்களில் கடந்த இருவாரகாலத்தில் பல கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பிரதேச அரசியல் பிரிவின் பொறுப்பாளர் விசு, டாக்டர் அடம்ஸ், இலங்கேஸ்வர், ரெஜி உட்பட புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் இந்தக் கருத்தரங்குகளில் உரை நிகழ்த்தியுள்ளனர். ●

## ஜனாதிபதி கொலை முயற்சி; சந்தேக நபர்கள் விடுதலை

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கொழும்பு மாநகரசபை மைதானத்தில் வைத்து ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கொலை செய்ய முயற்சி செய்த தற்கொலையாளியின் சகோதரி என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவரும் வேறு இருவரும் உயர்நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தாளக்குடாவைச் சேர்ந்த கங்கேஸ்வரி, அவரது தாயாரான கந்தப்பன் மாரிமுத்து (வயது 70) மற்றும் கங்கேஸ்வரியின் கைக்குழந்தை ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

தாம் தடுத்து வைக்கப்பட்டிருப்பது சட்டவிரோதமானது என்றும் இதனால் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் கூறி மாணிக்கம் கங்கேஸ்வரி சமர்ப்பித்த மனுவை உயர்நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்த போது வழக்கை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல போதுமான சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபரினால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

தற்கொலையாளியின் இரத்தமும் தமது இரத்தமும் பரிசோதனை செய்யப்பட்ட போது இரண்டிற்கும் இடையில் எவ்வித மரபணுத் தொடர்பும் இருக்கவில்லையென மனுதாரரான கங்கேஷ்வரி சார்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. ■

## ஒலுவில் துறைமுக திட்டத்துக்கு முற்றுப்புள்ளி

மறைந்த அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பினால் ஆரம்பிக்கப்பட்ட ஒலுவில் துறைமுகத்தின் நிர்மாணப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படமாட்டாது என்று துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரொனி டி மெல் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ரொனி டி மெல் கிழக்கிலங்கையில் திருகோணமலைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவிருப்பதனால் ஒலுவில் துறைமுகம் அவசியமற்றதென கூறியுள்ளார்.

ஒலுவில் துறைமுகத்தின் பூர்வாங்க நிர்மாணப் பணிகளுக்கு பெருந்தொகைப் பணம் வீணடிக்கப்பட்டிருப்பதாக சிஹல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஒலுவிலில் துறைமுகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாகவும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச், செல்லத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க விருப்பதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

இது விடயம் குறித்து ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்த திட்டமிட்டிருப்பதாக அமைச்சர் ரவூப் ஹகீம் தெரிவித்துள்ளார்.

## யாழ் நகரில் புதிய நீதிமன்றம்

யாழ் நகரில் சகல வசதிகளுடனான புதிய நீதிமன்றக் கட்டடம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் நீதி அமைச்சினால் செயற்படுத்தப்படும் நீதிமன்ற மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் நிறுவப்பட விருக்கும் இந்த கட்டடத் தொகுதிக்கு 5 கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

உத்தேச திட்டத்தின் கீழ் மேல் நீதிமன்றம், மாவட்டநீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் உள்ளிட்ட பூரணமான நீதிமன்ற கட்டடத் தொகுதியொன்று அடுத்துவரும் 2 வருட காலத்துக்குள் கட்டி முடிக்கப்பட வுள்ளது.

இது தொடர்பாக ஆராயவென நீதியமைச்சின் உயரதிகாரிகள் குழுவொன்று கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுள்ளது. ■

## விமானத்தாக்குதலை கண்டித்து புதுக்குடியிருப்பில் ஆர்ப்பாட்டம்

வன்னியில் கடந்த சில வாரங்களாக விமானப் படையினர் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான குண்டுத்தாக்குதலை கண்டித்து முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி, புதுக்குடியிருப்பு பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

திங்கட்கிழமை காலை புதுக்குடியிருப்பு வெகுஜன அமைப்பினால் புதுக்குடியிருப்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி நண்பகல் வரை தொடர்ந்தது.

இரணைப்பாலை, துர்காவீதி, சிவன் கோவிலடி ஆகிய மூன்று இடங்களில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணிகள் குழந்தை இயேசு திருப்பதியில் முடிவடைந்தன.

பேரணி முடிவில் ஐ.நா.செயலாளர் நாயகத்திற்கும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக குமாரதுங்காவிற்கும் அனுப்பி வைப்பதற்கான மகஜர்கள் இரண்டை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் எஸ்.சுந்தரத்திடம் மக்கள் அமைப்பினர் கையளித்தார்கள்.

அன்றைய தினம் மல்லாவியிலும் இதே போன்றதொரு ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சில உதவி நிறுவனங்கள் மீது படையினர் அதிருப்தி

கிழக்கு மாகாணத்தில் செயற்பட்டு வரும் அரசாங்க சார்பற்ற உதவி நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி கொண்டுள்ள படை வட்டாரங்கள் இத்தகைய சில நிறுவனங்கள்மீது கட்டுப்பாடுகளை இறுக்கமாக்கத் திட்டமிட்டுள்ளன.

இது குறித்து படை அதிகாரிகள் தெரிவிக்கையில்,

மக்களின் சுமுகமான வாழ்வை சீர்குலைத்து உயிர்களுக்கும் உடமைகளுக்கும் அழிவை ஏற்படுத்துவோர் மீது நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றது.

அச்சந்தர்ப்பத்தில் தங்களை மக்களின் உதவி நிறுவனங்கள் எனக் காட்டிக் கொள்ளும் அமைப்புக்கள், நாம் மாற்று நடவடிக்கை எடுக்கும் நபர்கள் சார்பாகப் பரிந்து பேசி அவர்களைக் காப்பாற்றுகின்றன.

குறிப்பிட்ட நபர்களை அப்பாவிகள் எனக் காட்டி வாதிடுகின்றனர்.

இதனால் சமூக விரோதிகளைத் தண்டிப்பதில் இத்தகைய பக்கச் சார்பான நிறுவனங்களின் செயற்பாட்டினால் தடைகள் ஏற்படுகின்றன.

அத்துடன் கிழக்கில் இனமுரண்பாடு இருப்பதாகக் காட்டி சில நிறுவனங்கள் பகைமையை வளர்க்கின்றன என்று படையினர் குற்றஞ் சாட்டுகின்றனர்.

படையினரின் குற்றச்சாட்டுகள் ஒரு புறமிருக்க, பொதுமக்களும் சில குறிப்பிட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி கொண்டுள்ளனர். ■

## விபுலாநந்தர் நினைவுப் பேருரை

### பேராசிரியர் நுஃமான் வழங்கினார்

சுவாமி விபுலாநந்தர் நினைவுப் பேருரைத் தொடரில் ஆறாவது பேருரையை இம்முறை கலாநிதி எம்.ஏ.நுஃமான் நிகழ்த்தினார்.

மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் மார்ச் 25ம் திகதியன்று பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.ஏ.நுஃமான் 'மொழியியலும் இலக்கியத்திறனாய்வும்' என்ற தொனிப் பொருளில் உரையாற்றினார். கிழக்குப் பல்கலைக்கழக கலை பண்பாட்டுத்துறையினர் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். ■

## ஓலைக் கொட்டில்களாக கல்குடா பாடசாலைகள்

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவும் அப்பகுதியில் மாணவர்களின் கல்வி நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கல்வி வலயத்தில் உள்ள 96 பாடசாலைகளில் 17 பாடசாலைகள் முற்றிலும் ஓலைக் கொட்டில்களாக இருப்பதாகவும், மேலும் 12 பாடசாலைகளில் அரைப் பங்குக்கும் மேல் ஓலையால் அமைக்கப்பட்டவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைகாலங்களில் நிலைமை மிக மோசமாக இருக்கும் எனவும் மலசலகூட வசதிகளோ போதிய தளபாட வசதிகளோ அற்ற நிலையிலேயே இந்தப் பாடசாலைகள் கடந்த பல வருடங்களாக செயற்பட்டு வருகின்றன.

இது குறித்து இந்தப் பகுதி மக்கள் பலதடவை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தபோதும் எந்தவித பலனும் கிட்டவில்லை என்று விசனம் தெரிவிக்கின்றனர். ●

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 06 1931 — உதிர்வு 15 03 2000

**திருமதி: அன்னபூரணம் பேரம்பலம்-(மல்லாகம்)**

**திதி: 04.04.2001**

அன்பிற்கு இலக்கணமாய், ஆதரவிற்கு அணிகலனாய், பாசத்திற்கு உறைவிடமாய், எம்மைப் பண்போடும், பாசத்தோடும் வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே!

அறந்திற்கோர் அணிகலனாய் விளங்கிய அன்னையே!

ஓராண்டு சென்றதுவே!

உங்களில் பிரிவாற்றாத ஆருயிர் பதியும், பாசத்தால் அனைத்து, அறிவூட்டி வளர்த்த உமது பிள்ளைகளாகிய நாமும், உங்களின் பிரிவினை ஆற்றாது துயருறுகிறோம்.

ஆண்டொன்று மறைந்தாலும், உங்களின் நினைவலைகள் எம் நெஞ்சங்களை விட்டகலாது. உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


**என்றும் உங்களின் நினைவால் துயருறும்,**

கணவர்: நா.பேரம்பலம் (கொழும்பு) புதல்வர்கள்: சதீஸ்குமார் சந்திரகுமார் (லண்டன்), புதல்வி: சாருலதா (லண்டன்).

தகவல்: நா.பேரம்பலம், 212, பிரதானவீதி, கொழும்பு-11.

**குறிப்பு: அன்னாரின் திதிக் கிரிகைகள் லண்டனில் புதல்வர்கள், புதல்வி இல்லத்தில் நடைபெறும்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*மலர்வு 14.12.1958* — *உதிர்வு 30.03.2000*


**திரு.யோசேப் ஞானறூபன் (பெரியதம்பி)**

(சக்கோட்டை, அல்வாய் மேற்கு)

எமது நினைவாலயத்தில் நிலையாய் நிலைத்திட்ட
அன்பின் தந்தையே
உம் நலன்பேணாது எமை
உமது அன்பெல்லைக்குள் அரவணைத்து
நாம் புவியில் சிறப்பாய் நிலைத்திட
வழிசமைத்தீரே-இன்று ஓராண்டாய்
உங்கள் பாசத்திற்காய் தவிக்கின்றோம்.
தந்தையே உமக்கு நிகர் யார் எமக்கு?
எமது வாழ்நாள் உங்கள் நினைவுடன்.
தங்கள் ஆன்மா இறையடிசேர
இருகரம் கூப்பி இறையாசிவேண்டும்...
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.
தகவல்: பிறேமன் (லண்டன்) 0044796 8822080.

## நீங்காத நினைவஞ்சலி

2ம் ஆண்டு ★ 12ம் ஆண்டு



அமரர் அந்தோனி சந்தியோகு
முன்னாள் கிராமசபைத் தலைவர்
உயிலங்குளம்.



அமரர் சந்தியோகு ஜோப் (ரவி)
உயிலங்குளம்


மலர்வு-உதிர்வு
30.08.1939 -23.03.1999

மலர்வு-உதிர்வு
06.01.1964 - 16.03.1989

தந்தையும் தனயனுமாய் தரணியில் எமையே
தவிக்கவே விட்டுச் சென்றீர். தரித்திறோம்
இங்குநாமும்
தற்பரனார் பாதமதே தஞ்சமென
வந்திடுவோம்.
உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.
'கிங்ஹவுஸ்' உயிலங்குளம், மன்னார்.

தகவல்: மனோ-வசி-யேசு
14, THE CLOSE P.R.9.8B-S, SOUTHPORT. U.K.

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 01 1979 — உதிர்வு 16 03 2000

தெல்தோட்டம் கலஹாவைச்சேர்ந்த
செல்வன் நவரட்ணம் ஜோஸப் பெர்னாந்து

**திதி: ஏகாதசி 04.04.2001**

அகாலமாய்நீ மறைந்து ஆண்டொன்று ஆனதைய்யா அன்னையின் மடி மீதில் அமலனாய் சென்றாயே கண்மணிபோல் காத்து வந்தபெரியம்மா பெரியப்பாவை கண்ணீரில் கலங்க வைத்து காலனிடம் சென்றதேனோ? பாசமுள்ள நண்பர்களை பாதியிலே தவிக்க விட்டு நேசமான சகோதரிகளை நிர்க்கதியில் நீந்தவிட்டு எங்கேயடா சென்றாய் எங்கள் குலக்கொழுந்தே! நெஞ்சிலே நீநிறைப்பாய் நினைவினில் நீமலர்வாய் நெடுமாலின் சந்நதியில் உன் தீபம் ஒளி வீசும். உன்னிடம் வருமட்டும் உன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நித்தமும் உன் நினைவுடன் ஏங்கும் அன்பு அம்மா திருமதி அம்பிகா ஜோஸப் பெர்னாந்து, வெள்ளத்துரை பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், மைத்துனர், மருமகன், நண்பர்கள், உறவினர்கள் அன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: திரு மதி அம்பிகா ஜோஸப், தெல்தோட்டம், கலஹா.


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஏப்ரில் 19 முதல் 25 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

**கல்முனையில் மார்ச் 31, ஏப்ரில் 01 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஏப்ரில் 07, 08 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா.T.P.024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## எக்ஸ் ஒயில்




எக்ஸ் ஒயில் கிடைக்காத பகுதிகளுக்கு விற்பனையாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD.**

14, Ground Floor, Welikada Plaza, Rajagiriya, Sri Lanka.
Tel: 888214, Fax: 874621, 682984 E-Mail: MAXX@dynaweb.lk

## WHITE HOUSE

(GUEST HOUSE)

தலைநகரின் அமைதியான சூழலில் பாதுகாப்புடன் கூடிய அனைத்து வசதிகளுடனும்

**'வைட் ஹவுஸ்'**

- உங்கள் மனம் கவரும், சகல வசதிகளையும் கொண்ட குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள்.
- புதுமணவாழ்வில் காலடி எடுத்து வைக்கும் தம்பதிகளுக்கான அறைகள்.
- உங்களுக்குத் தேவையான உணவு வகைகள், குடிபான வகைகள் உங்கள் விருப்பப்படி வழங்கப்படும்.
- பாதுகாப்புடன் வாகனம் நிறுத்தி வைப்பதற்கான வசதி, தொலைபேசி வசதிகள்.

இல. 140/1 மகுமாரகே மாவத்தை. கிராண்ட்பாஸ், கொழும்பு-14.
☎ 446773

550/= ரூபா முதல்...

(அசோகா திரையரங்கிற்கு முன்னால், ஹட்டன் நஷனல் வங்கிக்கு அருகில் உள்ளது வைட் ஹவுஸ் கட்டடம்.)

## வசிய வைத்தியம்

MEDITATION YOGA POWER (SCIENCES) & HOMOEOPATHY AYURVEDHA ACUPUNCTURE MEDICAL RESEARCH

1945ம் ஆண்டு ஆரம்பித்த புனித சேவை (GOVT APPROVED) மட்டக்களப்பு-மலையாள-மாந்திரீக வசிய மருத்துவத்தினால், காதல் பிரச்சனைகளைத் தீர்த்து விரும்பியவர்களை சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்துடன திருமணம் செய்ய, கணவன்-மனைவி கருத்துவேறுபாடுகள் சந்தேகங்களை தீர்த்து பிரியாமலிருக்க, பிரிந்தவர்கள் வெறுப்பவர்கள், வேண்டியவர்கள் வந்து உறவாக, தகாத ஆண்-பெண் உறவைபோதை வஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராதநோய், எதிரி தொல்லைகளிலிருந்து விடுபட-கண்ணூறு நாவூறு, சர்வதோஷ நிவர்த்தி சாந்தி பரிகாரங்கள் செய்ய, எதுதுன்பங்களும் அணுகாமல் உடல் வீடு வளவு வியாபார இடங்களைக் காவல்செய்ய, திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், பொருளாதாரம், வெளிநாட்டுப்பிரயாணம் வேறுகாரிய வெற்றிக்கு "சகலகாரிய சித்தி இராயுவசியங்கள்" செய்துகொள்ள தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள், மனநோய், மருந்தீடு, பயம், பலவீனம், தாழ்வு மனப்பான்மை, கவலை, டென்ஷன, இவைகளுக்கு சிறப்புச் சிகிச்சைபெற மட்டக்களப்பு கல்லடி குருசக்தி நிலையத்துக்கு (இந்தியன வைத்தியசாலை) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் தபால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விஷேட தபாலில் எல்லா மதத்தினர்களுக்குமேற்ற தீங்கற்ற தெய்வீக புனித பரிகாரப்பொருட்களைப் பெற்று நியாயமான கோரிக்கைகளை உடன்நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

சுகாதார அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட பதிவு இல: 061 ஹோமியோபதி, அக்குப்பங்சர், சித்த ஆயுர்வேத, மாந்திரீக, மனோவசிய, யோகசிகிச்சையாளர்

**டாக்டர்-"மந்திரயோகி"**

R.P.H.M-D.Ac-(இலங்கை) P.I.S.M, (இந்தியா)
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)
உள்நாட்டு தொ.பே: 065-24872 வெளிநாட்டுதொ.பே: 0094 65 2872



(YOGA) MY GURU

## மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ. பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

**உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka.com/drpksami.

## மலிவு விற்பனை

Hi FOODS R.N.K. Products

**RNK மாக்கற்றிங்** (சுப்பர் மார்க்கட்)

**STAUFACHERSTRASSE 141, 8004 Zürich.**

ஸ்தாபனத்தில் மீன், மரக்கறி, மளிகைப் பொருட்கள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை மலிவு விலைகளில் கிடைக்கும்

TEL: 01-240 16 86
078 666 5277.
Fax: 01-322 2755

சில உதாரணங்கள் — மீன் 1Kg 6/90 CHF — மரக்கறி 1Kg 3/90 CHF

RNK மாக்கற்றிங் திறந்திருக்கும் நேரங்கள்; திங்கள்-வெள்ளி காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை
சனி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# யுத்தம் தந்த பிட்ஷா பாத்திரம்

# பட்ஜெட்

**நரன்**

இலங்கை அரசாங்கம் மிகக் கடினமான ஒரு காரியத்தை ஒப்பேற்றியாகவேண்டிய பெரும் பிரயத்தனமொன்றில் இறங்கியிருக்கிறது.

அதுதான் அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜெட்டைத் தயாரித்து நிறைவேற்றும் காரியமாகும்.

இப்போது அது தனது நிதி நிலவரத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

அந்த நிதி நிலவரத்தை ஈட்டிக் கொண்டதற்கான காரணங்களை நியாயப்படுத்த வேண்டும்.

அந்த நிதி நிலவரத்தை வைத்துக் கொண்டு அடுத்த நிதியாண்டுகாலத்தில் எவ்வாறு தனது அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியுமென நம்பிக்கையளிக்கக்கூடிய விதத்தில் விளக்க வேண்டும்.

அரசாங்கத்தின் வருவாய்க்கான மார்க்கங்களையும் அத்தகைய வருவாய்களின் மதிப்பீடுகளையும் தெரிவிக்க வேண்டும்.

இத்தகைய வருவாய்களை ஈட்டும் முயற்சியில் மேற்கொள்ளப்படும் மக்கள் மீதான வரிச்சுமை, பொருட்களின் விலையேற்றம் என்பன மக்களை அதிகம் பாதிக்காதென்பதற்கான உத்தரவாதங்களையும், அதை மீறி ஏற்படக்கூடிய பாதிப்புக்களுக்கான நிவாரணங்களையும் தெரிவிக்க வேண்டும்.

அத்தகைய நிவாரணங்களில் தவிர்க்க முடியாததாக அமையப்போகும் சம்பள உயர்வுக்கோரிக்கைகளை அரசாங்கம் எவ்வாறு முகம் கொடுக்கப் போகிறதென்பதை தெரிவிக்க வேண்டும்.

இத்தகைய சம்பள உயர்வுகளால் ஏற்படக்கூடிய பணவீக்கத்தை எவ்வாறு அரசாங்கம் கட்டுப்படுத்தப் போகிறதெனவும் கூற வேண்டும்.

தன்னால் சமாளிக்க முடியாத நிதிச் செலவீனங்களை நிரப்ப, எவ்வாறு வெளிநாட்டு நிதிஉதவிகளைப் பெற்றுக்கொள்ளப் போகிறது என எடுத்துக்கூற வேண்டும்.

இந்த வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த என்ன வழிவகைகளை அரசாங்கம் கொண்டிருக்கிறதெனவும் தெரிவிக்க வேண்டும்.

அதேவேளை நாட்டில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் என்னவென்றும் அவற்றின் பலாபலன்களையும் விளக்கி அவற்றுக்கான முதலீடுகளும் செலவீனங்களும் எவ்வளவாக இருக்குமெனத் தெரிவிக்க வேண்டும்.

இவற்றைவிட அரசாங்க நிர்வாகத்துக்கும், சகல அமைச்சுகளின் செயற்பாடுக்கும் செலவாகும் நிதியில் வீண் விரயங்களை கட்டுப்படுத்த எடுத்துள்ள நடவடிக்கைகளையும் அவற்றால் மீதப்படுத்தக்கூடிய நிதியின் மதிப்பீட்டையும் தெரிவிக்க வேண்டும்.

இவற்றுக்கு அப்பால் அரசாங்கத்துக்கு இரு பெரும் செலவீனங்கள் உள்ளன.

அவையே நாட்டின் அளவு கணக்கற்ற நிதியை இறைத்துத் தள்ளுகின்றன.

அதில் முதலாவது யுத்தம்.

இந்த யுத்தத்துக்கான செலவே இந் நாட்டில் முதன்மையான செலவாகியுள்ளது.

யுத்தத்தின் தரம் வரவர உயர்ந்து கொண்டே செல்லுகிறது.

அதற்கேற்ப யுத்தச் செலவீனங்களும் பல்கிப் பெருகிச் செல்கிறது.

புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற நடத்திய தாக்குதலில் மயிரிழையில் தன்னைத் தற்காத்துக் கொண்டதன்பின் இலங்கையின் ஆயுதப்படைகளுக்கான யுத்த தளபாடங்களின் தேவை மிக உயர்ந்த தரத்திலானதாக ஆகியுள்ளது.

அதனால் இப் புதிய யுத்தத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெருமளவு நிதி அரசாங்கத்துக்குத் தேவைப்பட்டது.

> **உண்மையில் ஒரு நாட்டின் வருமானம் அதிகரிக்க வேண்டுமானால் அதன் உற்பத்தியை அதிகரிப்பதே சரியான மார்க்கம்.**

அதனால் அண்மைக் காலத்தில் இலங்கையில் பொருட்களின் விலையேற்றம் வேகமாக அதிகரித்தது.

இதேபோல் இலங்கை அரசாங்கத்துக்குத் தவிர்க்க முடியாத மற்றொரு பெரும் செலவீனம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்துக்கான செலவீனமாகும்.

யுத்தம் யுத்தத்துக்கான செலவீனத்தை மட்டுமல்ல அதன் விளைவான நிவாரணங்களுக்கான செலவீனத்தையும் அதிகரிக்கிறதென்பதே உண்மையாகும்.

யுத்தத்துக்கும் நிவாரணத்துக்கும் புனர்வாழ்வு புனரமைப்பு ஆகியவற்றுக்கும் மேற்கொள்ளுகின்ற செலவீனங்கள் மீள ஈட்டிக் கொள்ள முடியாத செலவீனங்களாகும்.

இத்தகைய நிலைமையில்தான் எவ்வாறு அடுத்த நிதியாண்டுக்கான நிதி நிலைமையை தாம் சாமர்த்தியமாக சமாளிக்கப் போகிறார்களென்று இந்த பட்ஜெட் சமர்ப்பிப்பில் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பை அரசாங்கம் கொண்டிருக்கிறது.

ஆனால் அது தெரிவித்துள்ள கருத்துக்கள் ஓர் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியதாகத் தென்படவில்லை.

இந்த பட்ஜெட் மக்கள் மீதான பழுவை அதிகளவு சுமத்தாதவாறு அமைக்கப்பட்டுள்ளது ஒருபுறத்தில் இதற்கான எதிர்ப்புணர்வுகளைத் தணித்துள்ளன.

> **இத்தகைய நிலமையில்தான் எவ்வாறு அடுத்த நிதியாண்டுக்கான நிதி நிலமையை தாம் சாமர்த்தியமாக சமாளிக்கப் போகிறார்களென்று இந்த பட்ஜெட் சமர்ப்பிப்பில் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பை அரசாங்கம் கொண்டிருக்கிறது.**

ஆனால் அதேவேளை மக்களுக்குத் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சிக்கான எந்த அறிகுறியையும் இது காண்பிக்கவில்லை என்பதை எடுத்து நோக்க வேண்டும்.

மக்கள் தம்மீது மேலதிக பழுக்கள் சுமத்தப்படாததையிட்டு ஆறுதலடைந்தாலும் இருக்கின்ற பழுக்களைத் தாங்கிக்கொள்ள வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதை உணராதிருக்கப் போவதில்லை.

மேலதிக சுமைகள் சுமத்தப்படாதது போல் தென்படுவதும் ஒரு மாயைதான்.

பட்ஜெட்டில் விலையேற்றங்களை அறிவிக்காவிட்டாலும், வரிகள் மெல்லிய அளவில் உயர்த்தப்பட்டுத்தான் உள்ளன.

அவற்றின் தாக்கம் பின்னர்தான் உணரப்படும்.

அதேவேளை பட்ஜெட்டில் விலையேற்றங்களை அறிவிக்காவிட்டாலும் அரசாங்கம் பின்னர் திடீர் திடீரென விலையேற்ற அறிவிப்புக்களைச் செய்து கொள்ளலாமென்பதால் இது ஒன்றும் ஆறுதலளிக்கும் விடயமல்ல.

மக்களின் கவனம் வேறு எதிலும் திரும்பியிருக்கும் தருணத்தில் இப்படியான விலையேற்றங்களை அறிவித்து விடுவது அரசாங்கம் மேற்கொள்ளும் ஒரு தந்திரம்.

அரசாங்கம் எடுத்த எடுப்பில் விலையேற்றங்களை அறிவிக்காவிட்டாலும் சில கட்டணங்களை உயர்த்தியுள்ளது.

விமான நிலையக் கட்டணம், கடவுச் சீட்டு, அரசாங்கப் பதிவுகளுக்கான கட்டணம் என்பவற்றின் உயர்வை இங்கு குறிப்பிடலாம்.

இதேவேளை இன்னும் பல்வேறு கட்டணங்களின் தொகையும் காலாகாலத்தில் உயர்த்தப்படலாம்.

வரிகளைப் பொறுத்தவரையில் 12.5 வீதமாகவுள்ள ஜி.எஸ்.ரி. எனும் பொருட்கள் சேவைகள் வரியில் எந்த அதிகரிப்பும் செய்யப்படாவிட்டாலும் பாதுகாப்பு வரி 6.5 வீதத்திலிருந்து 7.5 வீதமாக உயர்த்தப்பட்டள்ளது.

இதனால் சாதாரணமாக பாவனையாளர்கள் செலுத்துகின்ற மொத்த வரி 20 சதவீதமாக ஆகியுள்ளது.

அதாவது ஒருவர் செலவளிக்கும் ஒவ்வொரு நூறு ரூபாயிலும் 20 ரூபா வரியாகச் செலுத்துகிறார். 80 ரூபாதான் உண்மையில் தனக்காகச் செலவளிக்கிறார்.

இதேவேளை, இந்த பட்ஜெட்டில் துண்டு விழும் தொகை முன்னைய எப்போதையும் விட அதிகரித்துள்ளது.

மொத்த உற்பத்தியில் சுமார் 8.5 வீதம் துண்டுவிழும் தொகையாக இம்முறை அரசாங்கத்தால் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் உண்மையான துண்டு விழும் தொகை மொத்த உற்பத்தியில் சுமார் 10 சத வீதமாக ஆகலாமென பொருளாதார நிபுணர்கள் மதிப்பிடுகிறார்கள்.

கடந்த ஆண்டுகளிலும் மதிப்பிட்ட துண்டுவிழும் தொகையைவிட நிஜத் தொகை ஒரு சில வீதங்களால் அதிகரித்ததாகவே அமைந்திருந்தது.

துண்டுவிழும் தொகை அதிகரித்தால் அதை ஈடுகட்ட அரசாங்கத்துக்கான நிதித் தேவை அதிகரிக்கும்.

அதனால் வட்டி வீதங்கள் அதிகரிக்கும்.

அவ்வாறான நிலையில் சிறிய நடுத்தர உற்பத்தியாளர்கள், வர்த்தகர்களால் கடன்களை ஈடுகட்ட முடியாத நிலை தோன்றும்.

அதனால் அத்தகைய உற்பத்திகளும் வர்த்தகங்களும் முடங்க நேரிடும்.

இம் முடக்கம் மொத்தப் பொருளாதார வளர்ச்சியில் மறுபடி பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்த வருட ஆரம்பத்தில் வட்டிவீதங்கள் திடீரென அதிகரித்ததை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அண்மையிலும் அரசாங்கம் திறைசேரிப் பிணைகளுக்கான வட்டி வீதத்தை அதிகரித்திருந்தது.

அரசாங்கத்தின் நிதித் தேவை அதிகரிக்கும் போதுதான் திறைசேரி பிணைகளை அதிகளவில் விற்று அந் நிதியை சேகரித்துக் கொள்வதற்காக அவற்றுக்கான வட்டி வீதத்தை அதிகமாக வழங்க முன்வருகின்றது.

இவ்வாறு திறைசேரி வட்டி வீதங்கள் அதிகரித்தால் வர்த்தக வங்கிகள் தமது வட்டி வீதங்களையும் அதிகரிக்க நேரிடும்.

இதனால் முன்னர் குறிப்பிட்டபடி சிறிய இடைத்தர உற்பத்திகளும் வர்த்தகமும் முடக்கமடையும்.

இதேவேளை இலங்கை ரூபாவின் நாணயப் பெறுமதி தொடர்ந்து இறங்கிச் சென்றதையும், இறுதியில் இப் பெறுமதியை அரசாங்கம் கட்டுப்படுத்தாமல் மிதக்க விடுவதற்கு முடிவு செய்ய நேர்ந்ததையும் எடுத்து நோக்க வேண்டும்.

ரூபாயின் மதிப்பிறக்கத்தால் இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

இலங்கை பெருமளவில் இறக்குமதிப் பொருட்களிலேயே தங்கியிருககும் நாடு.

அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருள், மருந்துப் பொருட்கள், மருத்துவ சாதனங்கள், கட்டடப் பொருட்கள், யந்திர தளபாடங்கள், வாகனங்கள், உதிரிப்பாகங்கள், ஆயுதங்கள் முதற்கொண்டு பலவகையான பெரும்பாலான பொருட்களுக்கு இறக்குமதியிலேயே தங்கிருப்பதால் இந்த விலையேற்றம் சகல துறைகளிலும் விஸ்தரிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

> **அரசாங்கம் இத்தகைய பெரும் தொகையைப் பாதுகாப்புச் செலவீனத்துக்கு ஒதுக்குவதென்பது அது யுத்தத்தில் காட்டும் முனைப்பையே வெளிப்படுத்துவதாக உள்ளது.**

இதேவேளை ஏற்றுமதியிலும் இலங்கை இக்கட்டுகளை நோக்க இடமுண்டு.

அமெரிக்கா முதற்கொண்டு பல்வேறு நாடுகளிலும் தற்போது பொருளாதார நெருக்கடிகள் தலைதூக்கியுள்ளது.

இலங்கையில் அதிகளவு ஏற்றுமதிப் பொருள்களை கொள்வனவு செய்யும் நாடாக அமெரிக்கா விளங்குகிறது.

அந் நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் தோன்றியுள்ளதால், அவர்கள் கடந்த தடவைகள் போல் தொடர்ந்தும் இலங்கையின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வார்களென எதிர்பார்க்க முடியாது.

அவ்வாறு அவர்கள் கொள்வனவைக் குறைத்துக் கொள்வார்களாயின் இலங்கையின் ஏற்றுமதி வீழ்ச்சிகாண நேரிடலாம்.

இலங்கை ரூபா மதிப்பிறக்கத்தால் மற்றொரு விளைவும் உண்டு.

இலங்கை வெளிநாட்டுக் கடன்களுக்காகச் செலுத்தவேண்டிய தொகை ரூபாவில் அதிகரிக்கும்.

அந்த அதிகரிப்பையும் அது நாட்டு மக்களிடமிருந்துதான் ஏதோ ஒரு வகையில் சுவீகரிக்க வேண்டியிருக்கும்.

இந் நிலைமைக்கு மத்தியில் அரசாங்கம் இந்த பட்ஜெட்டில் காட்டியுள்ள புள்ளி விவரங்களைக்கூட சரியாகப் பேண முடியுமா என்பது சந்தேகத்துக்கிடமானதாகவுள்ளது.

கடந்த வருடம் இத் தொகை 29400 கோடியாக இருந்தது.

இதில் 17.4 வீதம் அதாவது 6339 கோடி ரூபா பாதுகாப்புச் செலவீனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பாதுகாப்பு செலவீனங்களுக்கு 5243 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் குறை நிரப்புப் பிரேரணைகள் மூலம் அது 8500 கோடி ரூபாவாக இறுதியில் அதிகரிக்கப் பட்டிருந்தது.

புலிகளின் யாழ். தாக்குதலைத் தடுக்கும் நவீன ஆயுதங்களுக்கு அதிக நிதி ஒதுக்க நேர்ந்தது.

இம்முறை ஒதுக்கியுள்ள தொகையையும் பல்வேறு காரணங்களை முன்னிட்டு மேலும் அதிகரிக்க நேரிடலாமென்பதற்கு தடையேதும் இல்லை.

அரசாங்கம் இத்தகைய பெரும் தொகையைப் பாதுகாப்புச் செலவீனத்துக்கு ஒதுக்குவதென்பது அது யுத்தத்தில் காட்டும் முனைப்பையே வெளிப்படுத்துவதாக உள்ளது.

சமாதானப் பேச்சுகளில் நம்பிக்கையற்ற மனப்பாங்கையே எடுத்துக் காட்டுகிறது.

எனினும் தற்போது நாடு எதிர் நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கெல்லாம் யுத்தத்தையே காரணமாகக் காண்பித்து வருகிறது.

இதேவேளை வெளிநாடுகளுக்கோ, தான் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவே அதிக நாட்டம் கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள்கிறது.

வெளிநாடுகளும் இந் நாட்டின் பிரச்சனைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்பதையே அதில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டு வருகின்றன.

இதேவேளை இலங்கை அரசாங்கம் தனது செலவீனங்களுக்குத் தேவைப்படும் நிதியில் 2470 கோடி ரூபாவை வெளிநாட்டுக் கடன்களினூடாகப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக இந்த பட்ஜெட்டில் தெரிவித்துள்ளது.

இந்தத தொகையையும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளபடி திரட்டிக் கொள்ள முடியுமா என்பது கேள்விக்குரியதே.

உண்மையில் ஒரு நாட்டின் வருமானம் அதிகரிக்க வேண்டுமானால் அதன் உற்பத்தியை அதிகரிப்பதே சரியான மார்க்கம்.

அதற்கு உற்பத்தித் திட்டங்களில் அதிக கவனம் செலுத்துவது அவசியம்.

ஆனால் எமது நாட்டில் ஆங்கிலேயரால் வடிவமைக்கப்பட்ட தேயிலை, றப்பர் பெருந்தோட்டங்களைத் தவிர எம்நாட்டுத் தலைவர்களால் எவ்விதத் திட்டமிட்ட உற்பத்தியும் உருவாக்கப்படவில்லை.

இலங்கைத் தீவைச் சுற்றுவர கடலிருந்தும் மீன்பிடித்துறை ஓர் ஏற்றுமதித் துறையாக மேம்படவில்லையென்பதை ஒரு உதாரணமாகச் சொல்லலாம்.

யுத்தத்தின் காரணமாக பல உற்பத்தித் துறைகள் முடக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் பல தசாப்தங்களாக எந்தப் புதிய தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை.

முன்னர் இயங்கிய யாழ். சீமேந்துத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் சீமெந்துத் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை போன்ற பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

இந்நிலையில் அரசாங்கம் தனது செலவீனங்களை ஈடுகட்டுவதற்கு கையாளும் அடுத்த திட்டம் தனியார் மயமாக்குதலே.

ஆனால் கடந்த காலங்களில் இலங்கையில் நிகழ்ந்த தனியார் மயமாக்கும் நடவடிக்கைகள் அரசாங்கம் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை.

> **யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு திட்டமிட்ட உற்பத்திகளில் பாரிய அக்கறை செலுத்தப்படாதவரை இந்த மோசமான பொருளாதார நிலைமை மேலும் மேலும் மோசமாகிச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.**

அதேவேளை தனியார் மயமாக்கல் பல்வேறு ஒழுங்கீனங்களையும் தொழிலாளர் பிரச்சனைகளையுமே விளைவாகத் தந்துள்ளது.

போக்குவரத்துத் துறையில் ஒழுங்கீனங்கள் தலைவிரித்து ஆடுகிறது.

தொழிலாளர் பிரச்சனைகளுக்கு உதாரணமாக அண்மையில் நிகழ்ந்த தோட்டத் தொழிலாளர் வேதன உயர்வுப் போராட்டம் திகழ்கிறது.

இந்த வகையில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பட்ஜெட்கூட வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுமா என்பது சந்தேகமே.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு திட்டமிட்ட உற்பத்திகளில் பாரிய அக்கறை செலுத்தப்படாதவரை இந்த மோசமான பொருளாதார நிலைமை மேலும் மேலும் மோசமாகிச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

உண்மையில் இந்த நாட்டில் கோலோச்சும் யுத்தமானது பட்ஜெட் என்ற பெயரில் ஒரு பிட்ஷா பாத்திரத்தைத்தான் எம் கைகளில் கொடுத்துள்ளது. ■

---

# “அதற்கு அந்தப்பிள்ளைகளா பழி?”

*வன்னியில் என்னவொரு சம்பவம் நிகழ்ந்தாலும் அதனை எப்படி புலிகளுக்கு எதிரான பிரசாரமாக முன்னெடுக்கலாம் என்று காத்திருக்கும் அரசாங்கத்துக்கு, கடைசியாக மெல்லக் கிடைத்திருக்கும் அவல்-விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிள்ளைகளது பரீட்சைப் பெறுபேறுகள்.*

*பிரபாகரனின் மகன் சால்ஸ் அன்ரனியும் மகள் துவாரகாவும் கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் மிகத்திறமையாக சித்தியெய்தி இருக்கிறார்கள்.*

*“யாருடைய பிள்ளைகளாக இருந்தால் என்ன, பரீட்சையில் பாஸ் பண்ணுவது? நல்ல விஷயம்தானே. இதிலென்ன விஷமப் பிரசாரம் வேண்டிக்கிடக்கிறது” என்று கேட்காதீர்கள்.*

*வன்னியில் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் புத்தகம் தூக்க வேண்டிய கைகளில் துப்பாக்கியும் வெடிகுண்டுமாக அலையும்போது, கட்டாய இராணுவ பயிற்சி இன்றேல் பரீட்சை நிலையத்துக்கு போகக்கூட அனுமதியில்லை என்று எழுதப்படாத சட்டம் அமுலில் இருக்கும் போது தலைவரின் பிள்ளைகள் மட்டும் 10D எடுக்கிறார்கள் என்றால்...?*

*வன்னியில் பெருநிலப்பரப்பு முழுவதுக்குமே இரண்டே இரண்டு ஆங்கில இலக்கிய வினாத்தாள்கள்தான் அனுப்பப்பட்டனவாம். இரண்டும் பிரபாகரனின் பிள்ளைகளுக்குத்தானாம்.*

*‘வன்னிமாணவர்களுக்கு T 56, AK 47, சயனைட் போன்ற ஓரிரு ஆங்கில சொற்களைத் தவிர வெளியுலகத்தை அறிந்துகொள்ளக் கூடிய வேறெதனையும் படிக்கும் வாய்ப்பு அளிக்கப்படாதிருக்கும் ஒரு சூழ்நிலையில் தமது பிள்ளைகளை மாத்திரம் ஆங்கில மொழியிலும் இலக்கியத்திலும் திறம்பட பயிற்றுவித்திருக்கிறார் பிரபாகரன், என்று அரசாங்க ஊடகங் கள் பிரசாரம் செய்கின்றன.*

*தன் பிள்ளைகளின் வயதில் உள்ள சக மாணவர்கள் போர்க்களம் செல்ல வேண்டும், கட்டாய இராணுவப் பயிற்சி பெற வேண்டும் என்றெல்லாம் சட்டம் பிறப்பித்து விட்டு, தன்னுடைய குழந்தைகளுக்கு மட்டும் கல்வி புகட்டுவது என்ன நியாயம் என்று கேட்கப்படுகிறது.*

*அது மாத்திரமன்றி வன்னிப் பிராந்தியத்தின் ஒட்டு மொத்தமான பரீட்சை பெறுபேறு மிக மோசமாக இருக்கையில் சால்ஸ் அன்ரனியும், துவாரகாவும் மட்டும் எப்படி இந்தளவு திறம்பட பரீட்சை எழுதினார்கள் என்று இலங்கை பரீட்சை திணைக்களத்துக்கு சந்தேகமாம். இதைவிட அந்தப் பிள்ளைகள் இரண்டும் ஏனைய மாணவர்கள் தோற்றிய பரீட்சை நிலையங்களுக்குக் கூட செல்லவில்லை என்று கூறுகிறார்கள். வீட்டில் வைத்தே எழுதியிருக்கலாம் அல்லது அவர்களுக்கென்று பிரத்தியேகமான பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டிருக்கலாம்; எது எப்படியிருந்தாலும் அவர்கள் மிகவும் சிறந்த முறையில் சித்தியெய்தியிருக்கிறார்கள்.*

*எல்லோராலும் அப்படி முடியாவிட்டாலும் கூட ஓரிருவராவது அவ்வாறாக பாஸ் பண்ணுவது பேரினவாதிகளுக்குப் பொறுக்கவில்லை. வன்னி என்றால் வெறுமனே தற்கொலையாளிகளின் நிலப்பரப்பாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ என்னவோ! ஒரு பரீட்சை முடிவைப் போய் இந்தளவு பெரிய விஷயமாக பிரசாரம் செய்கிறார்கள்.*

*புலிகளோ, அதன் தலைவரோ எது செய்தாலும் அதில் பிழைகண்டுபிடித்து பழகிப்போன பேரினவாதிகள் பிரபாகரனின் பிள்ளைகள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை அடைந்ததை வைத்துக் கொண்டு ஏதோ வன்னியில் ஏனைய மாணவர்களை புலிகள் திட்டமிட்டே படிக்க விடாமல் செய்தது போன்றும் பாடசாலை பிள்ளைகளை போருக்கு அனுப்பிவிட்டு தன் குழந்தைகளுக்கு ஆங்கிலம் புகட்டியது போன்றும் ஒரு கதையை அவிழ்த்து விட்டுள்ளார்கள்.*

*இதில் உண்மை நிலையை புலிகள் மக்களுக்கு விளக்க வேண்டும். வன்னியில் கல்வி நிலை மோசமாக இருப்பதற்கு காரணம் பொருளாதாரத்தடையும், ஏனைய வளப்பற்றாக்குறையுமே என்பதை தெளிவுபடுத்துவது அவசியமாகும். பாடசாலைக்கட்டிடங்களில் பாதிக்கு மேல் குண்டு வீச்சில் தகர்க்கப்பட்டுள்ளதையும் ஏனையவை அகதி முகாம்களாக பாவிக்கப்படும் நிலையில் மாணவர்களின் கல்வி நிலை உயர்ந்த தரத்தில் இருக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? என்று விளங்கப்படுத்தி அதற்கான தீர்வைக் காண வழி செய்யாவிட்டால் ஊரார் பிள்ளைகளை போருக்கு அனுப்பி விட்டு தன் பிள்ளைகளை மட்டும் பாடம் படிக்கச் சொன்னார் என்பது உண்மையாகிவிடும்!*

# அண்டை மண்டலத்தில்....

# தமிழக அரசியலில் அரங்கேறும் அசிங்கங்கள்

சட்டமன்றத் தேர்தல்கள் நெருங்கிவிட்டன. தி.மு.க, அ.இ.அ.தி.மு.க கூட்டணிகள் ஏறத்தாழ இறுதியாகிவிட்டன. யார் வெற்றி பெற்றாலும் சரி, அமையப்போகும் சட்டமன்றம் எவ்வாறு இருக்கக்கூடும்? அதையும் சற்று ஆய்வோமே.

தமிழ் மாநில காங்கிரஸ் அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்திருப்பதைக் கண்டித்து முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தனது ஆதரவாளர்களுடன் தி.மு.க அணிக்குத் தாவிவிட்டார். ஊழல் ராணியுடன், அராஜகவாதிகளுடன் தொடர்பா, என்று கொதிக்கிறார் அவர். அவரது பிரதம தளபதி சென்னையில் உள்ள புரசைவாக்கத்தைச் சேர்ந்த ரங்கநாதன். அரசியல்வாதிகளில் குறிப்பிடத்தகுந்த தாதாக்களில், ரவுடிகளில் ஒருவர். இன்னும் கருப்பையா மூப்பனாரின் விசுவாசியாக இருக்கும் சென்னை கார்ப்பரேஷன் கவுன்சில் த.மா.கா உறுப்பினர்களின் தலைவர் வெற்றிவேல். இன்னொரு கட்டைப் பஞ்சாயத்து ரவுடி, கடந்த வாரம்தான் அவரது மகன் ஒரு சூப்பர் மார்க்கெட்டில் ஏதோ திருடி மாட்டிக்கொள்ள, உரிமையாளர் அவரிடம் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கி வீட்டுக்கு அனுப்ப, சினங்கொண்ட வெற்றிவேல் உரிமையாளரையே கடத்தி, நையப்புடைத்து, மகனிடம் மன்னிப்பு வாங்க வைத்ததோடு நில்லாமல், லட்சக்கணக்கில் ரூபாயும் கறந்திருக்கிறார். விவகாரம் இப்போது சந்தி சிரிக்கிறது.

இன்னொரு முன்னாள் த.மா.கா தலைவர் ஹாரூன், இப்போது முஸ்லிம் ஐக்கிய ஜமாத்தொடங்கி தி.மு.க.வில் இணைந்திருப்பவர். போலி லாட்டரி சீட்டு மோசடி செய்து பிரபலமானவர், எதிரிகளை ஆட்களை வைத்து அடிப்பதில் புகழ்மிக்கவர். த.மா.கா. விலிருந்து காங்கிரஸ் சென்று இப்போது அ.இ.அ.தி.மு.க.வில் இணைந்திருக்கும் கராத்தே தியாகராஜனும் ஒரு தாதாதான். "நாங்கள் வேறுபட்ட கட்சி, கண்ணியத்தைக் கடைப்பிடிக்கும் கட்சி" என்று சொல்லிக் கொள்பவர்களே இத்தகைய புல்லுருவிகளை வளர்க்கிறார்கள் என்றால் தி.மு.க, அ.இ.அ.தி.மு.க பற்றி சொல்லவே வேண்டாம்.

மேடைக்கு மேடை அ.இ.அ.தி.மு.க வையும் ஜெயலலிதாவையும் மிகத் தரக்குறைவாகத் தாக்கிப் பேசும் தீப்பொறி ஆறுமுகம் என்பவர் இப்போது அம்மாவிடம் சரணடைந்திருக்கிறார். தனது ஏழ்மையினைப்போக்க தி.மு.க முன்வரவில்லை என்பது அவரது குற்றச்சாட்டு. இனி தி.மு.கவை சரமாரியாகத் தாக்குவார், காதுகளைப் பொத்திக் கொள்ளும் அளவுக்கு. இப்படிப்போகிறது தமிழக அரசியல்.

தற்போது ப.சிதம்பரம் அடித்து வரும் ஸ்டண்டுகள்தான் படு சுவாரஸ்யமானவை. முன்னதாக இவர் மத்திய அமைச்சராக இருந்த போது திருச்சி விமான நிலையத்திற்கு வெளியே அ.தி.மு.க. குண்டர்களால் தாக்கப்பட்டார். இந்த விவகாரத்தில் ப.சிதம்பரத்தை தாக்கிய நபர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கி பின்னாளில் உற்சாகப்படுத்தினார் ஜெயலலிதா. இந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வந்த போது, 'தாக்கிய நபர்கள் தனக்கு யாரென்று தெரியாது' என்று ப.சிதம்பரம் உதிர்த்த வார்த்தைகள் தமிழக மக்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஊர், உலகம் அறிய பொது இடத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்-போட்டோ ஆதாரமும் இருக்கிறது-அப்படியிருந்தும் ப.சிதம்பரம் பொய் சொன்னார்.


ஐக்கிய முன்னணி அரசில் மத்திய நிதி அமைச்சராயிருந்த சிதம்பரம் அதன் பிறகு முழுநேர வழக்கறிஞராக மாறிவிட்டிருந்தார். ஓய்வு நேரத்தில் எப்போதாவது 'ரெக்ரியேஷன் கிளப்'பிற்கு வந்து செல்பவர்களைப் போல த.மா.கா.வின் செயற்குழு கூட்டங்களுக்கும் எப்போதாவது வந்து சென்றார். கடந்த ஓராண்டு காலமாக மதச் சார்பற்ற அணி என்ற பேரில் த.மா.கா., அ.தி.மு.க. மற்றும் கம்யூனிஸ்டு கட்சிகள், தி.மு.க.- பா.ஜ.க. எதிர்ப்பு அரசியலை படுமும்முரமாக நடத்தி வந்த போது ஒதுங்கியே இருந்தார் சிதம்பரம். பிறகு அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டணி கனியும் நேரத்தில் 60 சீட் கேட்க வேண்டுமென்றும், கூட்டணி ஆட்சி வேண்டுமென்றும் வலியுறுத்திய சிதம்பரம், த.மா.கா.வும் காங்கிரஸும் கூட்டாக 47 தொகுதிகளை அ.தி.மு.க.விடமிருந்து பெற்ற பின்னர் அதை எதிர்த்து தனி இயக்கம் கண்டுள்ளார்.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், 1996-ல் இ.காங்கிரஸிலிருந்து வெளியேறி த.மா.கா. உருவான போது எப்படி நரசிம்மராவ் கட்-அவுட்கள் எரிக்கப்பட்டு, செருப்படி தந்து பல அநாகரீகங்கள் அரங்கேறியதோ அதே போன்ற அநாகரீக சம்பவங்களை சிதம்பரத்தின் எதிர்ப்பு என்பதாக நடத்தி காட்டினார்கள் த.மா.கா.தொண்டர்கள்.

'த.மா.கா. ஜனநாயகப் பேரவை' என்று தனது இயக்கத்தின் பெயரை அறிவித்து தி.மு.க.விற்கு நிபந்தனையற்ற தடாலடி ஆதரவைத் தந்தார் சிதம்பரம். இதனடிப்படையில் சிதம்பரத்தின் நண்பர்கள் மூவருக்கு தி.மு.க.வில் மூன்று சீட்டுக்கள் கிடைத்துள்ளன. இதில் முக்கிய நபர் ரங்கநாதன். த.மா.கா., தி.மு.க.வை எதிர்த்து அரசியல் நடத்ியபோதே தி.மு.க.விற்கு தீவிர ஆதரவளித்து வந்தவரான ரங்கநாதனை த.மா.கா.ஜனநாயகப் பேரவையின் பொதுச் செயலாளராக்கியுள்ளார் சிதம்பரம். சில ஆண்டுகளுக்கு முன்பு பால் கறந்து சைக்கிளில் சென்று வீடு வீடாக ஊற்றி பிழைத்து வந்த ரங்கநாதன் புரசைவாக்கம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான பின்பு குறுகிய காலத்தில் கோடீஸ்வரராகிவிட்டார். பேட்டை ரவுடியிசம், கட்டைப் பஞ்சாயத்து, நில ஆக்கிரமிப்பு, வீடு காலி செய்து தருவது என்று மத்திய சென்னைப் பகுதியில் அரசியல் நடத்துகிறவர் ரங்கநாதன் என்பது கவனத்திற்குரியது. பல கொலை வழக்குகள் இவர் மீதுள்ளன. தனது கூட்டணிக்குள் ரங்கநாதனுக்கு சீட் கொடுத்த முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பில் இருக்கும் சி.பி.சி.ஐ.டி. போலீஸார் ரங்கநாதனிடம் விசாரணை நடத்திக் கொண்டுள்ளனர்.

தி.மு.க.கூட்டணிக்குள் இடம் பெற்றிருக்கும் விடுதலை சிறுத்தைகள் அமைப்பினர் வன்முறை அரசியலை மட்டுமே நம்புகிறவர்கள். ஒரு வகையில் வன்னியர்களின் வன்முறைக்கும், அராஜகத்திற்கும் சமூக புறக்கணிப்பிற்கும் உள்ளானதாலும் இவர்கள் வன்முறை வழியைத் தேர்ந்தெடுத்தனர் என்பதும் யதார்த்தமே! இந்த அமைப்பிற்கு தற்போது எட்டு சீட்டுகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் கொலை, கொள்ளை, திருட்டு வழக்குகளில் சம்பந்தமில்லாத நபர்களை தேர்ந்தெடுத்து தேர்தலில் நிற்க வைப்பது திருமாவளவனுக்கு மிகப் பெரிய சவால்தான்!

பாட்டாளி மக்கள் கட்சியின் வன்முறை குறித்து சொல்லவே வேண்டியதில்லை. வட மாநிலங்களில் பல்லாயிரக்கணக்கான சேரிக் குடிசைகளை தீயிட்டுக் கொளுத்திய தீரர்கள். ஜாதி துவேஷத்தை பெருமளவில் வளர்த்தார்கள். இந்த அமைப்பின் முக்கியஸ்தர்களான காடுவெட்டி குரு, ஏ.கே.மூர்த்தி (பாராளுமன்ற உறுப்பினர்) பு.தா.அருள்மொழி, ஐ.கணேசன் போன்ற பலர் வன்முறை அரசியலுக்கு பெயர் பெற்றவர்களாவர். இதில் காடுவெட்டி குரு, "டாக்டர் ஐயா ஆணையிட்டால், அவரை எதிர்த்து விமர்சனம் செய்து கொண்டிருக்கும் வாழப்பாடி ராமமூர்த்தியின் தலையை வெட்டி அவரது காலடியில் வைக்கத் தயார்" என்று பொதுமேடையிலேயே பேசியவர்.



ப. சிதம்பரம்

தற்போது சட்டமன்றத்தில் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட பா.ம.க., அ.தி.மு.க. அணிக்குத் தாவியதன் மூலம் 27 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட உள்ளது. இதில் கணிசமான தொகுதிகளில் வெற்றி பெற வாய்ப்புள்ளது.

சிதம்பரம் பகுதியில் வன்முறை ராஜ்ஜியமே நடத்தி பெரும் வரலாறு படைத்த வாண்டையார் சகோதரர்கள்-ம.தி.மு.க. பிரமுகர் பழனிவேலு கொலை உள்ளிட்ட பல கொலை, அராஜக வழக்குகளில் தொடர்புள்ளவர்கள்-இன்று அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதாவை சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தென் மாவட்டங்களில் அதிரடி அரசியலுக்குப் பேர் போனவரும், சில கொலை வழக்குகளில் தொடர்புள்ளவருமான ஜான் பாண்டியனுக்கு தேர்தலில் நிற்க வாய்ப்பு வழங்கியுள்ளார் ஜெயலலிதா. இதன் மூலம் புதிய தமிழகத்தின் டாக்டர் கிருஷ்ணசாமி ஆதரவாளர்களும், ஜான் பாண்டியனின் ஆதரவாளர்களும் மேலும் மோதக்கூடிய வன்முறைக்கான வாய்ப்புகள் இல்லாமலில்லை.

ஏற்கெனவே தென் மாவட்டங்கள் ஜாதி ஆதிக்க உணர்வுள்ள தேவர் சமுதாயத்தினர் தலித் மக்களின்மீது மனித உரிமை மீறல்களை நடத்துவதும், வன்கொடுமைக்குள்ளாக்குவதும் ஒரு தொடர்கதையாக உள்ளது. இதற்கு புதிய தமிழகத்தின் தலித் தொண்டர்கள் பதிலடி தரும் வகையில் இன்று வளர்ந்துவிட்டனர். இந்த இரு சமுதாயங்களுக்கு இடையிலான அடி, வெட்டு, குத்து, கொலை சம்பவங்களுக்கு அளவே இல்லை. இந்த நிலையில் பெரும்பாலான தேவர் சமுதாயத்தினர் அ.இ.அ.தி.மு.க.வை ஆதரிப்பது கவனத்திற்குரியது. இதனால் தலித் சமுதாயத்தினர் தி.மு.க.கூட்டணியை-பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கு இடையிலேயும் ஆதரிப்பது தவிர்க்க இயலாததாகிவிட்டது. புதிய தமிழகத்திற்கு தி.மு.க.கூட்டணியில் பத்து இடங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் புதிய தமிழகம் மிகப் பெரும்பாலான தலித் மக்களின் ஆதரவு பெற்ற பெரிய இயக்கமாக உள்ள போதிலும் அது ஒழுங்கமைப்படாத அமைப்பாகத்தான் உள்ளது. தேவர் எதிர்ப்பை மையப்படுத்தியே புதிய தமிழகம் வளர்க்கப்பட்டுள்ளதேயன்றி, 'ஒட்டு மொத்த சமூக நலன், அதற்கான தங்களது பங்களிப்பு என்ன?' என்பது பற்றி புதிய தமிழகம் தொண்டர்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை.

தமிழகத்தில் மற்றொரு முக்கிய சமுதாயமான யாதவர்கள் தலித்துகளுக்கு அடுத்த நிலையில் உள்ளனர். இவர்களும் தேவர் இனமக்களின் ஆதிக்க உணர்வால் பல பாதிப்புக்கு உள்ளானவர்கள். தலித் மக்களோடு ஓரளவு இணக்கமான தொடர்பு ஏற்படுத்திக் கொண்டுள்ள இந்த இன மக்கள் முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரும், பல ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளானவருமான கண்ணப்பன் தலைமையில் மக்கள் தமிழ் தேசம் என்ற பெயரில் திரண்டுள்ளனர். தி.மு.க.கூட்டணியில் இவர்களுக்கு ஆறு தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**கண்ணன்**

சென்னை, காஞ்சிபுர மாவட்டங்களில் அங்குமிங்குமாக வன்முறை அரசியலை நடத்திவரும் புதிய பாரதம் கட்சி தற்போது அ.தி.மு.க.வை ஆதரித்துள்ளது. இதன் தலைவர் பூவை மூர்த்தி பல கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளார். பிரபல ரவுடிகள் வெள்ளை ரவி, சேரா போன்றவர்கள் இவரது அரவணைப்பில்தான் உருவானவர்கள்.

ம.தி.மு.க.வினரும் வன்முறை அரசியலுக்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். இந்தக் கட்சியின் வட சென்னை தாதாவான ஏழுமலை, துறைமுகம் பகுதிகளில் பல தடாலடி கட்டைப் பஞ்சாயத்துகளை நடத்தி வந்த போது எதிரிகளால் வெட்டிக் கொல்லப்பட்டார். தற்போதும்கூட ம.தி.மு.க.வினர் சென்னையில் சில பகுதிகளில் கட்டாய தேர்தல் நிதியை மிரட்டியும், உருட்டியும் வசூலித்து வருவதாக ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் வழக்கு பதிவாகியுள்ளது.

இவை ஒருபுறம் இருக்க, தமிழகத்தில் வன்முறை அரசியலில் கொடிகட்டிப் பறப்பவர்கள் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும்தான் இதில் இரு தரப்பாரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர். கோவை மாவட்டத்தில் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமியும், சட்டமன்ற உறுப்பினரான சி.டி.தண்டபாணியும் ஒருவரை ஒருவர் அடித்து உருண்டனர்.

தர்மபுரி மாவட்டத்தில் அமைச்சர் முல்லை வேந்தன் அறநிலையத் துறை அதிகாரியான அன்புமணியை அடியாட்கள் புடைசூழ அடித்துள்ளார். காரணம் கோயில் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்த கட்சிக்காரர்களின் மீது இந்த அதிகாரி நடவடிக்கை எடுத்தார் என்பதாலாகும். இந்தப் பிரச்சனை விஸ்வரூபமெடுத்து விட்டதையடுத்து முதலமைச்சர் கருணாநிதி முல்லைவேந்தனை அமைச்சரவையிலிருந்து விலக்க வேண்டியதாகி விட்டது. முல்லை வேந்தனுக்கு ஆதரவாக இரண்டு மாவட்டச் செயலாளர்கள், மூன்று எம்.எல்.ஏ.க்கள், ஏராளமான ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் திரண்டு தி.மு.க. தலைமையின் முடிவை எதிர்த்தார்கள். "முல்லைவேந்தன் மாவட்டச் செயலாளராக இருந்தபோது நிகழ்த்திய பல அராஜகங்களை ஒப்பிடும் போது இந்தச் சம்பவம் ஒன்றுமேயில்லை" என்று அவரது ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர்.

மதுரையில் மாநகராட்சி துணை மேயரான மிசா பாண்டியன் சமீபத்தில் ஒரு கொலை வழக்கிற்காக கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் பகிரங்கமாக "நான்தான் கொலை செய்யச் சொன்னேன்" என்று வாக்குமூலம் தந்தார். மதுரையில் முதலமைச்சரின் மகன் மு.க. அழகிரி நடத்திவரும் தடாலடி தர்பாரை அறியாதவர்கள் தமிழகத்தில் இல்லை. உட்கட்சித் தகராறுகளுக்கெல்லாம் அரசு பேருந்துகளை எரிக்கும் அளவுக்குச் சென்றுவிட்டது முதலமைச்சர் மகன் அரசியல். பொலிஸ் ஸ்டேசனுக்குள் அதிரடியாய் நுழைந்த லாக்-அப்பிலுள்ள குற்றவாளியை மீட்டெடுத்து வரும் தைரியம் மு.க.அழகிரியைத் தவிர வேறு யாருக்குள்ளது? சென்னையில் சைதை கா.கிட்டு என்றால் எப்பேற்பட்ட கொம்பனும் அடங்கிப் போகிற நிலை உள்ளது.

எதிர் கட்சியாய் இருக்கும் நிலையிலும் அ.தி.மு.க.வின் வன்முறை அரசியல் குறைந்து விடவில்லை. இ.மதுசூதனன், ஆதி ராஜாராம், தோட்டம் சேகர், சமீபத்தில் விலக்கப்பட்ட தாமரைக்கனி.. என்று பெரிய பட்டாளமே அ.தி.மு.க.விற்கு உண்டு. மேலும் அயோத்தியா குப்பம் வீரமணி போன்ற கூலிப்பட்டாளங்களையும் தேவைப்பட்டால் களத்தில் இறக்கும் அ.தி.மு.க.! ஜெயலலிதாவிற்கு பிரசண்ட் ஸ்டே வழக்கில் சிறை தண்டனை வழங்கப்பட்ட தீர்ப்பை கண்டித்து கல்லூரி மாணவிகள் ஏறி வந்த பேருந்தை தீயிட்டு கொளுத்தி மூன்று மாணவிகளை உயிரோடு எரித்த வன்முறை வரலாற்றுக்குச் சொந்தமானது அ.தி.மு.க.

நடைபெறப் போகும் சட்டமன்றத் தேர்தல் களத்தில் பல வன்முறையாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளது கண்கூடாகவே தெரிகிறது. மேலும் ஜாதிய போர்வையிலான வன்முறையாளர்களும் புதியதாக அமையவுள்ள சட்டமன்றத்திற்கு வர வாய்ப்பு அதிகம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் பிற பகுதிகளில் மாத்திரமல்ல, இனி சட்டமன்றத்திற்கு உள்ளேயும் கூட அடிக்கடி வன்முறைச்சம்பவங்கள் அரங்கேறலாம்.

# பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

'தமிழர்கள் இனவாதிகள்; புலிகள் மிலேச்சர்கள்' என்று மீண்டும் உறுமத் தொடங்கியிருக்கிறது சிங்கள, பௌத்தர்களின் போசகர்கள் என்று தம்மைத் தாமே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் சிஹல உறுமய.

"புலிகளுடன் பேசாதே" என்ற கோஷத்துடன் 10 லட்சம் கையெழுத்து வேட்டையாடி, ஜனாதிபதிக்கு கையளிக்கும் கைங்கரியத்தைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள், இந்த அம்பும் வில்லும் சின்னமாகக் கொண்ட வேட்டைப் பிரியர்கள்.

முன்பும் இதேபோல் புலிகளை பிரித்தானியா தடைசெய்ய வேண்டும் என 1 லட்சம் கையெழுத்து வாங்கிக் கையளித்ததை பெருமையாகவேறு பேசிக் கொள்கிறார்கள்.

'காகம் இருக்க பனம்பழம் விழுந்தது' போல் சிஹல உறுமயவின் உறுமல்தான் காரணம் என தம்பட்டம் அடிப்பது வெறும் பிதற்றல்தான்.

அப்படித்தான் என்றால் புலிகளை தடைசெய்யவேண்டும் என்று பிரதமர் இல்ல பாதுகாப்பு வலய பொலிசாரின் தடைகளையும் மீறி பிரித்தானிய தூதரகத்துள் சென்று மகஜர் கையளித்த பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாகூட மார்தட்டலாம், தான் எறிந்த கல்பட்டுத்தான் புலித்தடை என்ற மாங்காய் வீழ்ந்ததென்று.

ஏனென்றால் அவரது மகஜர் கையளிக்கப்பட்ட மறுநாள்தான் தடை செய்யப்பட்டோர் பட்டியலும், அதில் புலிகளும் உள்ளடக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது. எந்த மாங்காய் மடையனுக்குந் தெரியும் புலிகள் தடைக்கு இவர்கள் காரணம் அல்ல என்பது.

எதிரியின் மீதான தாக்குதல்களை போராட்டம் என பட்டியலிட்டவர்கள், தம் வீட்டுக்குள்ளேயே நடத்தியவற்றை பொல்பொட்டிசம் என எதிரியே புட்டுக் காட்டும்படி செய்தமையால்தான் இன்று பிரித்தானியாவின் பயங்கரவாதிகள் பட்டியலிலும் இடம் பெற்றுக் கொண்டார்கள்.

இலங்கைத் தமிழர் மனதில் தாம் இலங்கையர் என்ற சிந்தனையை, சிதறடித்ததே சிங்களப் பேரினவாத வெறியர்களின் சிங்கள நாடு என்ற சிந்தனைதான். இன்றும் குடிக்கும் பியர் பானத்தின் விளம்பரத்தில்கூட "அபி சிங்க வம்ச; ஒப?" (நாங்கள் சிங்கள வம்சம்; நீங்கள்?) என விளம்பரம் போட்டு மதுவிற்பனையில் கூட இன வெறியை வெளிக்காட்டும் அளவிற்கு இது சிங்கள நாடு என்ற எண்ணமே மேலோங்கி நிற்கின்றது.

தனிநாடு அல்லது தமிழ் ஈழம் அல்லது ஈழம் என்ற கோஷங்களைக் கொண்டு போராட்டத்தை ஆரம்பித்த தமிழ் மிதவாதத் தலைமைகளோ அன்றிப் போராளிகளோ வெறுமனே நாட்டைத் துண்டாடவோ அல்லது பிரிவினைதான் முடிந்த முடிவென்றோ போராடவில்லை.

**~குத்தியன்~**

மாற்றுத் திட்டங்கள் முன்வைக்கப் பட்டால் பரிசீலிக்கத் தயாரான நிலையில் தான் போராடப் புறப்பட்டனர். அதனால் தான் பண்டாவுடனும், டட்லியுடனும் மிதவாதிகள் ஒப்பந்தம் செய்ததுபோல், போராளிகளும் திம்புவில் நாலு அம்சத் திட்டத்தை முன்வைத்தனர்.

ஆக ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவ வாழ்வு என்பதுதான் தமிழர்களின் அடிப்படை விருப்பமாகும்.

ஆனால் அவர்களை அடிபோட்டு அடக்கி வைக்க விளைகையில்தான் அது இனவாதம் ஆகின்றது.

தம் இனத்திற்காக வாதாடுவது இனவாதம் என்றால் தமிழர்கள் இனவாதிகள் தான்.


அந்த அடிப்படை உரிமைப் போராட்டத்தை இனவெறிகொண்டு அடக்க விளையும் சிஹல உறுமய போன்ற சிங்கள பேரினவாத வெறியர்களினால் தமிழர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்தின் விரிந்ததுதான் புலிகளின் மிலேச்சத்தனம். இனவாதம் தவிர்க்கப்படல் வேண்டுமானால், தமிழருக்கு இந்நாட்டில் தன்மானத்துடன் வாழ வழிவேண்டும். அதனை உறுதிப்படுத்தும் படியான அரசியல் தீர்வு அரசியல் அமைப்பு சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படல் வேண்டும்.

அவ்வாறு செய்யும் போதுதான் மிதவாதிகள் அகிம்சை வழியில் போராடியபோதும், போராளிகள் ஆயுதம் ஏந்திய போதும் அதன் நியாயத்தன்மையை ஏற்றுக் கொள்ளாமல் வெறுமனே சிங்களபேரினவாத வெறியரின் திருப்திக்காக செயல்படும் அரச பயங்கரவாத நடவடிக்கைகள் அற்றுப்போகும். அப்போதுதான் அதன் வழிவந்த புலிகளின் மிலேச்சத்தனமும் மிச்சமின்றி ஒழியும்.

அதைவிடுத்து காட்டுவாசிகளின் அம்பையும் வில்லையும் சின்னமாகக் கொண்ட சிஹல உறுமயவினர் தங்கள் அரசியல் கடை விரிப்பிற்காக இன வெறித் தீயை வளர்ப்பதால் இந்த நாட்டில் மிஞ்சப்போவது மிலேச்சத்தனம் மட்டும்தான்.

# அலசுவது -இராஜதந்திரி

# சமாதானத்தின் முக்கியத்துவத்தை இடித்துரைத்த 'முல்லைத் தாக்குதல்'



இரு கடற்படை டோரா-ரக பீரங்கிக் கப்பல்கள் கடந்த வாரம் தமிழீழ விடுதலைப் புலிகளது தாக்குதலுக்குள்ளாகியிருந்தன.

இதில் ஒரு டோரா கப்பல் முற்றிலுமாக மூழ்கியிருந்தது. மற்றய கப்பல் பலத்த சேதத்துக்குள்ளாகியிருந்தது. ஆயினும் நீரில் மூழ்கவிடாது கடற்படையினர் அக்கப்பலைக் காப்பாற்றியுள்ளதாகப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவுக்கடலில் கடந்த வாரம் புதன்கிழமையன்று அதிகாலை வேளை எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் கடற்புலிகள் நடத்திய தாக்குதல், அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக கவனத்தில் எடுக்கப்படவேண்டியதொன்றாகவே இருக்கின்றது.

கடந்த டிசம்பர் மாதம் நத்தார் தினத்திற்கு முன்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தனது ஒரு தலைப்பட்சமான, யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தது.

இதன் பின்னர் இந்த யுத்த நிறுத்த அறிவிப்பு புலிகளினால் தொடர்ந்து நீடிக்கப்படுமா? என்று எதிர்பார்க்கப்பட்டது.

புலிகள் தொடர்ந்து கடந்த ஜனவரிமாதத்திலும் யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிட்டதோடு, இலங்கை அரச தரப்பும் சாதகமான முறையில் தமது யுத்த நிறுத்தத்தை ஏற்று, அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமெனக் கேட்டிருந்தனர்.

இருந்தபோதிலும் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பைச் சந்தேகத்துடனேயே நோக்கியிருந்தன.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளும் விதத்திலும், சர்வதேச சமூகத்தின் நற்பெயரைச் சம்பாதிக்கும் வகையிலுமே தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து வருகின்றனர் என்று இலங்கை அரச தரப்புக் கூறிவந்தது.

கூடவே தமிழீழ விடுதலைப்புலிகள் பலவீனமடைந்துள்ளார்கள். அவர்கள் தமது பின்னடைவுகளை மூடிமறைக்கவே யுத்த நிறுத்தத்தை அறிவித்து வருகின்றார்கள் என்று இலங்கை இராணுவத்தரப்பும் கூறிவந்தது.

ஆனால் கடந்த வாரம் தமிழீழ விடுதலைப் புலிகள் முல்லைத் தீவுக் கடற்பரப்பில் நடத்தியுள்ள தாக்குதல் அவர்களது, .இராணுவ, மற்றும் அரசியல் ரீதியான நிலைப்பாடுகளை தெட்டத் தெளிவாக்கிவிட்டுள்ளதையே அவதானிக்க முடிந்தது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பயங்கரவாதத் தடைச் சட்டம் தம் மீது பிரயோகிக்கப்படலாகாது என்பதில் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுதியாக இருந்தனர். ஆனால் இலங்கை அரசின் நிர்ப்பந்தத்துடன், இந்தியாவின் வாஜ்பாய் அரசாங்கமும் கொடுத்த அழுத்தம் காரணமாக பிரிட்டிஷ் அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டனில் தடைசெய்திருந்தது.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? அவர்கள் தமது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை விலக்கிக் கொள்வார்களா? மீளவும் முழு அளவில் யுத்தத்தில் குதிப்பார்களா? அரசியல் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்வார்களா? போன்ற கேள்விகளே அரசியல் வட்டாரங்களில் எழுந்திருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நடவடிக்கையையடுத்து ஏனைய ஐரோப்பிய நாடுகளும் தமிழீழ விடுதலைப்புலிகள்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் ஜனாதிபதி சந்திரிகா ஐரோப்பாவுக்குச் சுற்றுப் பயணமொன்றையும் அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

எனவே இலங்கை அரச தரப்பு தமிழீழ விடுதலைப் புலிகள்மீதான அழுத்தங்களை சர்வதேச ரீதியாக அதிகரிக்கச் செய்வதில் ஆர்வங்காட்டி வரும் நிலையில், ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை தமது தரப்பில் புலிகள் தொடர்ந்து நீடிப்பார்களா? என்ற கேள்வி எழுந்திருந்தது.

இத் தருணத்திலேயே கடந்தவாரம் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்த்திய தாக்குதல், அவர்களது இராணுவ நிலைப்பாட்டையும், அரசியல் நிலைப்பாட்டையும் ஒருங்கே பறைசாற்றியிருந்தது.

கடந்த காலங்களில் பல தடவைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்புக்குமிடையே நிலவிய யுத்த நிறுத்தங்கள் தோல்வியைத் தழுவியிருந்தன.

இதன் காரணமாகவே புலிகளது ஒரு தலைப்பட்டசமான யுத்த நிறுத்தத்தை தாம் ஏற்பதற்குத் தயாராக இல்லை எனவும் அரச தரப்புத் தெரிவித்திருந்தது.

ஆயினும் தற்போது-கடந்த நான்கு மாதகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அறிவித்து வருகின்ற யுத்த நிறுத்தங்கள் அசட்டை செய்யப்படமுடியாதவையாகவே இருக்கின்றன.

நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகள் ஆரம்பித்த நிலையில் நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் சகிதம் வன்னிக் காட்டுக்குச் சென்று கடந்த நவம்பரில் எல்.ரி.ரி.ஈ.அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்திருந்தார்.

அச்சந்திப்பின்போது சர்வதேச சமூகம் இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு ஒத்துழைக்கத்தயாராக இருக்கின்றது என்ற செய்தியை திரு.சொல்ஹெய்ம் எல்.ரி.ரி.ஈ தலைவரிடத்தில் நேரடியாகவே தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்கத் தாம் தயாராக இருப்பதாகவும் திரு.வே.பிரபாகரன் பதிலளித்திருந்தார்.

கடந்த ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் நிகழ்த்திய மாவீரர் வாரச் செய்தியில்கூட சமரச முயற்சிகளில் அவர் தமக்கிருக்கும் நாட்டத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

இதனைத் தொடர்ந்தே கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ச்சியாக ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

அரசாங்கம் இப்போர் நிறுத்தத்தை நம்பத் தயாரில்லை என்று அறிவித்துள்ள அதேசமயம், ஆயுதப்படையினர், புலிகளது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் பல்வேறு சந்தர்ப்பங்களில் மீறப்பட்டுள்ளதென்றும் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

எவ்வாறாயினும் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக வடக்கு-கிழக்கில் இரு தரப்புமே பாரியளவிலான நேரடி மோதல்களில் குதித்திருக்கவில்லை என்பதையே அறியமுடிகின்றது.

இருப்பினும் கடந்த வாரம் கடற்படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளது, கடற்புலிகளுக்குமிடையே முல்லைத் தீவுக்கடலில் மூண்ட மோதல் காரசாரமாகவே இடம் பெற்றுள்ளது.

வட கிழக்குக் கடற்கரையோரம் கடற்புலிகளின் நல்ல பரிச்சயத்துக்குள்ளான பகுதியாகவே இருக்கின்றது. வடக்கிற்கும் தென்னிலங்கைக்குமிடையிலான கடற்படையினரது போக்குவரத்து முல்லைத்தீவை அண்டிய கடற்பகுதியூடாகவே பெரிதும் இடம் பெற்று வருகின்றது.

ஏற்கனவே பல தடவைகள் இக்கடற்பிராந்தியத்தில் மோதல்கள் வெடித்திருந்தன. புலிகளதும், கடற்படையினரதும் படகுகள், கப்பல்கள் என்பவை தாக்குதல்களுக்குள்ளான அதேசமயம் சரக்குக்கப்பல்கள்கூட தாக்கப்பட்டிருந்தன.

கடந்தவாரம் முல்லைக்கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த இரு டோரா-ரகப் படகுகள் தமிழீழ விடுதலைப்புலிகளது படகுகள் சிலவற்றை எதிர்கொண்டிருந்தன.

டோரா-ரக பீரங்கிப்படகுகள் இஸ்ரேலியத் தயாரிப்புக்களாகும். இவை அதிவேக தாக்குதல் நடவடிக்கைகளுக்காகவே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

டோரா என்பதன் பொருள் இஸ்ரேலின் ஹீப்று பாஷையில் ஆண்குழவி என்றே அர்த்தப்படும்.

எனவே கடந்த வாரம் இரு டோரா ரக பீரங்கிப்படகுகளில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த கடற்படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளது படகுகளை நோக்கித் தாக்குதல் தொடுத்துள்ளனர்.

யுத்த நிறுத்தமென்பது புலிகள் தரப்பிலேயே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கடற்படையினர் முல்லைக் கடற்பரப்பில் தமது கைவரிசையைக் காண்பித்துள்ளனர்.

ஆனால் புலிகள் உடன் செயலில் இறங்கி தாக்குதல்களை மேற்கொண்ட டோராப்படகுகளைச் சுற்றி வளைத்துத் தாக்கியுள்ளனர்.

இத் தாக்குதலில் ஒரு டோராப் படகு முற்றிலுமாக நீரில் மூழ்கியது. மற்றைய படகு பலத்த சேதத்துக்குள்ளான நிலையில் தாக்குதலிடம்பெற்ற பகுதியிலிருந்தும் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டிருந்தது.

கடற்படை வீரர்கள் சிலர் கொல்லப்பட்டதுடன் வேறு சிலர் இத்தாக்குதலில் காணாமல் போயுமிருந்தனர்.

இத் தாக்குதலையடுத்து தமிழீழ விடுதலைப்புலிகள் மீளவும் யுத்த சன்னதம் கொண்டு தமது யுத்த நிறுத்த அறிவிப்பை வாபஸ்பெற்றுக் கொண்டனரோ? என்றே எண்ணத்தோன்றியது.

ஏனெனில் 1995ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட யுத்த நிறுத்தம் கூட திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நங்கூரமிட்டிருந்த இரு பீரங்கிக் கப்பல்கள்மீது எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்திய தாக்குதலையடுத்தே முறிவடைந்திருந்தது.

எனவே அன்று யுத்த நிறுத்தம் கைவிடப்பட்ட பாணியிலேயே இத்தடவையும் புலிகள் முல்லைக் கடற்பகுதித் தாக்குதலையடுத்து தமது யுத்த நிறுத்தத்தை விலக்கிக் கொள்ளலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை முல்லைக்கடலில் கடற்படைக் கப்பல்கள்மீது புலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக விமானப்படை குண்டுவீச்சு விமானங்கள் கிழக்கில் புலிகளது முகாம்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட இடங்கள் மீது குண்டுவீச்சுக்களையும் நடத்தியிருந்தன.

எனவே இப்பரஸ்பரத்தாக்குதல்கள் நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமரச முயற்சிகளைக் குழப்பி விடுமோ எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் இம்மாதம் 24ந் திகதியிலிருந்து மேலும் ஒரு மாதகாலத்துக்குத் தமது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை நீடித்துள்ளமை, சமரச நடவடிக்கைகள்மீது தொடர்ந்து நம்பிக்கை வைக்கத் தூண்டுவதாகவே இருக்கின்றது.

முல்லைத்தீவு கடலில் புலிகள் நடத்திய தாக்குதல் அவர்களது இராணுவ பலமென்பது தொடர்ந்து நல்ல நிலையில் இருக்கின்றதென்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்புக்களை கடந்த ஒரு சில மாதங்களாக அறிவித்து வருவதன் மூலம் புலிகளது இராணுவ ரீதியான பலம் கேள்விக்குரியதாகவே மாறியிருந்தது.

ஆனால் அவர்கள் தமது நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்புடனிருப்பதையே முல்லைக் கடல் தாக்குதல் எடுத்துக் காட்டியுள்ளது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படைக் கப்பல்கள்மீதான தாக்குதலையடுத்து புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளமையே ஒரு புதிய விடயமாக இருக்கின்றது.

ஏனெனில் கடந்த காலங்களில் புலிகள் பெருந்தாக்குதல்களைத் தொடுத்ததையடுத்து தொடர்ச்சியாக மோதல்கள் வெடித்திருந்தன.

ஆனால் இத் தடவை மோதல்கள் தொடருவதற்கு புலிகளே இடமளிக்காமல் இருந்துள்ளனர். தாம் அறிவித்து வந்த ஒரு தலைபட்சமான யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாதகாலம் நீடித்து சமரச நடவடிக்கைகளில் தமக்கிருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

புலிகளது இந்த நிலைப்பாடு அரசியல் ரீதியாக அவர்கள் பெற்றுள்ள முதிர்ச்சியையும் எடுத்துக்காட்டுவதாகவே இருக்கின்றது.

கடந்த வார முல்லைத்தீவுக் கடற்பரப்புத் தாக்குதலையடுத்து இரு வேறு பாதைகள் தென்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

ஒன்று யுத்தத்தை நோக்கிய பாதை; மற்றயது சமரசத்தை நோக்கிய பாதையாகும். இப்பாதைகளில் எதனூடாகச் செல்வதென்பதைத் தீர்மானிப்பதிலேயே இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த எதிர்காலம் தங்கியிருக்கின்றதெனக் கருதலாம்.

## அதிரடி அய்யாத்துரை



***அதிகாரிகளுக்கு ஆணவச்*** செருக்கேறி விட்டால், அதையாரிடம் போய் முட்டுவது என்று தெரிவதில்லை. வன்னியில் இடம் பெயர்ந்தவர்களுக்கு 80 பேர்ஜ் ஒதுக்கச் சொல்லி, அம்மணியோடே போய்ப் பேசிச் சம்மதம் வாங்கியிருந்தார் அந்த 'தேவ'நாமம் கொண்ட தமிழ் அமைச்சர். ஆனால் அம்மணியின் செயலர் ஆருக்கும் சொல்லாமல் வன்னியின் அரச அதிபரை மிரட்டி அதை 40 பேர்ஜ் ஆகக் குறைக்கச் சொல்லி உத்தரவிட்டுத் தன்ர அதிகாரத்தை அளவெடுத்துப் பார்த்திருக்கிறார். விஷயம் தெரிஞ்ச தமிழ் அமைச்சர், பிரதமரைப் பார்த்து "நாங்கள் ஒரு சேஞ்சுக்கு அடுத்த பக்கத்து நாற்காலியில் இருந்து பார்க்கிறதோ?" எண்டு கேட்டதுதான் தாமதம் அந்தச் செயலரின் உத்தரவு அடுத்த கணமே வாபஸ். 'ஆட்டம் ஏனடா பாலா, பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனாயேடா?' என்று தன்னைத் தானே நொந்து கொண்டாராம் நெருப்பைத் தொட்டு விரலைச் சுட்டுக் கொண்ட அந்த அதிகாரி.

***உலகப் பொலிஸ்காரரின்ர தூதுவர்*** யாழ்ப்பாணத்தில நிகழ்த்திய உரையால, உலகில் உள்ள தமிழ் மக்கள் அதிர்ச்சியில உறைந்து போனதாகச் சொல்லினமல்லோ? அமெரிக்க மண்ணிலேயே மசாசுசெட்ஸ் தீர்மானத்தில தமிழீழத்தை ஆதரிச்சு கொடியேற்றின காலம் அடியோட மாறிப்போச்சுதெண்டு இப்பதான் விளங்குது எங்கட ஆக்களுக்கு. மரம் பழுத்தால் வெளவால் வருமெண்டு மேடையில பேசினவை, மரம்பட்டால் கோடாரி வருமெண்டு உணரத்தவறிட்டினமே.

***அதிகாரத்தில இருக்கிற*** தமிழமைச்சரோட தங்கட கட்சி தலைமைப்பிரமுகர்கள் அந்தரங்கமாய் பேசினமெண்டு கேள்விப்பட்டு "எதிரிகளையும் விட துரோகிகள் ஆபத்தானவர்கள்" என்று கத்தினாராம் காந்தமானவர். ஆயுதம் தாங்கின 'அவையளிண்ட' இந்த வசனம் ஜனநாயக தொட்டிக்குள்ள குதிச்சு நீச்சலடிக்கிற 'இவையளிட்ட' வரலாமோ எண்டு விசித்திரமாகப் பார்க்க வேண்டாம். ஆயுதம் வைச்சிருக்கிறதுக்கு ஜனநாயக உரிமை வேணுமெண்டு வாதாடிற வீரப் புறோக்கிராசி அவர். ஆனாலும் "நாங்கள் மற்றைய கட்சிகளோட பேசக் கூடாதென்றால் இவர் மட்டும் பத்துக் கட்சிகளின்ர பேச்சாளராக காட்டிக் கொள்கிறது நியாயமோ?" எண்டு முறுகுகிறார் அந்தக் கட்சியின் ஒரு நடிகர்திலகம்.

***வீட்டிலிருந்த எவரையும்*** புலிகள் சுட்டுக் கொல்லவில்லை என்று பச்சைக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பச்சைக் குழந்தையைப்போல் சொல்லியிருக்கிறார். அமிர்தலிங்கம் முதல் சரோஜினி வரையானோர் வீட்டில் இருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டது அவருக்குத் தெரியாது போலும்.

***யாழ்ப்பாணத்தில்*** வெளிநாட்டு சம்பந்த நிறுவனங்கள் செயற்பட்டு வருவதாலேயே மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறைந்திருப்பதாக உள்ளூர் பிரமுகர் ஒருவர் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் பேசும் போது கூறியிருக்கிறாராம். 'வெளி நாட்டுக்காரர் சொல்லுற ஆலோசனைகளைக்கேட்டு கடுப்பாகிப் போறவை இதையும் யோசிக்கிறது நல்லது' என்கிறார் பிரமுகர்ஒருவர்.

***"முதல் முதலாக*** தமிழீழம் கேட்டதே நாங்கள் தான்!" என்று கூத்தணியின் செயலாளர் முழங்கி இருக்கிறார். அது சரிதான்; ஆனா இப்பவும் அதைத்தான் கேட்கிறீர்களோ என்றபோது அசடு வழிய நின்றாராம்.

***தலையில் நாரதர் குடுமியுடன்*** பளபளக்கும் சரிகை உடைகளுடன், தான் தான் குறிப்பிட்ட சமயத்தின் காவலன் என்று பறைசாற்றிக் கொண்டு திரியும் ஒரு விளம்பரப்பிரியர், தான் தான் எல்லாவற்றுக்கும் முன்னிலையில் இருக்கவேண்டும் என்று முனகிக் கொண்டு திரிகிறார். சில வெளிநாடுகளிலுள்ள எம்மக்கள், இவருடைய தற் பிரசாரங்களில் மயங்கி, அவ்விடங்களுக்கெல்லாம் அழைத்திருந்தனர். சென்ற இடங்களிலெல்லாம் தன் சிறுபுத்தியைக் காட்டி மானத்தை விற்று விட்டுத் திரும்பியுள்ளாராம்.

பிறந்த குழந்தைக்கும்
விக்கல் நிற்குமாம் அன்று
அவன் பெயர்கேட்டால்!
உலகைத் தன்
உள்ளங்கையில் ஏந்தி
உருட்டி விளையாடக்
கனாக்கண்டவன் அவன்.
ஜேர்மனியர்களுக்கு மீட்சி
என்ற தாரக மந்திரத்தை
நம்பவைத்து
வரலாற்றைத் திகைக்க வைத்து
மனிதப் படுகொலைகளையெல்லாம்
அரங்கேற்றியவன் அவன்.
குரூரத்தின் உச்சத்தனமே
வெற்றியின் ஆயுதமென்ற
போதையை ஊட்டி,
மனிதப் படுகொலைகளை ரசிக்கும்
ஈவிரக்கமற்ற சமுதாயமாக
தனது மக்களை மாற்றி,
கொலையுண்ட யூதர்களின்
கொழுப்பிலிருந்து
சவர்க்காரம் தயாரித்து மகிழ்ந்த
வெறிபிடித்த மனநோயாளி அவன்.
இயல்பாக எழுகின்ற
தேசிய வாதத்தை
பூதாகரமான பாஸிசமாக
விஸ்தரித்து
கொடுமைக்கான ஒரு
புதிய சித்தாந்தத்தையே
உலகுக்கு அறிமுகம் செய்தவன்
அவன்.
ஆம், அவன்தான்
சர்வாதிகாரத்தின் மொத்த
உருவமாக
உலகைக் கலக்கிய
இரண்டாம் உலகமகாயுத்தத்தின்
சூத்திரதாரி
அடோல்ஃப் ஹிட்லர்!

# உண்மைத் தொடர் 01

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடொல்ஃப் ஹிட்லர்

ஒரு காலகட்டத்தின் மிக மோசமான சர்வாதிகாரியாக மட்டும் ஹிட்லரைத் தெரிந்துவைத்திருப்பது ஒரு மேலோட்டமான விடயமே. அது ஒரு திகில் நிறைந்த கதையைப் படிக்கும் ரசிப்புத் தன்மைக்கு மட்டுமே தீனியாக அமையும். ஒரு ஹிட்லர் எவ்வாறு உருவானான் என்பதைப் புரிந்துகொள்வதே இதில் எமக்குப் படிப்பினைகளைத் தரும். ஒரு சமுதாயத்தின் பலஹீனத்திலிருந்தே உயிர்ப்புறும் இந்த சர்வாதிகாரிகள் எப்படி அச் சமுதாயத்தையே உயிரற்றதாக்கிவிடுகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஹிட்லர் வெறும் ஹிட்லராலேயே ஹிட்லராக்கப்படவில்லை. அந்நாட்டு மக்களின் அறியாமை, மமதை, தேவைகள், பலஹீனங்கள், தோல்விகள், வெறுப்புகள் யாவுமாகச் சேர்ந்தே ஒரு ஹிட்லரை உருவாக்கின. இல்லையேல் பிறப்பு வழி தெரியாத ஒரு பரிதாபமான மனிதனுக்குள் உறங்கிக்கிடந்த கர்ண கடூரமான ஹிட்லரின் தகைமைகள் எவருக்கும் தெரியாமல் அவனுடனேயே மறைந்துபோயிருக்கும். ஜேர்மனியைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்ய ஒரு இரும்பு மனிதன்தான் தேவை என எண்ணியவர்கள் அதே இரும்பு மனிதனின் காலடியில் நசுங்கியபோது விழித்துக்கொள்ளக் காலம் கடந்துவிட்டது. ஹிட்ரை வீழ்த்த ஒரு பெரும் உலக மகா யுத்தமே தேவைப்பட்டது! ஹிட்லர்! அவன் எந்தப் பலஹீனமான சமுதாயத்திலிருந்தும் மீண்டும் உயிர்ப்புறலாம்.. இதோ அவனின் கதை!

எப்படி ஒரு மனிதனால் மனிதத் தன்மைகளை முற்றிலுமாக இழக்க முடியும்? இந்தக் கேள்விக்கான பதில் அடோல்ஃப் ஹிட்லர் என்பவனின் வாழ்வு முழுவதும் விரிந்து கிடக்கின்றது.

சிலருக்கு ஹிட்லர் வீரதீர சாகசங்கள் புரிந்த கதாநாயகன். இன்றும் சிலரது பார்வையில் அவனொரு கொலை வெறிபிடித்த மிருகம். எவ்வாறாக இருந்தாலும் ஹிட்லர் ஜேர்மனியை ஆட்சி செய்த காலத்தில் அவனது செயற்பாடுகளின் தாக்கத்திலிருந்தது இந்த பூமி; இன்னமும் முழுவதுமாக மீளவில்லை.

ஹிட்லரின் தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்வுகள் விசித்திரமானவை. ஏதோ ஒரு வகையில் குரூரத் தன்மைகளால் ஆக்கிரமிக்கப்பட்டவை. காதல் விவகாரங்களில் அவனுக்கிருந்த ஆர்வம் ஏனைய சாதாரண இளைஞர்களுக்குப் போல் இயல்பானதன்று. நண்பர்களுடன் கூடிக் கும்மாளமடிப்பதிலோ, மதவழிபாட்டுத் தளங்களுக்குச் சென்று தெய்வத்தின் திருப்பாதத்தில் மண்டியிட்டு ஒரு ஆன்மீகவாதியின் தரிசனத்தை பெறுவதிலோ அவனுக்கு அக்கறையிருக்கவில்லை. தன்னையொரு கல்விமானாக வளர்த்துக்கொள்ள அவன் முயற்சி செய்யவில்லை. இவை எதுவும் வேண்டாம்; ஒரு செல்வந்தனாக வரவேண்டும் என்று கூட ஹிட்லர் நினைத்ததாகத் தெரியவில்லை. தனது உடல் நலத்திலும் அவன் கவலையீனமாகவே இருந்தான். எப்பொழுதும் உயர்ந்த குரலில் கதைக்கும் அவனது பிரதான பொழுது போக்கு தனிமையில் பயணம் செய்வதாகவே இருந்தது. தனக்கென ஒரு குடும்பம்; சொந்த பந்தங்கள் இவை அனைத்தும் வீணானவை என்பதே ஹிட்ரின் எண்ணம்.

கோடிக்கணக்கான மக்களின் உயிர்ப் பலிக்கு காரணமாக இருந்த ஹிட்லர் தனது செயலாளர்களுடன் இனிமையாகப் பழகினான். சிறுவர்களுக்கும், மிருகங்களுக்கும் அன்பு செலுத்தக்கூடியவனாகவும் இருந்தான்.

ஹிட்லரின் வாழ்வு பெரும்பாலும் பொதுப்படையானது. தனது தனிப்பட்ட உணர்ச்சிகளைக் கூட அதிகாரத்தை நோக்கிய தன் பயணத்துக்கான படிக்கற்களாக மாற்றுவதிலேயே அவனது சிந்தனை இருந்தது. தன்னுடைய ஆழமான உணர்வு வெளிப்பாடுகள் சகலதையும் அரசியலுக்கும் போருக்குமான தொழிநுட்ப முதலீடுகளாக மாற்றுவதில் அவன் வெற்றி பெற்றான். "தனது மனைவி நாட்டு மக்களே" என்று அவன் உரத்துச்சொன்னான்.

அதிகாரத்தின் கைதியாக தன்னைப் பிணைத்துக் கொண்ட ஹிட்லர் வாழ்வின் அடிமட்டத்தில் இருந்து தன்னந்தனியே போராடி தனது நிலையை அமைத்துக் கொண்ட ஒருவன்.

ஹிட்லர் வறிய குடும்பத்தில் பிறந்தவனல்ல. அவனது தந்தை ஜெர்மனியின் ஹம்ஸ்பேர்க் முடியாட்சியின் கீழ் ஒரு சிரேஷ்ட சுங்க அதிகாரியாக பணியாற்றியவர். அவர் மாகாணத் தலைநகரமான லின்ஸ் சில் 5 பிள்ளைகளுடன் கூடிய தனது குடும்பத்தை முறையாக பராமரித்தார்.

ஹிட்லரின் தந்தை, அன்னா ஸ்ச்சிக் குருபர் என்ற பெண்ணுக்கும் ஒரு யூத இனத்தவருக்கும் பிறந்தவர் என்று தெரிவிக்கப்



படுகின்ற போதும் இது ஆதாரமற்ற கதையென சில வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறெனினும் ஹிட்லரின் தந்தை லின்ஸ், சமூகத்தில் ஒரு கௌரவமான பிரஜையாக வாழ்ந்தார்.

அவருக்கு 52 வயதாக இருக்கும்போது ஜெர்மன் ஆஸ்திரிய எல்லையில் உள்ள பிரனாவு என்ற சிறிய நகரத்தில் 1889ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அடோல்ஃப் ஹிட்லர் பிறந்தான்.

தொழில் நிமித்தம் பிரனாவு சென்றிருந்த ஹிட்லரின் தந்தை தனது மூன்றாவது மனைவியான கிலாரா (ஹிட்லரின் தாய்) சகிதம் குறுகிய காலத்திலேயே மீண்டும் லின்ஸ் திரும்பினார்.

அங்குள்ள ஆரம்பப் பள்ளி ஒன்றில் படித்த ஹிட்லர் அடிக்கடி ஆசிரியர்களுடன் முரண்டு பிடிப்பவனாகவும் ஒல்லியான உடம்பை வைத்துக்கொண்டும்கூட சக மாணவர்களுடன் சண்டை பிடிப்பவனாகவுமே இருந்தான். பாடசாலைக்கு ஒழுங்காக போக மாட்டான். ஆசிரியர்கள் இடும் கட்டளைகளை உதாசீனம் செய்வதில் ஒரு இனம்புரியாத மகிழ்ச்சி ஹிட்லருக்கு ஏற்பட்டது. தாய் மொழியான ஜேர்மனில் மிகவும் கஷ்டப்பட்டே கதைத்தான். கையெழுத்து அதை விட மோசமாக இருந்தது. அனைத்துப் பாடங்களிலும் கடைசி ஆளாக வரும் ஹிட்லர் வரலாற்று பாடத்தில் மட்டும் ஓரளவு பரவாயில்லை. அத்தோடு வரைபடம் கீறுவதில் ஆர்வம் காட்டினான். ஆனால் இத்தனைக்கும் பொதுப்பரீட்சைகள் எல்லாவற்றிலும் ஃபெயிலை தவிர வேறில்லை. தோற்றிய பரீட்சைகள் அனைத்திலும் கோட்டை விட்டான். எனினும் இது குறித்து ஆரம்பத்தில் அவன் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. தான் பரீட்சைகளில் ஃபெயிலானதுக்கு காரணம் வேறு கற்பித்தான். தனது தந்தையின் அடிச்சுவட்டை பின்பற்றி ஒரு அரசாங்க ஊழியராக வருவதில்லை என்று உறுதி பூண்டுள்ளதாகவும், உத்தியோகத்தில் சேருமாறு பெற்றோர் நிர்ப்பந்திப்பதை தவிர்ப்பதற்காகத்தான் ஏற்கனவே திட்டமிட்டு பரீட்சைகளை ஒழுங்காக எழுதவில்லை என்று பிற்காலத்தில் தன்னை நியாயப் படுத்திக் காட்ட முனைந்தான்.

செய்வதைச் செய்து விட்டு அது பூமரங்காக திரும்பி வந்து தன்னைத் தாக்கும் போது அதற்கொரு அர்த்த புஷ்டியான நியாயத்தை சிருஷ்டிப்பதில் ஹிட்லர் சிறுவயது முதலே வல்லவனாக இருந்தான்.

ஹிட்லர் பிறந்து சிறிது காலத்திலேயே சுங்க அதிகாரி பதவியிலிருந்து ஓய்வு பெற்று, விவசாயப் பண்ணை ஒன்றை நடத்திக் கொண்டு தனது மனைவியர்களுடன் காலம் கழித்துவந்த அவனது தந்தை, 1903ஆம் ஆண்டு மரணமானார்.

## ஷானு

தந்தையின் மறைவுக்காக ஹிட்லர் கடும் கவலை கொள்ளவில்லை. ஆனால் 1907 ஆம் ஆண்டு ஹிட்லருக்கு 17 வயதாக இருக்கும் போது தாய் கிலாரா புற்றுநோய் காரணமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் ஹிட்லரின் மனதில் முதல் முதலாக தனிமை குறித்த ஒரு பிரமையை தோற்றுவித்தது. ஆனால் அவன் அதிலிருந்து சுலபத்திலேயே மீண்டுவிட்டான்.

லின்ஸ் வாழ்க்கையை உதறி விட்டு வியன்னாவுக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஹிட்லர் மனதில் உதித்தது. இந்தக் காலப்பகுதியில்தான் தன் வாழ்நாளில் எந்தப் பள்ளிக்கூடத்திலும் படிக்க முடியாத பாடங்களை தனக்கு வியன்னா நகரம் கற்பித்துத் தந்ததாக ஹிட்லர் பின்னாளில் குறிப்பிட்டிருந்தான்.

"அந்த வாழ்க்கை என்னை உறுதியாகப் புடம் போட்டது. அங்கிருந்து நான் பெற்ற அனுபவங்கள் எனது உயர்வுக்குப் பெரிதும் உதவின" என்று அந்த நாட்களை அவன் நினைவு கூர்ந்திருந்தான்.

வருவான்...

# ஊழியரை நடுங்கவைத்த நவோமி



மொடலிங் உலகில் கறுப்பு மின்னல் என வர்ணிக்கப்படுபவர் நவோமி கம்பல். இவர் அண்மையில் இலண்டனில் உள்ள துணிக்கடை ஒன்றுக்குள் புகுந்து அங்குள்ள ஊழியர் ஒருவருடன் பெரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இவர் செய்த கலாட்டாவால் அன்று அங்கு வந்திருந்த வாடிக்கையாளர்கள் தமக்கு வேண்டிய துணிகளைக் கொள்வனவு செய்யாமலேயே திரும்பிப்போய் விட்டனர்.

இலண்டன் நகரில் நடந்த இந்தப் பரபரப்புச் சம்பவம் என்னவென்று தெரியுமா?

சூப்பர் மொடலான நவோமி கம்பல் இலண்டனில் உள்ள பெரிய துணிக்கடை ஒன்றில் உறுப்பினராக இருக்கிறார். இக்கடைக்கு அடிக்கடி செல்லும் நவோமி விதவிதமாக, நவீன ரக ஆடை அணிகளை எடுப்பார்.

சமீபத்தில் இவர் இதேபோல் இக் கடைக்குச் சென்றார். ஊழியர்கள் வேறு வாடிக்கையாளர்களுடன் விற்பனையில் ஈடுபட்டிருந்ததால் நவோமியைக் கண்டு கொள்ளவில்லை. கொஞ்சம் நேரம் பொறுத்துப் பார்த்த நவோமி கடையில் இருந்த குறிப்பிட்ட ஊழியர் ஒருவரைத் திட்டித் தீர்த்து விட்டார்.

நவோமியின் ஆவேசத்தைக்கண்ட அந்த ஊழியர் அலறி அடித்துக் கொண்டு ஓடியே விட்டார்.

கடை உரிமையாளர் நவோமியிடம் வந்து,

"வாடிக்கையாளர்கள் சற்று அதிகம் இருந்ததால் உங்களைக் கவனியாது விட்டிருப்பார்கள். இனி அப்படி நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன்" என்று எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். நவோமியோ இதைச் சற்றும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

"உங்களது கடையில் இதுவரை நான் உறுப்பினராக இருந்தது என் தப்புத்தான்" என்று கூறிவிட்டுத் தனது சந்தாவைத் திருப்பப் பெற்றுக் கொண்டு விட்டார்.

இதற்கு முன்பு கூட ஒரு தடவை இவர் தனது உதவியாளரை தனது செல்லிடப்பேசியால் தாக்கிக் காயப்படுத்தியுமுள்ளார்.

நவோமி கம்பல் தனது கோபக்கனலை அவ்வப்போது வெளிப்படுத்தி பக்கத்தில் இருப்பவர்கள் நடுநடுங்க வைத்து விடுவார்.

# ஜப்பான் பெண்களுக்குத் தொந்தரவு

கூட்டம் நிரம்பி வழியும் இடங்களில் பெண்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் ஆண்கள் உலகின் பலபாகங்களிலும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஜப்பான் நாட்டில் இப்படி பெண்கள் கூட்டம் அதிகமா இருக்கும் பஸ் மற்றும் ரயில்களில் ஆண்கள் கொடுக்கும் தொந்தரவுகள் ஏராளம். இதில் அதிகம் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் ஜப்பான் நாட்டின் பாடசாலை மாணவிகள்.

பஸ்கள் மற்றும் ரயில்களில் பாடசாலை செல்லும் மாணவிகளின் மீது தமது கைவரிசையைக் காட்டும் இவர்கள், மாணவிகள் இதை வெளியே சொல்லத்தயங்குவதால் தமது கைவரிசையை ஜரூராக நடத்துகின்றார்கள்.

இதனால் உயர்வகுப்புக்களில் படிக்கும் ஜப்பான் நாட்டு மாணவிகள் ரயில் மற்றும் பஸ்களில் பாடசாலைக்குச் செல்ல அஞ்சுகிறார்கள்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ரயில் மற்றும் பஸ்களில் பயணிக்கும் 400 கல்லூரி மாணவிகளிடம் எடுக்கப்பட்ட ஆய்வின் மூலம் 70 சதவீதம் பேர் ஆண்களின் தொல்லைகளால் அவதிப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இப்படிப்பட்ட காமவெறியர்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்க அந்த மாணவிகள், 'அவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்க வேண்டும் என்றும் பெண்களுக்கென ரயில்களில் தனியாக பெட்டி ஒதுக்கப்பட வேண்டுமெனவும்' அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஜப்பானிய அரசு இந்தக் காமவெறியர்களுக்கெதிராகப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



பஸ் மற்றும் ரயில்களில் சாதாரண உடைகளில் நின்று கண்காணிக்கும் பொலிசார் பெண்களிடம் தமது கைவரிசையைக் காட்டுபவர்களைக் கைது செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு உடனடியாக சுமார் 40 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படுகிறது.

அத்துடன் டோக்கியோவில் உள்ள 'கியோ' மின்சார ரயில் நிர்வாகமும் மாணவிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு தமது ரயில்களில் பெண்களுக்கென கூடுதலான பெட்டிகளை விட முடிவு செய்திருக்கிறது.

இந்த அறிவிப்பால் ஜப்பான் பெண்கள் குதூகலமாகி இருக்கிறார்கள்.

# தந்தையின் காதலியுடன் தனயன்



கமீலா பாக்கர் பவுல்ஸ் ஒரு வகையில் நன்கு பிரசித்தமானவர். இளவரசர் சார்ள்ஸ்–டயனா தம்பதியினரின் வாழ்வைச் சிதைத்தவர். இறுதியில் இளவரசி டயானாவின் மறைவுக்கே காரணமானவர்.

இளவரசர் சார்ள்ஸ் கமீலா மீது கொண்ட காதலைத் துறக்க விரும்பவில்லை. இருவருக்குமிடையில் தொடர்ந்து உறவுகள் நடந்து வருகின்றன.

இளவரசர் வில்லியமும் ஹரியும் தங்களுடைய பெற்றாரின் பிரிவுக்கும் தங்கள் தாயை இழப்பதற்கும் காரணமாக இருந்த கமீலாவைத் தங்கள் சிற்றன்னையாக ஏற்றுக் கொள்ள விரும்ப மாட்டார்கள் என்றே எல்லாரும் கருதினர்கள்.

ஆனால் இவர்கள் இருவரும் கமீலாவை வெறுத்து ஒதுக்கவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் கமீலா சென். ஜேம்ஸ் மாளிகைக்கு வந்திருந்த அன்றைய தினமே கமீலாவை இளவரசர் வில்லியமிற்குப் பிடித்து விட்டது.

இப்பொழுதெல்லாம் இளவரசர் வில்லியம் பங்கேற்கும் பொது நிகழ்ச்சிகளில் தன்னுடன் சேர்ந்து பங்குபற்றுமாறு தனது தந்தையார் இளவரசர் சார்ள்ஸின் காதலி 53 வயதான் கமீலாவையும் அழைத்துக் கொண்டு போகிறார் வில்லியம்.

# கால் அழகிகள்

↓ நடனம் என்பதை எப்படி வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் ஆடலாம் என்பது போல் தண்ணீருக்கடியில் நீன்று கால்கள் வெளியே தெரியும் படி நடனமாடும் முறையை ஹென்றி அலைன் அன் செனோஸ் என்பவர் கண்டு பிடித்திருக்கிறார்.

ஆனால் நடனமணிகளுக்குப் பதிலாக நடனமணிகளைப் போல் இருக்கும் பொம்மைகளை வைத்து இவர் ஆட்டுவிக்கிறார்.


படத்தில் கவர்ச்சியான கால்களை நீட்டியபடி நடனமாடுவது போல் புற்தரைகளுக்குள் புதைக்கப்பட்டிருக்கும் நடன அழகிகள் (பொம்மைகள்) ஜெர்மனியில் உள்ள மின்ஸ்டர் நகரில் இருக்கும் பூங்காவில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

# சாய்ந்த கட்டடம்


→ கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் கொரிய நாட்டின் பூசான் பிரதேச கடற்கரையைத் தாண்டிய புயல் காற்றுப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது.

பூசான் பிரதேசத்தின் பிரதான இ-மாட் என்ற சந்தையின் 8 மாடிக் கட்டடம் ஒன்று புயல் காற்றினால் 20 பாகை சாய்ந்து விட்டது.

சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்களது வாகனங்களைப் பாதுகாப்பது சம்பந்தமான நிர்வாகத்தை மேற்கொள்ளும் இக் கட்டடம் மேலும் சாய்ந்து விழுந்து விடாமல் இருக்க, அருகில் இருக்கும் கட்டடங்களுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது.









# இடமாற்றம்

← பூனைகள் குட்டி ஈன்றவுடன், தமது குட்டிகளை வாயினால் கவ்விக் கொண்டு, அடிக்கடி அவற்றின் இடங்களை மாற்றுவதைப் பார்த்திருப்பீர்கள்.

இதே பழக்கம் காட்டு ராஜா என வர்ணிக்கப்படும் சிங்கத்திற்கும் இருக்கிறது. பெண் சிங்கங்கள் அடிக்கடி தமது குட்டிகளை வாயினால் கவ்விக் கொண்டு இடத்தை மாற்றிக் கொள்ளும்.

மியூனிக் விலங்கியல் பூங்காவில் இங்கா என்ற பெண் சிங்கம் தனது குட்டியைக் கவ்விக் கொண்டு வேறோர் இடத்திற்குச் செல்வதையே படத்தில் பார்க்கிறீர்கள். கடந்த வருடம் இச் சிங்கம் 4 குட்டிகளை ஈன்றிருந்தது. அவற்றில் ஒன்றுதான் இது.

## தகவல் பெட்டி

# பாலம் உடைப்பு

↑ அண்மையில் தாய்வான் நாட்டில் இயற்கையின் சீற்றத்தில் நேர்ந்த விபத்தே இது.

அங்கு தொடர்ந்து பெய்யும் பருவகால மழை வழமையை விட சற்று அதிகம் பெய்ததால் பெரும் பாலம் ஒன்றின் அடித்தளம் ஆட்டம் கண்டு உடைந்து வீழ்ந்து விட்டது. 'கா ஒப்பிங்' என்று அழைக்கப்படும் இப்பாலம் உடைந்தபோது, அது தெரியாமல் இப்பாலம் மேல் வந்த வாகனங்கள் பலத்த சேதத்துக்குள்ளாகின.

இந்தப் பாலம் உடைந்தபோது வாகனங்களில் சென்ற 7 பேர் உயிரிழந்தனர் சுமார் 22 பேர் வரை படுகாயமடைந்தனர்.

## காதோடு சொல்லுகிறோம்

தேர்தல் பிரசாரம் சூடு பிடித்திருக்கும் தமிழகத்தில் நடிக, நடிகைவரைத் தம்பக்கம் இழுப்பதில் கட்சிகளிடையே பலத்த போட்டியாம். தொடை அழகைக் காட்டி முன்னணிக்கு வந்த 'தேவலோக' நடன மணியின் பெயர் கொண்ட நடிகையைத் தம்மோடு இணையும் படி கட்சி ஒன்று அழைப்பு விடுத்ததாம். உடனடியாக அதற்குச் சம்மதம் தெரிவித்த நடிகை, 'தனக்குச் சில கோடிகளைக் கொடுத்தால் உடனே தயார்' என்று கூறிவிட்டாராம்.

இப்போது புதிய படவாய்ப்புக்களின்றி இருக்கும் இரண்டெழுத்துக் கன்னழகி நடிகையிடம் ஒரு செல்லிடப்பேசி இருக்கிறதாம். இந்தியாவின் எந்த மூலையில் அவர் இருந்தாலும் தொடர்பு கொள்ளும் வசதி உடைய அந்தத் தொலைபேசி இலக்கத்தை ஒருவரிடம் மட்டும் கொடுத்து அவருடன் மட்டும் அளவளாவி வருகிறாராம். 'அவர் யாராக இருக்கும்' என்பது தான் பலரால் எழுப்படும் கேள்வியாம்.

தனது அடுத்த படத்திலும் தன்னால் அறிமுகமாகிப் பெண்களின் மனதை 'அலைபாய' வைத்த நடிகரையே நாயகனாக்கத் திட்டமிட்டிருந்தாராம் மணியான இயக்குநர். அதற்கு முன் அவரது சிஷ்யர் இயக்கும் 'மௌனச் சத்த' படத்தின் படப்பிடிப்பில் 'அலை பாயும்' நடிகர் ஆடும் ஆட்டத்தைப் பார்த்து அந்த எண்ணத்தையே கைவிட்டு விட்டாராம் இயக்குநர்.

மும்பையிலிருந்து வந்து தமிழில் கலக்கி வரும் பிரகாசமான நடிகை முன்னணிக்கு வந்த பின், தனது தாயாருடன் தினமும் தகராறு செய்து வருகிறாராம். படப்பிடிப்புத்தளங்களில் அம்மா என்று கூடப்பாராது பலர் முன்னிலையில் திட்டித் தீர்க்கிறாராம். மகளின் திட்டைக் கேட்டு மனம் வெதும்பும் தாய்க்குலம் ஏனைய நட்சத்திரங்களிடம் மகள் இழைக்கும் கொடுமைகளைக் கூறிப் புலம்பி வருகிறாராம்.

## ஆர்.பி.சௌத்ரியின் 'புன்னகை தேசம்'

பல வெற்றிப்படங்களைத் தயாரித்த ஆர்.பி.சௌத்ரி இப்போது 'விண்ணுக்கும் மண்ணுக்கும்', 'ஆனந்தம்', 'ஷாஜகான்' ஆகிய படங்களைத் தயாரித்து வருகிறார்.

இதையடுத்து இவர் 'புன்னகை தேசம்' என்ற படத்தை தயாரிக்கவுள்ளார். இப்படத்தில் குணால், அப்சவிர்தன், தருண், தாமு ஆகிய நால்வர் கதாநாயகன்களாக நடிக்கின்றனர்.

கதாநாயகிகளாக பிரீதா, ஸ்நேகா நடிக்கிறார்கள். இவர்களுடன் மலேசியா வாசுதேவன், நிழல்கள் ரவி, மயில்சாமி, சத்யப்பிரியா, வடிவுக்கரசி மற்றும் பலர் நடிக்கின்றனர்.


கதை-திரைக்கதை-வசனம் எழுதி இயக்குகிறார் ஜே.ஷாஜகான். இவர் விக்ரமனிடம் உதவியாளராகப் பணியாற்றியவர்.

## பிரபுவால் நாயகனான விவேக்

அன்னா கண்ணதாசன் இயக்கத்தில் விவேக் முதல் முறையாகக் கதாநாயகனாக நடித்து வரும் 'பஞ்ச' படத்தின் கதை 'பஞ்சாபி ஹவுஸ்' என்ற மலையாள வெற்றிப்படத்தின் தழுவலாகும்.


மலையாளநடிகர் திலீப்-ஜோமோள் (பிரியாத வரம் வேண்டும்' படத்தில் நடித்தவர்) நடித்த 'பஞ்சாபி ஹவுஸ்' படத்தின் தமிழ் உரிமையை வாங்கிய இயக்குநர் முதலில் பிரபுவிடம் சென்றார்.

பிரபு பிஸியாக இருந்ததால் அந்த வாய்ப்பு விவேக்கிடம் சென்று விட்டது. விவேக் கதாநாயகனாகி விட்டார்.


ஆகாஷ்-விந்தியா
படம்: கற்றது காதல் அளவு


கரண்-கௌசல்யா
படம்: எங்களுக்கும் காலம் வரும்

# சினி


மகேஸ்வரி

## மினிசினி

- விஜயகாந்த் நடிக்கும் 'நரசிம்மா' படத்தை இயக்கி வரும் திருப்பதிசாமி அடுத்து விஜய் நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார். 'வேலன்' என்று பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தில் முற்றிலும் கிராமத்து இளைஞனாக நடிக்கவுள்ளார் விஜய்.
- விக்ரமன் இயக்கத்தில் கார்த்திக்-ரோஜா நடித்து வெற்றி பெற்ற 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' இப்போது கன்னடத்தில் தயாராகி வருகிறது. இதில், ரவிச்சந்திரன்-தேவயானி ஜோடியாக நடிக்கிறார்கள்.
- 'தாஜ்மகால்' படத்தில் சொந்தக்குரலில் பேசிய மனோஜுக்கு 'கடல் பூக்கள்' படத்தில் நடிகர் ரஞ்சித் பின்னணிக் குரல் கொடுத்திருக்கிறார். சரண் இயக்கும் 'அல்லி அர்ஜுனா'வில் சொந்தக் குரலில் பேசி நடிக்கிறார் மனோஜ்.
- சில வருடங்களுக்கு முன் ஆனந்தபாபு கதாநாயகனாக நடித்த 'நான் பேச நினைப்பதெல்லாம்' படப்பெயரின் சாயலோடு உருவாகி வரும் படம் 'நான் பாட நினைப்பதெல்லாம்' இதில் சுஹாசினி நாயகியாக நடிக்கிறார்.
- கௌதம் வாசுதேவ் இயக்கத்தில் மாதவன்-ரீமா சென் நடித்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'மின்னலே' படத்தை இந்தியில் மொழிமாற்றி வெளியிடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.
- சத்யராஜ் நடிக்க 'அடிமைகள்' என்ற படத்தைத் தயாரிக்கும் ஆபாவாணன், இப்படத்தை நிறுத்தி விட்டு தெலுங்குப் படம் ஒன்றைத் தயாரித்து வருகிறார். இதில் ராம்கி ரோஜா ஜோடியாக நடிக்கிறார்கள்.
- இதுநாள் வரை கதாநாயகியாக நடித்து வந்த சுவாதி, பிவாசு இயக்கும் 'அசத்தல்' படத்தில் ரமேஷ் கண்ணாவுக்கு ஜோடியாக நகைச்சுவை வேடத்தில் நடித்து வருகிறார்.
- நெப்போலியன் உதயா இணைந்து நடிக்கும் 'கலகலப்பு' படத்தைத் தயாரித்து வருபவர் உதயாவின் தந்தை ஏ.எல். அழகப்பன். இதையடுத்து இவர் உதயா தனிக் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

## நந்துவுக்காக 12 மணிநேர மேக்-அப்

'இந்தியன்' படத்தில் வரும் தாத்தாவுக்காக 5 மணிநேரம் மேக்-அப் செய்த கமல் இப்போது 'ஆளவந்தான்' படத்தில் வரும் ஒரு வேடத்திற்காக 12 மணி நேரம் எடுத்து மேக்-அப் செய்துள்ளார். காலை ஏழு மணிக்கு ஒப்பனை அறைக்குள் நுழையும் கமல் ஒப்பனை முடிய மாலை ஏழு மணியாகி விடும். அதன் பின் தான் படப்பிடிப்பு.

கலைப்புலி தாணு தயாரிக்கும் 'ஆளவந்தான்' படத்தில் அண்ணன்-தம்பி என இரட்டை வேடங்களில் நடித்து வருகிறார். அண்ணன் நந்து-தம்பி விஜய் என வெவ்வேறுபட்ட இருவேடங்களில் ஒன்றான நந்துவுக்காகத்தான் இத்தனை சிரமத்தை எடுக்கிறார் கமல்.

நந்துவுக்காக மொட்டை போட்டு, பச்சை குத்திக் கொண்டு நடிக்கும் கமல், படத்தில் ஒரு பாடலையும் பாடியுள்ளார். சங்கர் மகாதேவன்-ஏசான்லாய் இசையமைப்பில் வைரமுத்து எழுதிய, 'கடவுள் பாதி மிருகம் பாதி, கலந்து செய்த கலவைநான்' என்ற பாடலை கமல் இப்படத்தில் பாடியுள்ளார்.

சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் உருவாகும் இப்படத்தின் வேலைகள் 90 சதவீதம் முடிந்து விட்டன. அநேகமாக தமிழ்ப்புத்தாண்டுக்கு 'ஆளவந்தான்' திரைக்கு வருவான்.

## 'பத்ரி' பாடல்கள் வெளிநாடுகளில்

விஜய் நடித்து வெற்றி பெற்ற 'குஷி' படத்தின் பாடல் காட்சி ஒன்று நியூஸிலாந்திலும் இன்னொரு வெற்றிப்படமான 'ப்ரெண்ட்ஸ்' படத்தின் பாடல் காட்சி ஒன்று சுவிற்ஸர்லாந்திலும் படமாக்கப்பட்டன.

இதைக் கருத்திற்கொண்டு விஜய் தற்போது நடித்து வரும 'பத்ரி' படத்தின் பாடல்காட்சிகளை நியூஸிலாந்து மற்றும் சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் படமாக்குகின்றனர்.

## மனிஷாவின் முடிவு

தமிழில் கமலுக்கு ஜோடியாக 'ஆளவந்தானி'ல் நடித்து வரும் இந்தி நடிகை மனிஷா கொய்ராலா, இந்தித் திரையுலகின் இளம்புயல் ஹ்ரித்திக் ரோஷனுடன் இணைந்து படங்களில் நடிக்க மாட்டேன் என்று முடிவெடுத்துள்ளார்.

ஹ்ரித்திக் நேபாளிகளை இழிவாகப் பேசியதாக வந்த செய்தியால் நேபாளத்தில் பெரும் பிரச்சனையே தோன்றியிருந்தது. இதற்குத் தண்டனையாகத்தான் ஹ்ரித்திக்குடன் தான் ஜோடி சேரமாட்டேன் என்று மனிஷா முடிவெடுத்துள்ளார்.

ஆனால் இந்தியில் மார்க்கெட் இல்லாமல் இருக்கும் மனிஷாவை இப்போது யாரும் சீண்டுவதேயில்லை: இதில் ஹ்ரித்திக் ரோஷனுக்கு ஜோடியாக நடிக்க வைக்க இவரை யாரும் அணுக மாட்டார்கள். இந்த விஷயத்தை நன்கு தெரிந்திருப்பதால்தான் மனிஷா இப்படிக் கூறியிருக்கிறார் என்கின்றனர்.

## பெயர் மாறக் காரணம்

'தலைமுறை' படத்தில் அறிமுகமான லட்சுமி தனது பெயரை இப்போது ரித்திகா என்று மாற்றி வைத்துக்கொண்டு நடித்து வருகிறார். இவர் தனது பெயரை மாற்றியதற்கு என்ன காரணம் தெரியுமா?

போதை மருந்துக் கடத்தல்காரர் ஒருவர் தயாரித்த 'குழந்தை' படத்தில் நடித்த லட்சுமி, தயாரிப்பாளர் போதை மருந்துக்கடத்தலின் போது சிக்கியதால் தனது இமேஜ் பாதித்து விடக்கூடாது என்பதற்காகத்தான் தனது பெயரை மாற்றியுள்ளார்.

## அருண்குமாரின் தியாகம்

அஜித், விஜய், சூர்யா என இளம்நாயகர்கள் எல்லாரும் வித்தியாசமான கதைகளில் தோற்றத்தை மாற்றிக்கொண்டு நடித்துக் கொண்டிருக்கும் வேளையில் அருண்குமாரும் 'பாண்டவர் பூமி' படத்திற்காகத் தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டு நடிக்கிறார்.

சேரன் இயக்கும் இப்படத்தில் முழு ஈடுபாட்டோடு நடிப்பதற்காக சில படங்களில் நடிக்க வந்த வாய்ப்புக்களையும் நிராகரித்து விட்டார். சரத்குமாருடன் இணைந்து அருண்குமார் நடிப்பதாக இருந்த 'தம்பியுடையான்' படமும் அருண்குமார் நிராகரித்த படங்களில் ஒன்று.

## 'அழகான நாட்கள்' ஆரம்பம்

கார்த்திக்-சிம்ரான் முதல்முறையாக இணைந்து நடிக்கப் பூஜை போடப்பட்ட 'அழகான நாட்கள்' படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

சுந்தர்.சி கதை-திரைக்கதை அமைத்து இயக்கும் இப்படத்தில் மும்தாஜ், பிரகாஷ்ராஜ் செந்தில், கவுண்டமணி, காக்கா ராதாகிருஷ்ணன், டெல்லி கணேஷ், சத்யப்பிரியா உட்பட பலர் நடிக்கின்றனர்.





# விசிட்

## தமாஷாக மாறிய வாய்ஜாலம்

அஹா புரடக்ஷன் சார்பில் சின்னி ஜெயந்த் முக்கிய வேடத்தில் நடிக்கும் 'வாய்ஜாலம்' என்ற படத்தின் பெயர் இப்போது 'தமாஷ்' என்று மாற்றப் பட்டுள்ளது.

மிமிக்ரி கலைஞர் ஒருவரது வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை மையமாக வைத்து தயாரான இப்படத்தில் மிமிக்ரி கலைஞராக நடிப்பவர் சின்னி ஜெயந்த்.

மேலும் ப்ரியா ராமன், பூனம், விஜுச்சக்கரவர்த்தி, காந்திமதி, தாமு உட்பட பலர் நடிக்கின்றனர்.

திரைக்கதை வசனம் எழுதி இயக்குபவர் ஹரிஷ்.

## மகளிர் மட்டும்

கமலஹாசன் தயாரிப்பில் ரேவதி-ஊர்வசி-ரோஹினி நடித்த படம் 'மகளிர்மட்டும்'. இப்படத்தில் நடித்த ரேவதி இப்போது மகளிர் மட்டும் பணி யாற்றும் ஆங்கிலப்படம் ஒன்றை எடுத்து வருகிறார்.

'மை ஃபிரெண்ட்ஸ்' என்ற இந்த ஆங்கிலப்படத்தில் பணியாற்றுபவர்கள் அனைவரும் பெண்கள். பாடல்கள்-தாமரை, இசை-பவதாரிணி, வசனம்-ப்ரியா (மணிரத்னத்திடம் உதவியாளராகப் பணி யாற்றியவர்), ஒளிப்பதிவு-ஃபேஸியா (ஸ்ரீராமின் உதவியாளர்) தயாரிப்பு. இயக்கம்-ரேவதி.

## புதுமுகங்களின் 'தேங்க்ஸ்'

புனிதமான நட்பை வைத்துப் புதிய படம் ஒன்றை உருவாக்கும் அனைவரும் புதுமுகங்களே.

புதிய தயாரிப்பாளர் கே.ராமகிருஷ்ணன் தயாரிக்க, புதிய இயக்குநர் வாமனன் என்பவர் இயக்கும் இப்படத்திற்கு 'தேங்க்ஸ்' என்று பெயரிட்டுள்ளார்கள்.

புதுமுகங்களான சத்யா-ஸ்ரீதர்ஷா ஜோடியுடன் வையாபுரி, சாப்ளின் பாலு, வெண்ணிற ஆடை மூர்த்தி வடிவுக்கரசி உட்பட பலர் நடிக்கின்றனர்.

## முகப்பில்

தேவயாணி

படம்: விண்ணுக்கும் மண்ணுக்கும்

கார்த்திக்

## தயாரிப்பாளரின் செண்டிமெண்ட்

சூப்பர் குட் ஃபிலிம்ஸ் ஆர்.பி.சௌத்ரி செண்டிமெண்டான தயாரிப்பாளர். ஷாஜகான் என்ற புதிய இயக்குநரை வைத்துப் படமொன்றைத் தயரிக்கும் இவர், தான் தயாரிக்கும் வேறு படமொன்றுக்கு 'ஷாஜகான்' என்று பெயரிட்டுள்ளார்.

இதேபோல் அற்புதன் என்ற புதிய இயக்குநருக்கு வாய்ப்பளித்திருக்கும் இவர் அப்படத்திற்கு 'அற்புதம்' என்று பெயரிட்டிருக்கிறார்.

## மீண்டும் தயாராகும் கமல் படம்

சுமார் 28 வருடங்களுக்கு முன் கமல்-ஜெயசுதா இணைந்து நடித்த 'ராசலீலா' என்ற மலையாளப்படம், பின் 'உணர்ச்சிகள்' என்ற பெயரில் கமல்-ஜெயசுதா நடித்துத் தமிழிலும் வெளியாகியது.

இப்போது இதே கதையை வைத்து 'ராசலீலா' என்ற பெயரில் மீண்டும் எடுக்கிறார்கள். புதிய 'ராசலீலா' படத்தில் வெற்றி-ஷகீலா நடிக்கிறார்கள். இந்தப் படத்தை இயக்குகிறார் ரோஷன்.

திருமணமாகி சில நாட்களிலேயே விதவையான ஓர் இளம்பெண்ணின் அண்ணன், தங்கையின் மனவேதனை அறியாது தனது மனைவியுடன் சந்தோஷமாக இருக்கிறான். இது தங்கையின் மனதில் சலனத்தை ஏற்படுத்த அவளது பார்வை வேலைக்காரன்மீது திரும்புகிறது. முடிவில் அவர்களின் நிலை என்ன என்பதுதான் இப்படத்தின் கதை.



இஷாக்-அபிநா

படம்: பூவே பெண் பூவே



திரையுலக மறுபக்கம் 193

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## அரைக்கோடியை அமுக்கிக்கொண்ட அறிமுக இயக்குநர்

திரைப்படம் ஒன்றை எடுப்பது சமுத்திரம் நடுவே பெரிய கப்பல் ஒன்றைச் செலுத்திச் செல்வதற்கு ஒப்பாகும் என்று படவுலகைச் சேர்ந்தவர்கள் கூறுவார்கள்.

கப்பல் தலைவன் எனப்படும் இயக்குநர் வசம் படவேலைகளை ஒப்படைத்து விட்டு, கப்பல் என்னும் திரைப்படம் நல்லபடியாகக் கரைசேர வேண்டும் என நினைப்பார் கப்பல் சொந்தக்காரன் என்ற படத் தயாரிப்பாளர்.

தம்மை நம்பி பல இலட்சக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்யும் தயாரிப்பாளர்களைப் பல இயக்குநர்கள் நன்றிக்குரியவர்களாகக் கருதுவதில்லை.

நன்றிக்குரியவர்களாகக் கருதாவிட்டாலும் தயாரிப்பாளர்களின் நடுமுதுகில் குத்தாமல் இருந்தாலே பெரிய காரியம்தான்.

புரட்சிக் கவி ஒருவரது வாழ்க்கையைப் படமாக்கிய ஒரு பட நிறுவனம், தொடர்ந்து சில படங்களைத் தயாரித்து வருகிறது. திறமையுள்ள புதியவர்களை ஊக்குவிக்கும் இந்த நிறுவனம் சமீபத்தில் குழந்தைகள் பற்றிய படமொன்றை தைரியமாக எடுத்தது.

தைரியம் என்று சொல்வதற்குக்காரணம் என்னவெனில் டூயட் பாடல்களோ, கார்த்துரத்தல்களோ இன்னபிற மசாலா சமாச்சாரங்களோ இல்லாமல் கலைப்படம் போன்று நல்லதொரு கருத்தை இப்படம் கூறியிருந்தது.

இப்படத்தை இயக்கியவர் இந்திய தேசபிதாவின் பெயரைத் தன் பெயரின் முன்பாதியாகக் கொண்டவர். மெகா ஹிட் படங்களை இயக்கிய இயக்குநரிடம் உதவியாளராக இருந்து இவர் தனியாக வந்து இயக்கிய முதல் படம் இன்னமும் வெளியாகவில்லை.

இவரது திறமையைப் பார்த்துத் தான் இந்தக் குழந்தைகள் படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. 50 இலட்ச இந்திய ரூபாயில் முடிந்து விட்ட இப்படத்திற்கு மேலும் 50 இலட்ச ரூபா சேர்த்து ஒரு கோடி என்று கணக்குக் காட்டி தயாரிப்பாளரிடமிருந்து பணத்தைக் கறந்துவிட்டார் இவர்.

ஒரே படத்தின் மூலம் இலட்சாதிபதியாகி விட்ட இந்த இயக்குநரைப் போல் அந்தப் பட நிறுவனத்திலிருந்து ஆளாளுக்கு பணத்தைச் சுருட்டி வருகிறார்கள்.

இதேபோல் 'டிவன்ரைன்ஸ் டே' படத்தில் அறிமுகமான மூன்றெழுத்து நாயகனையும் நடன சுந்தரத்தின் காதலியின் தங்கையையும் இணைத்துப் படமொன்றை இயக்கினார் புதிய இயக்குநர் ஒருவர்.

ஒரேயொரு தமிழ்ப்படத்தில் மட்டும் நடித்திருந்த அந்தக் கதாநாயகனைத் தயாரிப்பாளரிடம் அறிமுகப்படுத்தும்போது அவருக்கு ஊதியமாக 10 இலகரம் கொடுக்கும்படி கூறியிருந்தார் அந்தப் புது இயக்குநர்.

தயாரிப்பாளரும் அதற்குச் சம்மதித்து 10 இலகரத்தை அந்த இயக்குநரிடம் கொடுக்க, அவரோ அதில் பாதியை அந்தக் கதாநாயகனுக்குக் கொடுத்து விட்டு மீதியைத் தான் ஏப்பம் விட்டுள்ளார்.

## பிரமாண்டமான பிரசாந்த் படம்

மணிரத்னத்தின் உதவியாளர் சுசி கணேசன் இயக்கத்தில் பிரசாந்த்-ஸ்நேகா ஜோடியாக நடித்திருக்கும் 'விரும்புகிறேன்' படம் நன்றாக வந்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

படத்தில் தீயணைப்புப்படை வீரராக நடிக்கும் பிரசாந்த் கரும்புத் தோட்டத்தில் பற்றிய தீயை அணைக்கும் காட்சியில் டூப் இல்லாமல் துணிச்சலாக நடித்துள்ளார்.

கரும்புத் தோட்டத்தில் பற்றிக்கொள்ளும் தீயை அணைக்கும் காட்சிக்காக நிஜமாகவே ஏக்கர் கணக்கில் விளைந்த கரும்புகளுடன்கூடிய கரும்புத் தோட்டத்தை வாங்கிக் கொளுத்தியிருக்கிறார்கள். இப்படி படத்தில் வரும் பிரமாண்டமான காட்சிகளை அழகாகப் படம் பிடித்துள்ளார் கே.வி.ஆனந்த்.

## மறுவாழ்வால் மறுவாய்ப்பு

சரிந்து போயிருந்த சரத்குமாரின் மார்க்கெட்டை சற்றுத் தூக்கி நிறுத்திய படம் 'மாயி'. திரையுலகில் தனக்கு மறுவாழ்வளித்த 'மாயி' படத்தின் இயக்குநர் சூர்யாபிரகாஷிற்கு மறுவாய்ப்புக் கொடுத்துள்ளார் சரத்.

'மாயி' படக் கூட்டணி மறுபடி இணையும் புதிய பட அறிப்பு விரைவில் வெளியாகும்.

## பார்த்திபனின் புதிய பாதை

சின்னத்திரைத் தொடர் ஒன்றைத் தயாரிக்க 'சன்.டி.வி.' நிறுவனத்திடம் விண்ணப்பித்திருக்கிறார் பார்த்திபன். பார்த்திபனின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் விரைவில் வித்தியாசமான தொடர் ஒன்றைப் பார்க்கலாம்.

## பதுங்கும் முருகதாஸ்

அஜித் நடித்த 'தீனா' வெற்றிப் படத்தை இயக்கிய முருகதாஸிற்குப் பல படவாய்ப்புக்கள் தேடி வந்துள்ளன. இருப்பினும் இரண்டு படங்களை மட்டும் ஒப்புக் கொண்டுள்ளார். அதுவும் அவற்றை 6 மாதங்களின் பின்பே இயக்கவுள்ளார்.

எதற்காக 6 மாதங்கள் தெரியுமா? இந்த 6 மாதகாலத்தில் நல்ல கதையாகத் தேடிப்பிடித்து திரைக்கதை அமைத்து முதல் படத்தைப் போல் வெற்றிப்படமாக்கத்தானாம்.

## லூட்டி எப்படி?

'என்னம்மாக்கண்ணு' படத்தைத் தயாரித்த துரையின் இரண்டாவது தயாரிபுத்தான் 'லூட்டி'. இரண்டிலும் சத்யராஜ்தான் நாயகன். என்றாலும் முதல் பட வெற்றியைப் போல் 'லூட்டி' வெற்றிபெறவில்லை.

இருப்பினும் நஷ்டமில்லை. இப்போது துரை புதிய இயக்குநரான மணிவண்ணனை வைத்து கார்த்திக் நடிக்கும் படமொன்றை தயாரிக்கப் போகிறார்.

## ரஜினி அதிருப்தி

ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா அண்மையில் மேடையில் நடனமாடியது ரஜினிக்குப் பிடிக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

படிப்பில் நாட்டமுள்ள ஐஸ்வர்யாவை இப்படிக் கலைத்துறையில் ஈடுபடுத்துவது பிடிக்கவில்லையாம். இதனால் இந்த நடன நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்த தொலைக்காட்சித் தொடர் தயாரிப்பாளரின் நட்பைக் கூடத் துண்டித்து விட்டாராம் ரஜினி.

## ஜெர்மனியில் சுவலட்சுமி

சத்யன்-சுவலட்சுமி ஜோடி இணைந்து நடிக்கும் 'கண்ணா உன்னைத் தேடுகிறேன்' படத்திற்காக சமீபத்தில் ஜெர்மனிக்குப் போய் இரண்டு பாடல்காட்சிகளை முடித்துக் கொண்டு திரும்பியிருக்கிறார்கள். நீண்ட காலமாகத் தயாரிப்பில் இருக்கும் இப்படத்தை தியா செல்வராஜ் இயக்குகிறார்.



பாபுகணேஷ்-ரவளி

படம்: நாகலிங்கம்

# முட்டாள் தினம்

## தோன்றியது எப்படித் தெரியுமா?

ஏப்ரல் மாதம் முதலாம் திகதியை முட்டாள் தினமாகக் கொண்டாடும் முறை எப்படித் தோன்றியது என்று தெரியுமா?

1564ம் வருடம் ஃபிரான்ஸ் நாட்டை ஆண்ட 10ம் சார்ள்ஸ் என்ற மன்னன், புதிய கலண்டர் முறையைப் புகுத்தினான். அதற்கு முன்பு இருந்த கலண்டர் முறைப்படி புதுவருடம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியில் இருந்தே ஆரம்பித்தது.

மன்னன் 10ம் சார்ள்ஸ் புகுத்திய புதிய கலண்டர் முறைப்படி புதுவருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியே ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் பழமைவாதிகள் சிலர் புதிய முறையை ஏற்க மறுத்து பழைய ஏப்ரல் முதலாம் திகதியைப் புத்தாண்டு தினமாகக் கருதிக் கொண்டாடி வந்தனர்.

ஏப்ரல் முதலாம் திகதி புத்தாண்டு கொண்டாடுபவர்களை முட்டாள்களாக்கிக் கேலி செய்தனர் புதிய கலண்டர் முறையை ஏற்றுக் கொண்டவர்கள். அதிலிருந்தே ஏப்ரல் முதல் திகதியை முட்டாள் தினமாகக் கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டது.


## முட்டாள் தினத் தகவல்கள்



உலகம் முழுவதும், வருடந்தோறும் ஏப்ரல் 1ம் திகதி கொண்டாடப்பட்டு வரும் முட்டாள் தினத்தின் சின்னம் என்ன தெரியுமா?

கழுதை

☺😐☹



ஏப்ரல் 1ம் திகதி முட்டாளாக்கப்பட்டவர்களை ஃபிரான்ஸில் மீன்கள் என்று குறிப்பிடுவார்கள். அன்றைய தினத்தை மீன்நாள் என்று அழைக்கின்றனர்.

☺😐☹



ஸ்கொட்லாந்தில் ஏப்ரல் முதல் தினத்தை குயில் நாள் என்று அழைக்கின்றனர். குயில்கள் தமது முட்டைகளைக் காகத்தின் கூட்டில் இட்டுக் குஞ்சு பொரிக்க வைத்து காகத்தை ஏமாற்றுவதால் இப்படி அழைக்கின்றனர்.

☺😐☹



ஜப்பான் நாட்டில் ஏப்ரல் முதல் தினத்தை பொம்மை நாள் என்று அழைக்கின்றனர்.

இப்படி ஒவ்வொரு நாட்டுக்கு நாடு பெயர்தான் வித்தியாசமே தவிர மற்றப்படி முட்டாளாக்குவது, வேடிக்கை விளையாட்டு எல்லாமே ஒன்றுதான்.

# கருப்பை

சோகங்களின் பிரசவத்தில்
அந்தப் புன்னகையும்
தீப்பற்றி எரிகின்றதே!..
••
உன் நினைவுகளின்
வருடலில் வருந்திக்
கொண்ட—என்
ஜென்மங்களும் பாழாய்ப் போனதுவே!
••
உன்
இரசப் பார்வை
அழுத்திக் கொண்ட—
இதயத்தைத்தான்—இன்றும்
நெஞ்சுக்குழி நெகிழ்கிறது.
••
ஒரு நொடி
வார்த்தைகளை நம்பிய—
நான் காலங்களை
கணப் பொழுது விடாது
ஞாபகப்படுத்தி ஜீவிக்கிறேன்...
••
சுவாசம் விசுவாசமாய்
உன் பெயரின் வாசனை—
என்னை உறுத்தி
தொனி கொள்கிறது.
••
சகி..!
இந்தப்புல்வெளியில்..
விழுந்த.. பனித்துளி தான்
நிரந்தரமாக கலந்து விட்டதா?
அந்த—
மாரி மழை மின்னல்
வெட்டுத்தான் மின்சாரமாகி
கொண்டதா...?
என்பிரியப்பட்ட—
காதல் கவலைகளும்
உன்னோடு பழக்கதோஷமானதா?
••
என்
உளக் கண்ணாடி
உடைந்து ரத்த வடுக்கள்
பீறிடுகின்றது.
நான்
வாழ ஒரு வெறுமைப்பட்ட
வார்த்தையாவது
சொல்லி விட்டு
தொலைந்து போ..?

கோ. நாதன்—பொத்துவில்—01.

# நீ தோற்கவில்லை

உன்னை வாட்டிடும்
நினைவலைகளை—நீ
முடிந்தால் மாற்றிவிடு
உன் எதிர்காலம்
வளமாய் மாறிட
o—o
உன்னை விரும்பிடா
அவள் பின்னால்—நீ
அன்புடன் அலைந்து
அவமானப்பட்டதுவும்—உன்
முட்டாள் தனமல்லோ!
o—o
காதலிக்க உனக்குள்ள
உரிமை அவளுக்கும்
உள்ளதை புரிந்த—நீ
எப்போதும் அவள்
சந்தோசமாய் வாழ
வாழ்த்தும் உயர்ந்த
உன் உள்ளத்தில்
அன்பு தோற்கவில்லை.
o—o
உள்ளத்தால் உயர்ந்தவனே
உன் சேவை வேண்டி
நிற்கும் உலகில்—நீ
சாதிக்க வேண்டியவை
எத்தனை எத்தனையோ
என்பதை உணர்ந்து கொள்.

ஜெ. ஜெரி—
மட்டக்களப்பு.

# என்னிடமில்லை...

உன் அழகிய விழிகள்;
குழிவிழும் கன்னங்கள்;
நிமிர்ந்த நடை;
எல்லாவற்றுக்கும் மேலாய்
உன் குணம்
பிடிக்கும்... பிடிக்கும்....
என்று—நீ
நட்பாய் சொன்னபோதெல்லாம்
நீ—என்னை
காதலிப்பதாய் நினைத்து
தவறிழைத்தேன்—நான்
அன்று.....
இன்று
நீ—என்னருகிலில்லை.
அதுபோல்
உனக்குப் பிடித்த
என் குணத்தை தவிர
என் அழகிய விழிகள்;
குழிவிழும் கன்னங்கள்;
நிமிர்ந்த நடை;
எதுவுமே
என்னிடமில்லை....
என்னிடமில்லை...

எஸ். நிமிலன்—
பட்டிருப்பு.

# உன்னை நான் சுவாசிக்கிறேன்!

இதயத்தின் வேர்களில்
அன்பை அள்ளி வார்த்தவளே!
புன்னகைத்து புன்னகைத்து
என் மனதைப் பறித்தவளே!!
உன்னைச் சுமக்கும்
என்
நெஞ்சைத் தொட்டுச் சொல்கிறேன்....
என்னை
மரணம் வந்து
அழைக்கும் வரை—நான்
உன் பெயர்
உச்சரிப்பேனே தவிர
இன்னொரு
பெண்பெயர் உச்சரிக்கமாட்டேன்!
அன்புள்ளவளே!—நான்
உன்னை அள்ளி அணைக்கும் வரை;
நீ வந்து என்னை
உன்னோடு இணைக்கும் வரை
இனி
காற்றைக்கூட சுவாசிக்க மாட்டேன்!
உன்னையே சுவாசித்திருப்பேன்.
ஏனெனில்
என் சுவாசமே
'நீ—தான்!'
நீ என்னை நேசித்திரு
நான் உன்னை சுவாசித்திருப்பேன்!

என். தனுசுஜன்—
சண்டிலிப்பாய்.

# காத்திருப்பு

அன்பே
நான்
ஆசைப்படுவது
உனது
உடலுக்கல்ல,
உனது
இதயத்துக்கு..
என்பதை
மீண்டும்
நினைவுப்படுத்துகிறேன்!
**
உன் அன்புக்காகத்தான்
இன்றும்
இந்த ஜீவன்
ஏங்கிக்கொண்டிருக்கிறது
என்பதை
நீ எப்போதாவது
தெரிந்து
கொள்கிறாயோ...?
யாரறிவது...!

பானு (நிருஜா),
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# தேன் கிண்ணம்



## எப்படி

அந்தக்காலத்து நினைவுகள்
மறக்கக்கூடியவையா?
முயன்றுபார்த்தேன்
என்னால் முடியவில்லை!
'வாழ்வேமாயம்'— கமல்படம்
இலங்கை வானொலியில்
'பொங்கும் பூம்புனல்'
கண்ணதாசனின்
'வசந்தகாலக்கோலங்கள்
வானில் விழுந்தகோடுகள்'
ஜானகிகுரலில் கண்மூடி
இரசித்தது.
வகுப்புகளுக்கு போகாமல்
மகாத்மா தியேட்டரில்
'மன்மதலீலை'—கமல்படம்

## மறக்கலாம்??


லக்ஷ்மி தியேட்டரில்
'வணக்கத்துக்குரிய காதலியே'
—ரஜனிபடம்
பார்த்து வந்தது.
சுஜாதா கதைகளில்
சூழ்நிலைமறந்தது;
பாலகுமாரன் நாவல்
பலமுறை படித்தது.
இவையெல்லாம்
மறக்க நினைத்தும்
மறுபடி மறுபடி
நினைவுத் திரையில்
நிழற்படமாக!
முடியவில்லை என்னால்
முடியவில்லை. இந்த
வசந்தகாலங்களை
மறப்பதற்கு
துணிவில்லை எனக்கு
துணிவில்லை. அந்த
அழகான நாட்களை
மறப்பதற்கு, காரணம்
அத்தனை நினைவிலும்
நீக்கமற நிறைந்திருப்பது நீ!
உன்னை மறக்க முடியாத போது
எப்படி??..

இராகவன், கரவெட்டி.

# கவனி முன்னேறு தில்

குயில் எப்பொழுதும் தோட்டத்தில் கூவாது. தோட்டம் எப்பொழுதும் பூத்துக் குலுங்காது என்ற உண்மையை உணர்ந்து கொண்டால் பொறுமையை என்றென்றும் கடைப்பிடிக்க விரும்பினார் பெர்னாட் பாலிஸி. அழகான வண் ணங்களில் எனாமல் பூசப்பட்ட

## பொறுமையே வெற்றி தரும்



பள பளப்பான பீங் கான் செய்யும் முறையையும் அலுமினியத்தையும் கண்டு பிடிக்க விரும்பினார்.

ஆண்டுக் கணக்காக சோர்வு அடையாமல் பொறுமையாக பரிசோதனைகளைச் செய்து வந்தார். தன்னுடைய உடல் பொருள் அனைத்தையும் ஆராய்ச்சிக்கே செலவிட்டார்.

இரவுபகலாக தான் கட்டிய சூளையிலேயே கவனம் செலுத்தினார். பீங்கான் கோப்பையைச் செய்யவும் அலுமினியத்தை கண்டு பிடிக்கவும் புதிய முறைகளை முடிவே இல்லாத படி சோதனை செய்து பார்த்தார்.

அவருக்கு யாரும் உதவி செய்யவோ உற்சாகம் ஊட்டவோ முன்வரவில்லை. அவருடைய நண்பர்களும் அண்டை அயலாரும் அவரைப் பைத்தியக்காரன் என்றார்கள்.

பணம் இல்லாமல் பல தடவை பரிசோதனைகளை நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று. பணம் கிடைத்தவுடன் சோதனையை ஆரம்பித்தார்.

கடைசியாக ஒரு நாள் அவரிடம் சூளைக்கு வேண்டிய விறகுக்குக்கூட வழி இல்லாமல் போனது. அதனால் குடும்பத்தாரின் கோபத்திற்கு ஆளானார்.

ஆனால் அவர் அதனைப் பொருட்படுத்தாமல், வீட்டிலுள்ள மேஜை நாற்காலி முதலிய மரச் சாமான்களை எல்லாம் நெருப்பில் போட்டார்.

அவை எல்லாம் எரிந்து சாம்பலாயின. ஒரு நாள் முழுவதும் சூளை அருகிலே உட்கார்ந்து கவனித்துக் கொண்டே இருந்தார்.

பிறகு அவர் சூளையைத்திறந்தார்.

அது பளபளப்பான பீங்கானால் நிரம்பி இருந்தது. அடுத்தபடியாக அலுமினியம் உருவாகி இருந்தது.

அற்புதமான முறையில் இவை கண்டுபிடிக்கப்பட்டதும் பணமும் புகழ் அவரைத்தேடி வந்தது. ஆனால் அதைக் கண்டு பிடிக்க அவர் எத்தனைக் காலம் பொறுமையாக இருக்க வேண்டியதாயிற்று.

இதுதான் அவரிடம் ஒருபோதும் குறையாமல் இருந்தது. அது போல் கஷ்டங்களையும் தாங்கிக்கொள்ள வழி செய்தது.

நாமும் இவரைப்போல பொறுமையை கடைபிடித்தால் நிச்சயம் வெற்றி பெற முடியும். எடுத்தவுடனேயே எந்தச் செயலும் நடைபெற்றுவிடாது.

குழந்தை வேண்டும் என்றால் பத்து மாதம் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். இதேபோல ஒவ்வொரு செயலுக்கும் காலம் உண்டு என்பதனை உணர்ந்து பொறுமையுடன் இருந்தால் வெற்றி நமக்கேதான்!

# பேனா நண்பர்கள்



பெயர்: எம்.எஸ்.எம்.றசீட்
வயது: 25
முகவரி: இல.7612ஏ/1,
பௌசி மாவத்தை,
சம்மாந்துறை.
பொழுது போக்கு:
கிரிக்கெட், பத்திரிகை.



பெயர்: ஆர். றிஸ்மியா
வயது: 17
முகவரி: இல. 86/2,
வரக்காதோட்ட வீதி,
இரத்தினபுரி.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

# இந்தவாரம் உங்கள் பலன்

**01.04.2001 முதல் 07.04.2001 வரை**

ஜோதிடர் 'கானா'

**மேடம்:**
கருமங்களில் வேகம் காணப்படும். நோய் துன்பம் குறையும். பண செல்வாக்குடன் பொருள் வரவும் காணப்படும். பரீட்சை முடிவுகள், உயர்கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கும். சுப கருமப் பேச்சுக்கள் அச்சுவினி நட்சத்திரகாரருக்கு நடக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 03
அதிஷ்ட திகதிகள் : 01, 03.

**இடபம்:**
தூர இடத்து உறவினர்கள் வருகையும் பணச் சேர்க்கையும் காணப்படும். பிரயாண சம்மந்தப்பட்ட வாய்ப்புக்கள் வெற்றி பெறும். செலவுகள் அதிகமாகும். ரோகினி நட்சத்திரகாரர் அலைச்சல், செலவுகளை தவிர்ப்பது நன்று.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 07
அதிஷ்ட திகதிகள் : 02, 07.

**மிதுனம்:**
தொழிலில் மந்தகதி காணப்படும். எதிலும் செலவுகள் அதிகமாகும். நாட்பட்ட நோய் துன்பம் வெளியிடத்தோர் சிக்கல்கள் தொடர்வதும் சகோதர வழியால் பல நன்மைகள் ஏற்படும். திருவாதிரை நட்சத்திரகாரர் சுப கரும வாய்ப்புக்களைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, புதன்
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 04
அதிஷ்ட திகதிகள் : 02, 04.

**கடகம்:**
குடும்பப் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரமாகும். பணம் பல வழியில் வரும். தொழில் செய்வோர் எச்சரிக்கையாக இருப்பதுடன் ஆயிலிய நட்சத்திரகாரர் மனமகிழ்ச்சியை எதிர் கொள்வர்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 03
அதிஷ்ட திகதிகள் : 03, 06.

**சிம்மம்:**
தொழில் வசதி பலமடங்கு பெருகும். பொருள் வரவு இருப்பிட மாற்றம் என்பன அமையும். உதவிகள் கிடைக்கும். எதிலும் நற் செல்வாக்கு அமைவதுடன் மக நட்சத்திரகாரர் நன்மையடைவர்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி
அதிஷ்ட நிறம்: இளநீலம்; எண்: 05
அதிஷ்ட திகதிகள்: 01, 05.

**கன்னி:**
குடும்ப நிலையில் தகராறு காணப்படும். செலவுகள் பல மடங்கு பெருகும். உடலில் நோய் துன்ப அளவு கூடும். கல்வி நிலை பாதிக்கப்படும். எதிர் பார்த்த முக்கிய செய்திகள் பாதிக்கப்படும். உத்தர நட்சத்திரப் பெண்கள் எதிலும் கவனமாக இயங்கவேண்டும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், சனி
அதிஷ்ட நிறம்: மரூண் வர்ணம்; எண்: 06
அதிஷ்ட திகதிகள்: 06, 07.

**துலாம்:**
பெரியோர்களின் ஆசீர்வாதமும் எதிர்ப்பான நிலை மாறும். தொழில் சிறப்படையும். நீண்டகால நண்பர்களின் உதவியும் தடைப்பட்ட சுபகரும, காதல் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் முடிவுகளை கொடுக்கும். சுவாதிக்காரர் அதிஷ்ரவாய்ப்புக்களைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 01
அதிஷ்ட திகதிகள்: 01, 03.

**விருட்சிகம்:**
முயற்சிகள் தொடர்ந்தபடி பெரியோர்களின் ஆசீர்வாதமும், பெரிய இடத்து நட்பும், திடமான முடிவுகளை எடுக்கக்கூடிய வாய்ப்பும் காணப்படும். பரீட்சை முடிவுகள் மகிழ்ச்சியைத்தரப்பெறும். கேட்டை நட்சத்திரர் மகிழ்ச்சியைப்பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், சனி
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 06
அதிஷ்ட திகதிகள்: 01, 06.

**தனுசு:**
விடாமுயற்சியும் தொழில் நிலையில் உயர்வும் பங்குதாரர் தொழிலில் கூட்டு முயற்சி செய்வோர் நல் மாற்றங்களைப் பெறுவதுடன் நீண்டநாள் தடைப்பட்ட திருமண முயற்சிகள் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 05
அதிஷ்ட திகதிகள்: 01, 07.

**மகரம்:**
பிள்ளைகளின் சுபசெய்திகள் கிடைக்கும். பணவருகையுடன் உயர்வான முக்கியமான விடயங்கள் முடிவுகள் கிடைக்கும். நாட்பட்ட கடன், கொடுக்கல்வாங்கல்கள், பல சிக்கல்கள் தீரும். வெளிநாட்டுப் பயணமும், கல்வி சம்மந்தப்பட்ட முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். அவிட்டக்காரர் நன்மைகளை எதிர் கொள்வார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 06
அதிஷ்ட திகதிகள்: 03, 06.

**கும்பம்:**
உடல் நிலை மாற்றமடையும் மருத்துவச் செலவுகள் அதிகமாகும். உறவினரால் சில சிக்கல்கள் தோன்றும். வெளியிடத்தோர் வருகையினால் செலவுகள் ஏற்படும். கல்வியில் சிறிய தடைகள். சதய நட்சத்திரர் நிம்மதியைப் பெறமாட்டார்கள்.
அதிஷ்ட நாட்கள்: சனி, திங்கள்
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 08
அதிஷ்ட திகதிகள்: 03, 05.

**மீனம்:**
எதிர்பார்த்த முக்கிய விடயம் நடைபெற்று முடியும். கல்வி முயற்சிகள், பணவசதிகள் பெரிய மாறுதல்களை கொடுக்கும். வாகனவிடயம் கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை. உத்திரட்டாதி நட்சத்திரகாரர்கள் பண வசதியைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, திங்கள்
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 06
அதிஷ்ட திகதிகள்: 01, 04.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சமையலறை சங்கீதம்



வரவேற்பு அறையையும் வீட்டின் முகப்பையும் மிக அழகாக அலங்கரித்து வைத்திருக்கும் பல பெண்கள் கூட சமையலறையை அழகாக வைத்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துவதில்லை.

வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் சமையலறைப் பக்கம் வர மாட்டர்கள் என்ற அலட்சியமே இதற்குக் காரணம் 'வாழ்க்கையின் சுழற்சியே ஒரு சாண் வயிற்றில்தான் அடங்கியுள்ளது' என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

இப்படியிருக்கும்போது சமையலறையை அலட்சியம் செய்யலாமா? படங்களில் வரும் சமையலறைபோல் பளிச்சென்றாக்க இதோ சில டிப்ஸ்:

- சமையலறைப் பாத்திரங்களை உபயோகித்து முடித்த வுடனேயே தண்ணீர் ஊற்றி மூடி வையுங்கள். உடனே சுத்தம் செய்ய முடியாமல் போனால், சமைத்த மற்றும் சாப்பிட்ட பாத்திரங்கள் காய்ந்து 'வறவற' வென்றாகி விடும். தண்ணீர் ஊற்றி வைத்தால் எவ்வளவு நேரமானாலும் எளிதில் கறைகளை நீக்கித் துலக்கி விடலாம்.
- சிலர் கறைகளைச் சுத்தம் செய்கிறோம் என்று கரண்டி, கத்தி போன்றவற்றால் சுரண்டுவார்கள். இதுபோல் செய்தால் கறை போனாலும் கீறல்கள் விழும். கீறல்கள் விழுந்தால் அதில் அதிக அழுக்குகள் இலகுவில் சேர்ந்து கிருமிகள் பெருகிவிடும்.
- இப்போதெல்லாம் கோட்டிங் போடப்பட்ட பாத்திரங்கள் தான் அநேகரின் வீடுகளில் உள்ளன. அதில் கறை படிந்து விட்டால் உடனே அதை நீக்க நற நற என்று தேய்க்காமல், நைலோன் ஸ்கரப்பரைக் கொண்டு துலக்குங்கள்.
- பாத்திரங்களைக் கழுவிய பின் நீர் தேங்காதபடி காய விடுங்கள். நீர் வடிந்த பின், மிச்சமுள்ள நீரை உலர்ந்த பருத்தித் துணியை உபயோகப்படுத்தி, துடைத்துவிட்டு பாத்திரங்களை வைப்பதற்குரிய இடத்தில் அடுக்க வேண்டும்.
- சிலர் வீட்டில் பித்தளைப் பாத்திரங்கள் அதிகம் இருக்கும். இப்படியான பாத்திரங்களை வைத்திருப்பவர்கள் வாரம் ஒருமுறை புளி அல்லது எலுமிச்சம் பழச்சாற்றால் தேய்த்துச் சுத்தம் செய்து வைப்பது நல்லது.
- சமைத்து முடிந்ததும் சமையலறையைச் சுத்தமாகக் கூட்டிப் பெருக்கி, நீர் சிந்தியிருந்தால் அதைத் துடைத்து வையுங்கள். சிறிது நேரமாவது சமையலறை ஜன்னல்களைத் திறந்து வைத்துவிட்டுப் பிறகு மூடிவிடுங்கள்.

## மூலிகை மருத்துவம்



துளசி இலையை ஏதாவது ஒரு வகையில் (சாறாகவோ, இலையாகவோ) பயன்படுத்தினால் கிடைக்கும் பலன்கள் எவையென்று தெரியுமா?

- உடலின் உஷ்ணம் சீராகும்.
- அஜீரணக் குறைபாடுகள் நீங்கி பசி உணர்வைத் தூண்டும்.
- இதயம், கல்லீரல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும்.
- மூட்டு வாத வலியைப் போக்கும்.
- இரத்தத்தைச் சுத்திகரிக்கும்.
- வயிற்றுளைச்சலைக் குணமாக்கும்.
- நரம்பு மண்டலச்செயற்பாட்டை ஊக்குவிக்கும்.
- சரும வியாதிகளைப்போக்கும்.
- நரம்புத் தளர்ச்சியைப் போக்கும்.

கருந்துளசி இலைகளைப்பிழிந்து சாறு எடுத்து இருவேளை உட்கொண்டுவர நெஞ்சில் கட்டும் கபம் அகலும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

### மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JI

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-04-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 81 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

தொலைக்காட்சி ஒளிபரப்புகளில்-குறிப்பாக செய்தி அறிக்கைகளைப் பார்க்க வேண்டாம் என்று மோனிக்காவின் சட்ட ஆலோசகர் பில் கின்ஸ்பேர்க் அறிவுறுத்தியிருந்தார். மோனிக்காவின் தாயார் மார்சியா அவருக்கான இரண்டாவது நாள் விசாரணையைத் தொடர்ந்து மயக்கமடைந்தமையினால் ஏற்பட்ட பின் விளைவுகளைச் சுட்டிக் காட்டியே அவர் மோனிக்காவுக்கு அத்தகைய அறிவுரையை வழங்கினார். இருப்பினும் தொலைக்காட்சியில் செய்தி இடம்பெறுவதைப் பார்க்காமல் மோனிக்காவால் இருக்க முடியவில்லை.

மோனிக்கா 'ஈமெயில்' என்ற தொலைநகல் மூலம் அவளுடைய நம்பிக்கைக்குரிய சினேகிதிகளுக்கு அனுப்பி வைத்த தகவல்களின் பிரதிகளையும் எப்படியோ ஸ்டாரின் உதவியாளர்கள் சேகரித்துக்கொண்டனர்.

ஒரு நாள் மோனிக்கா தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது வெள்ளை மாளிகையில் கிளின்ரனுக்கு உணவு பரிமாறும் பணியை மேற்கொண்டிருந்த உதவியாளர் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்படுவதைக் கண்டு துணுக்குற்றாள். மோனிக்காவும் கிளின்ரனும் கிளின்ரனுக்குரிய தனியான ஒய்வறையில் இருந்து உரை யாடிக்கொண்டிருப்பதைப் பல தடவைகள் அந்த அலுவலர் பார்த்திருக்கிறார். இக்காட்சியை அவதானித்துக் கொண்டிருந்தபோது அவருடைய கழுத்தை அலங்கரித்திருந்த கழுத்துப்பட்டியைக் கண்டதும் கலவர மடைந்தார்.

கிளின்ரனுக்கு மோனிக்கா முதன் முதலில் பரிசாகக் கொடுத்த கழுத்துப்பட்டி அதேதான். 'இதனை கிளின்ரன் ஏன் வேறொரு நபருக்குக் கொடுக்க வேண்டும்' என்பதில் அவளுடைய சிந்தனையில் பெரும் குழப்பம் நிலவியது. இறுதியில், கிளின்ரன் அந்தக் குறிப்பிட்ட நபர் தனக்கு விரோதமாக எதையாவது-விசாரணைகளின்போது-கூறிவிடாமலிருப்பதற்காகவே அதனைக் கொடுத்திருக்கிறார்' என்று முடிவுக்கு வந்தாள்.

இதனைத் தொடர்ந்துதான் மோனிக்காவின் சினேகிதிகள் சாட்சி அளிப்பதற்காக அழைத்து வரப்பட்டனர். நீதிமன்றத்தை நோக்கி கறுப்புக்கண்ணாடிகள் பொருத்தப்பட்ட கார்கள் வந்து சேரும். பின்னர் நீதிமன்ற வாசலில்-படிக்கட்டுகளில் ஏறும் காட்சிகளின் அண்மித்த உருவங்கள் காட்டப்படும்.

இவ்வாறு நெய்ஷா, ஆஷ்லி, தெப்ரா பைனர்மான் ஆகியோரும் சாட்சிகளாக அழைத்து வரப்பட்டனர். இவர்களுக்கெல்லாம் மோனிக்கா, கிளின்ரனுடன் வைத்திருந்த நெருக்கமான உறவு பற்றி நன்கு தெரிந்திருந்தது. இவர்கள் தாங்கள் அறிந்த உண்மைகளைக் கூறிவிட்டனர். இவர்களைவிட மோனிக்காவுக்கு மிக நெருக்கமானவளாக இருந்த காத்தறின் ஆல்டே டேவிஸ் என்ற பெண் மார்ச் மாதம் 7ம் திகதி அன்று நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டதைக் கண்டு மோனிக்கா கதறி அழுதாள். காத்தறின் ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் பணிபுரிபவள். இந்த கிரான்ட் ஜுரி விசாரணைக்காக பிரத்தியேகமாக அழைத்து வரப்பட்டிருந்தாள். காத்தறினுக்குத்தான் 'ஈ மெயில்' மூலம் மோனிக்கா சகல தகவல்களை அனுப்பியிருந்தாள். இருவரும் பரிமாறிக்கொண்ட தகவல்களின் நகல்களை கென்.ஸ்டாரின் உதவியாளர்கள் எப்படியோ தம்வசம் வைத்திருக்கின்றனர் என்ற செய்திகள் அடுத்த நாள் செய்தித்தாள்களின் மூலம் வெளிப்படையாகத் தெரிந்தது, மோனிக்காவின் கூற்று ஈமெயில் பிரதிகளில் கிடைத்திருந்தமையினால், சாட்சிகள் விசாரணையின் போது அவர்களால் எதையும் மறைக்க முடியாமற்போய்விட்டது.

மார்ச் 17ம் திகதியன்று டோக்கியோவிலிருந்து பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்டிருந்த காத்தறின் மோனிக்காவுக்கு எதிராக சாட்சியமளிக்க நேர்ந்தமையினால் பெரிதும் வேதனை அடைந்தாள். தனது சிறந்த சினேகிதியின் பாலியல் தொடர்பான அந்தரங்கங்களை தனக்கு முற்றிலும் பழக்கமில்லாத பலருக்கு முன்பாக விவரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்பட்டிருப்பதை நினைத்து மிகவும் வேதனையடைந்தாள்.

மோனிக்கா ஏற்கனவே தாக்கல் செய்திருந்த சத்தியக்கடதாசியில், தனக்கும் கிளின்ரனுக்குமிடையில் பாலியல் தொடர்புகள் இருந்ததே இல்லை என்று தெரிவித்திருந்தாள். ஆனால் அக்கூற்றுப் பொய் என்பதை நிரூபிக்கவே கென்.ஸ்டாலின் உதவியாளர்கள் முயன்று வருகின்றனர், என்பதையும் கண்டுகொண்டாள். தன்னை பெரிதும் நம்பி தனது சினேகிதிகூறிய உண்மைகளை இந்த முன்பின் தெரியாதவர்கள் முன்னிலையில் கூறி, தன் சினேகிதிக்குத் துரோகமிழைக்க வேண்டியதாயிற்றே' என்று காதத்தரின் பெரிதும் கலங்கினாள்.

இடையில் ஒருநாள் தன் சிகையைச் சிறிதாக வெட்டுவதற்காக அவளுடைய வழக்கமான சிகை அலங்கார சாலைக்குச் சென்றிருந்தாள். அடுத்த நாள் தொலைக் காட்சியில் மோனிக்கா தலை அலங்காரம் செய்யும் காட்சி முழுமையாக ஒளிபரப்பானது கண்டு மோனிக்கா அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தாள்.

இவற்றைவிட மோனிக்காவுக்கு

## கிளின்ரனின் ஏழாவது காதலி



காத்தறின் ஆல்டே டேவிஸ் மோனிக்காவின் உண்மையான சினேகிதி. மோனிக்காவுக்கு எதிராக சாட்சியமளிக்க டோக்கியோவிலிருந்து பிரத்தியேகமாக அழைத்துவரப்பட்டாள்.

அதிர்ச்சியை மேலும் அதிகரித்த சம்பவம், அதே சிகையலங்கார சாலையில் தனக்கு அலங்காரம் செய்த சவரத்தொழிலாளியும் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டமைதான். அமெரிக்க நீதித்துறையுடன் தொடர்புடையவர்கள் இத்தனை கீழ்த்தரமாக நடந்து கொள்வார்களா? என்று எண்ணும்போது அவளுக்கு இத்தகைய செயல் மிகவும் கேவலமானது, என்றுதான் எண்ணத் தோன்றியது.

ஜனவரி 21ம் திகதியன்று முதன்முதலில் மோனிக்கா-கிளின்ரன் விவகாரம் அம்பலமாகத் தொடங்கியதிலிருந்து மோனிக்கா, பல தடவைகள் தற்கொலை செய்து கொள்ள எத்தனித்திருக்கிறாள். இருப்பினும் தேவாதீனமாக அம்முயற்சிகள் இடம் பெறவில்லை. ஆனால் இப்பொழுது, எப்படியாவது நான் என் உயிரைப் போக்கிவிட வேண்டும். என் காதலரே என் உயிரென மதித்து இதுவரை வாழ்ந்தவள் நான். எனக்கே பொய்கூறி ஏமாற்றி விட்டாரே இவர்! ஆகவே இனி மேல் நான் உயிர் வாழ்வதில் எப்பயனும் இல்லை" என்று முடிவுக்கு வந்தாள்.

இவ்வாறு மோனிக்காவை தற்கொலை செய்வதற்குத் தூண்டிய மற்றுமொரு காரணம் கிளின்ரனோடு தான் உறவு வைத்திருந்த அதே காலகட்டத்தில், அவர் மற்றுமொரு பெண்ணுடன் அடிக்கடி காதல் லீலைகளில் ஈடுபட்டிருக்கிறார் என்று அவளுடைய காதுகளுக்கு எட்டிய செய்திதான்.

மார்ச் மாதம் 12ம் திகதி வியாழக்கிழமையன்று மாலையில் வோஷிங்டனிலுள்ள உணவு விடுதிக்கு, அவளுக்கு உதவி செய்யும் சட்டநிபுணர்கள் குழுவுடன் சென்றிருந்தாள். உணவருந்திக் கொண்டிருக்கின்றபோது மேட் ஸ்பெய்டஸ் என்ற சட்ட வல்லுநர் மோனிக்கா பக்கம் திரும்பி இரகசியமாக ஒரு தகவலைச் சொன்னார். ஸ்பெய்ட்சும் அவளுடைய சட்ட நிபுணர்கள் குழுவின் ஒருவர் தான். அவர் ஜேன் டோ என்றொரு பெண்ணைப் பற்றி குறிப்பிட்டு, "கிளின்டனின் ஆசை நாயகிகளில் ஏழாவது நபர் அவர் என்று கூறினார் இந்தத் தகவலைக் காதில் வாங்கியதும் மோனிக்கா துணுக்குற்றாள். அவள் முகம் உப்பிச் சிவந்தது. அவள் மேலும் விவரங்களை அறிய ஸ்பெய்ட்சை உற்று நோக்கினாள். அவர், கிளின்டன், பௌலா ஜோன்ஸ் உடனான தொடர்பினை விட்டதும் அவருடைய ஏழாவது ஆசை நாயகியாக ஜேன் டோ என்ற அழகியே இருந்தாள் என்று மேலும் விளக்கினார்.

இந்த தகவலைக் கேட்டதும் மோனிக்கா உடனடியாக எழுந்து கழிவறைக்குச் சென்றாள். அவளுடைய எண்ணங்கள் எல்லாம், சில மாதங்களுக்கு முன் வெள்ளை மாளிகையில் கிளின்டனுடன் மிக நெருக்கமாக அமர்ந்து, அவருடைய வாயையே பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சந்தர்ப்பங்களை நோக்கிப் பறந்தன.

அப்போதெல்லாம் கிளின்டன் தனது இளமைப் பருவத்தில் ஏனைய-தன்னை ஒத்த இளைஞர்கள் பெண்களுடன் எவ்வாறு நெருங்கிப் பழகுவார்களோ அதே போன்றுதான் உறவுகள் பட்டும் படாமலும் இருந்து வந்தன. ஹிலாரி கிளின்டனை அவர் மனம் முடித்த பின்னர் "உண்மையிலேயே மணப்பூர்வமாகக் காதலித்து உறவு கொண்ட ஒரே பெண் நீயேதான், உன்னையே தான் என் காதலியாக நான் ஏற்றுக்கொண்டுள்ளேன்!" என்று சத்தியவாக்கு; கொடுத்ததுபோல் மோனிக்காவிடம் கூறியிருந்தார். கிளின்டனின் அந்த வார்த்தையை மோனிக்கா அன்று வரை உண்மையான வாக்குறுதியென்றே மனப்பூர்வமாக எண்ணியிருந்தாள். ஆனால் கிளின்டனுக்கு மற்றுமோர் காதலியும் இருந்திருக்கிறாள்; அதுவும் தான் அவரோடு உறவு கொண்டிருந்த அதே காலத்தில் தான் கிளின்டன் இந்த ஏழாவது காதலியுடன் உல்லாசமாக வாழ்ந்திருக்கிறார்.

எனக்கு இத்தகைய துரோகம் செய்திருக்கிறார் 'கிளின்டன்', என்று எண்ணும்போது அவள் உள்ளமும் உடலும் வெடித்துச் சிதறிவிடும்போல் இருந்தது.

(வருவாள்)

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**கட்டுகஸ்தோட்டை வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | சித்தி றிபாயா<br>122/1, மடவள வீதி, கட்டுகஸ் தோட்டை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பாப்பா முரசு சிறுகதை

## இசை ஞானம் உள்ளவர் யார்?

நெடுநாட்களுக்கு முன் போதிராஜன் என்ற மன்னன் பூங்குன்றம் என்ற நாட்டை ஆண்டு வந்தான். இவன் இசையில் நல்ல பயிற்சி பெற்றவன். எனவே இசைக்கலைஞர்களை வரவேற்று அவர்கள் திறமைக்கேற்ப பரிசுகள் வழங்கி கௌரவிப்பான்.



இதனால் பல இசைக்கலைஞர்கள் அரசனிடம் வந்து இசை நிகழ்ச்சிகள் நடத்தி பரிசுகள் பெற்றுச் சென்றனர்.

ஒருநாள் ஓர் இசைக்கலைஞன் அரசனைக் காண வந்தான். அரசனும் அவனை வரவேற்றான். அப்போது அரசன்,

"கலைஞனே... என்னுடைய நாட்டில் இசைஞானம் உள்ள மக்கள் நிறைய உள்ளனர். எனவே இவர்களுக்கு முன் பாடுவதால் உனக்குப் பெருமைதான் கிடைக்கும்," என்றார் அரசர்.

"அரசே! அவையில் இருப்போரின் முகங்களைப் பார்த்தால் அப்படி ஒன்றும் இசைஞானம் மிக்கவர்களாக எனக்குத் தெரியவில்லை," என்றான் கலைஞன்.

இதனால் ஆத்திரம் கொண்ட அரசன்,

"அப்படியா தெரிகிறது? நாளைக்கு உன் திறமையை அவையோரிடம் காட்டி அவர்களின் பாராட்டைப் பெற்று விடு பார்ப்போம்," என்றான்.

அவன் சென்றதும் தன் அவையோரைப் பார்த்து, "இந்தக் கலைஞனின் மண்டை கனத்தைப் பார்த்தீர்களா? நாளைக்கு இவன் பாடும் போது யாரும் பாராட்டவே கூடாது. கை, கால், தலை எதையும் அசைக்கக் கூடாது. அப்படி அசைத்தால் அவர்கள் தலையைச் சீவி விடுவேன்," என்றார் அரசர்.

மறுநாள் இசை நிகழ்ச்சி அமர்க்களமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இசைக் கலைஞன் வந்து அருமையாகப் பாடினான்.

எல்லாரும் அரசனின் ஆணைக்கேற்ப கை, கால் அசைக்காமல் அமர்ந்திருந்தனர். ஒரு கட்டத்தில் தன் குரலை உயர்த்தி அருமையாகப் பாடிக்கொண்டிருந்தான் கலைஞன்.

அப்போது அவனது திறமையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை ஒருவனால். அரசனது ஆணையையும் மறந்து,

"ஆஹா.. என்ன அருமை!" என்று பாராட்டிவிட்டான். அனைவரும் பயத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் போது, தான் சுயநினைவுக்கு வந்தான் அவன்.

அரசன் அவனை எரித்துவிடுவது போல் பார்த்தான்.


அப்போது இசைக்கலைஞன்,

"அரசே! இவர் ஒருத்தர்தான் உண்மையான இசை ஞானம் உள்ளவர். அதனால் தான் நீங்கள் எனது இசையைப் பாராட்டினால் தலையைச் சீவி விடுவேன் என்று ஆணை போட்டிருந்தும், இனிமையான நல்ல இசையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

மற்றவர்கள் எல்லாம் தங்களுக்கு மிகுந்த இசை ஞானம் உள்ளதுபோல் இது நாள் வரை காட்டிக்கொண்டு உங்களை ஏமாற்றி வருகின்றனர். நீங்கள் எதைச் சொன்னாலும் ஆமாம் போட்டுக்கொண்டு அந்த விஷயத்தில் அதிக ஞானம் உள்ளது போல் காட்டிக்கொள்கின்றனர்.

இந்த விஷயத்தை உங்களுக்கு உணர்த்தவே நான் தங்களிடம் பெருமையாகப் பேசுவதுபோல் பேசினேன். என்னை மன்னித்துவிடுங்கள் அரசே," என்றான் பணிவுடன்.

அதைக் கேட்ட அரசன் உள்ளம் மகிழ்ந்தான். இசைக் கலைஞனுக்கு நிறைய பரிசுப் பொருட்களை கொடுத்தனுப்பினான். தன்னுடன் இருந்த காக்கா பிடிக்கும் கூட்டத்தை அப்போதே துரத்தி விட்டான்.



எந்தத் தூண்டிலில் மீன் சிக்கியுள்ளது என்பதைக் கண்டுபிடியுங்கள்.




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **07.04.2001**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **389**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 386

**பரிசுக்குரியவர்:**
மே.சிவப்பிருந்தன்,
தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| வேருண்யா அன்பரசு, கொட்டகலை த.ம.வி, நுவரெலியா. | ந.கௌரி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி. |
| நவரெத்தினராஜா.நிரஞ்சன், அரசடித்தீவு விக்னேஸ்வரா ம.வி, மட்டக்களப்பு. | பாத்திமா ஆசிகா, நஜாஹ் சர்வதேச மகளிர் கல்லூரி, பேராதனை. |
| கவிபிரதீப் திரவியநாதன், செந்துல் பத்தனை, லிந்துல. | ம.ஜசாக் லோகராஜ், மெ.மி.பாடசாலை, திருக்கோயில். |
| வசந்தகுமார் ஜெகதீஸ், சரஸ்வதி மத்திய மகா விததியாலயம், பதுளை. | இசபெல் சுகுமார், சென் பிரிஜெட்ஸ் கொன்வென்ட். கொழும்பு. |
| கிருபாகரன் நிஷாந்தன், றோயல் கல்லூரி, கொழும்பு-07. | பி.மோகேந்திரன், சென். ஜோன் பொஸ்கோ, அட்டன். |

## காற்று

**நாம் உட்கொள்ளும் பொருட்களில் 80 சதவீதம் காற்று என்பது பலருக்குத் தெரியாது.**

**ஒரு சராசரி மனிதன் தனக்குத் தேவையான காற்றை உட்கொள்ளத் தினமும் ஏறத்தாழ 22 ஆயிரம் முறை சுவாசிக்க வேண்டியுள்ளது.**

**சராசரி மனிதனுக்கு தினமும் 16 கிலோகிராம் காற்றுத் தேவைப்படுகிறது. ஆனால் தண்ணீர் 2 1/2 லீட்டரும் உணவு 1 1/2 கிலோகிராமுமே தேவைப்படுகிறது**

## பொன் மொழிகள்

☛ தன் தவறை உணர்ந்து, உண்மையாக வருந்துபவன், குற்றமிழைக்காதவனுக்கு ஒப்பாவான்.
-நபிகள் நாயகம்.

☛ சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியைச் சொந்தமாக்கிக் கொள்வார்கள்.
-இயேசுநாதர்.

☛ எவன் தன்னையே உதாரணமாகக் கொண்டு, இன்ப துன்பங்கள் இரண்டையும் பார்க்கிறானோ அவனே சிறந்தவன்.
-பகவத்கீதை.

☛ தவறு செய்வது மனித குணம். மன்னிப்பது தேவகுணம்
-பாப்பாண்டவர்.

☛ யாருடைய நம்பிக்கையையும் குலைக்க முயலாதே. முடியுமானால் அவனுக்கு அதை விட மேலான ஒன்றைக் கொடு.
-விவேகானந்தர்

☛ ஒருமுறை அறிவாளிகளுடன் பேசுவது ஒருமாதம் புத்தகங்களைப் படிப்பதை விட அதிக நன்மை தரும்.
-ஏஞ்சலோ.

☛ செல்வந்தனாக இறப்பதை விட, சான்றோனாக வாழ்வதே சிறப்பு.
-ஜோன்ஸன்.

☛ எந்தவிதத் தியாகமும் இல்லாது, எந்த வித நன்மையும் பெற முடியாது.
-ஹேல்ப்ஸ்.

☛ சாத்தியம் என்று நம்புபவர்களுக்கு எதுவுமே சாத்தியமாகும்.
-வேர்ஜின்.

☛ கடனாளியாக எழுவதைவிட, இரவில் பட்டினியாகப் படுக்கைக்குச் செல்வதே மேல்.
-ஃபிராங்க்ளின்.

## இடத் தகவல்கள்

இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்ள்ஸ், பிரகான்ஸாவின் இளவரசி காத்தரீனை மணந்ததால், அவருக்குச் சீதனமாகக் கிடைத்தது பம்பாய் (மும்பை) நகரம். இதை அரசர் இந்தியாவிற்கு வர்த்தகத்திற்கு வந்த கிழக்கிந்தியக் கம்பனிக்கு வருடமொன்றிற்கு 150 ரூபாய்க்குக் குத்தகைக்கு விட்டார்.

★★




போர்னியோ சராவாக்கில் உள்ள 45 ஆமிரம் சதுரமைல் பரப்பளவு நிலம் புரூனே நாட்டின் சுல்தானால் ஜேம்ஸ் புரூக்கிற்கு நன்கொடையாகக் கிடைத்தது. அவரது வம்சாவளியினர் இந்த இடத்தை 1946ல் தான் இங்கிலாந்திற்குக் கொடுத்தனர்.

★★



பெல்ஜியம் கொங்கோ நாடு என்பது 9 இலட்சத்து 5 ஆமிரம் மைல்கள் அடங்கிய ஆபிரிக்கப் பகுதியாகும். பெயர்தான் பெல்ஜியம் கொங்கோவே தவிர, இது பெல்ஜியம் நாட்டின் ஒரு பகுதியாக இருந்ததில்லை. இரண்டாம் லீயோ போல்ட் மன்னரின் சொந்தப் பகுதியாக இது இப்போது ஒரு தனி நாடாக விளங்குகிறது.







ஆபிரிக்கக் காடுகளில் யானைகளைக் கொன்று தின்னும் ஒருவகை எறும்புகள் வாழ்கின்றன. இந்த எறும்புகள் யானை வேட்டைக்குப் பெருங்கூட்டமாகச் செல்கின்றன. ஒரு பெரிய யானையைக் கொன்று 3 நாட்களுக்குள் கடித்துத் தின்று எலும்புக் கூடாக்கி விடும் சக்தி கொண்டவை இந்த எறும்புகள். இந்த இராட்சத எறும்புகளிடம் மாட்டிக் கொண்டு யானை, தலைதெறிக்க ஓடிப் போய் ஆற்றுக்குள்ளோ, சேற்றுக்குள்ளோ இறங்கினால்தான் உண்டு. இல்லையென்றால் அதோ கதிதான்.

# நிழல் கொலைகள்

04



அவர்களைத் தொடர்ந்து தயாரிப்பாளரும், சுபாவின் அப்பாவும் வந்து சேர்ந்தார்கள்.

விஷயம் முழுவதும் கேட்ட டி.எஸ்.பி. மானேஜரிடம், "ஒரு டெக். டி.விக்கு ஏற்பாடு பண்ணுங்க!" என்றார்.

ஓர் அறையில் இரண்டும் தயாராக-

தோட்டத்திலிருந்து எடுத்த கேஸட்டை ஓட விட-

ஸ்கிரீனில்-

சுபாவின் அறை காட்சிகள் நகர-

அவள் போட்டிருந்த உடைகளை ஒவ்வொன்றாய் கழட்ட-

நிவாஷ் சிரித்தபடியே படுக்கையில் மல்லாத்தி-

"ஷிட்!"-என்றார் டி.எஸ்.பி.

அந்த ஓனரையும், மானேஜரையும் மட்டும் அறைக்குள்ள கூப்டுட்டு வாங்க.."

"என்ன சார்..."- என்றபடியே இருவரும் உள்ளே வர-

"உங்கள் ஓட்டல் லட்சணத்தைப் பாருங்க, ஹோட்டல் நடத்தறீங்களா.. இல்ல இதுமாதிரி ப்ளூபிலிம் எடுத்து வியாபாரம் பண்றீங்களா-?"

டி.வி.ஸ்கிரினைப் பார்த்த ஓனர் அதிர்ந்து போனார்.

"சார், எங்க ஓட்டல்ல இதுவரைக்கும் இப்படி நடந்ததில்லை.. யாரோ வெளியாட்கள் இப்படி எடுத்திருக்கணும்.. இல்ல அந்த யூனிட் சம்பந்தப்பட்டவங்க யாராவது.."

"அந்த டைரக்டரையும் தயாரிப்பாளரையும் வரச் சொல்லுங்க.."

ராஜா அவர்களையும் அழைத்து வர-

அவர்களும் அதிர்ந்து போனார்கள்.

அவர்கள் பின்னாலேயே வந்த நிவாஷ் ஸ்கிரீனைப் பார்த்து அதிர்ந்து போனான்.

'அட கடவுளே... என்னோட இமேஜ் என்ன ஆகிறது..?'

டெக்கருகில் பாய்ந்தவன், ரிகார்ட் பட்டனை அழுத்த-

பாய்ந்து எழுந்த டி.எஸ்.பி.அவன் கையை வேகமாய் தட்டிவிட்டார்.

"ஸ்டாப் இட்... எங்களோட எவிடென்ஸ்-அத தொட உங்களுக்கு அனுமதி கிடையாது.."

அவரின் குரலில் தெறித்த கடுங் கோபத்தில், டாப் ஸ்டார் நிவாஷ் அதிர்ந்து போய் கட்டிலில் உட்கார்ந்தான்.

பி.எம்.ரிப்போர்ட் வர-

அதிர்ந்து போனார்கள்.

இரண்டு பேரையும் மூன்று பேர் அனுபவித்ததற்கான அடையாளங்கள் உமிரணுக்களாய்..

"நிவாஷ்.."-டி.எஸ்.பி.கூப்பிட கலக்கிய கண்களுடன் வந்தான்.

"என்ன சார்..?"

"நீங்க சுபாவோட அறைக்குப் போகும் போது வேற யாராவது இருந்தாங்களா.. ஐ மீன் உங்க யூனிட் சம்பந்தப்படாத ஆள்..?"

"இல்ல சார்.. ஐ பெக் யூ.. காஸெட் சமாசாரம் எல்லாம் வெளியில் வந்தா, என்னோட இமேஜ் நொறுங்கிப் போயிடும்..." அழாத குறையாக கெஞ்சினான்.

"பார்க்கலாம்... இது வரைக்கும் லோகல் ரிப்போர்ட்டருங்க யாருக்குமே விஷயம் போயிருக்காதுன்னு நீங்க நினைக்கறீங்களா மிஸ்டர் நிவாஷ்.."

இன்ஸ்பெக்டர் ராஜா மறுபடியும் மொட்டைமாடி வந்தார்.

காலையில் தர்மா தன்னை அழைத்து வந்ததிலிருந்து ஒவ்வொரு விஷயத்தையும் வரிசையாய் மறுபடியும் அசைபோட்டு பார்த்தார்.

பீட்டர் சொல்வதைப் பார்த்தால்-

ஜெர்கின் ஆசாமி வெளியிலிருந்து வந்திருக்கலாம். அவனுக்கு யாராவது வீடியோ சமாசாரத்தில் உதவியிருக்கலாம்.

யார் அந்த ஆசாமி!

ஓட்டல் ஆளா...?

யூனிட் ஆளா...?

மொட்டை மாடி சுவர்ப்பக்கம் வந்து சுற்றும் முற்றும் எட்டிப் பார்த்தார்.

மேடு, பள்ளங்கள், வளைவுகள்!

ஆங்காங்கே காட்டேஜுகள்.

ஊட்டி ஏரியும் தெரிந்தது.

சுற்றிப்பார்த்தபடியே ஹொட்டலின் பின்பக்க பகுதியை நோட்டம் விட்டவர் அதிர்ந்துபோனார்.

பிளாஸ்டிக் பைகளை குழி தோண்டி எடுத்த இடத்தருகில் நின்றிருந்தான் பீட்டர்.

அங்கே என்ன செய்கிறான்?

வேகமாய் கீழே இறங்கி வந்தார்.

பீட்டர் இன்னமும் அதே இடத்தில் நின்றிருந்தான்.

தன் பின்னால் இன்ஸ்பெக்டர் ராஜா வந்து நின்றதைக் கூட அவன் கவனிக்கவில்லை.

அவ்வளவு தீவிரமாய் என்ன பார்த்துக் கொண்டிருந்தான்?

தோளைத் தொட்டார்.

'திடுக்'கிட்டுத் திரும்பினான்.

"என்ன பண்ணிட்டிருக்க இங்க?"

"சார் எனக்கு ஒரு விஷயம் தோணுது சார்..."

"என்னப்பா?"

"உங்களுக்கு பிளாக் மாஜிக்கல்ல நம்பிக்கை உண்டா சார்...?"

"ஏம்பா, என்ன படிச்சிருக்கே நீ...?"

"பத்து சார்..."

"பிளாக் மாஜிக்கைப் பற்றி என்ன தெரியும் உனக்கு..?"

"படிச்சிருக்கேன் சார்... நிறைய புத்தகம் நாயக்கர் அண்ட் சன்ஸ் போட்ட புத்தகம், மலையாள மாந்தீரிகம்..."

"கொலைக்கும் அதுக்கும் என் சம்பந்தம்...?"

"நான் அந்த அம்மா ரூம்ல பார்த்த ஆள் கையில கறுப்பா கழியும் துணியும் வெச்சிருந்தான். அவன் என்னமாவது பண்ணியிருப்பான் சார்... கோழியெல்லாம் அறுத்து பலி கொடுத்திருக்கறதா பேசிட்டாங்களே..."

"எதுக்கு?"

"ஏதாவது, மாய சக்தியை உடம்புல ஏத்திக்கறதுக்காக இருந்தாலும் இருக்கும் சார்..."

"தம்பி கண்டதையும் படிச்சு குழம்பியிருக்கே, போய் வேலையைப் பாரு..."

பீட்டர் தலையை சொறிந்தபடியே உள்ளே போக-

இன்ஸ்பெக்டர் ராஜா கண்ணில் அது பட்டது.

சுவரோரமாய்-

பாதி புதைந்து?

ராஜா சுவரோரம் நகர்ந்து அதை எடுத்தார்.

கையில் ஃபாஷனுக்காக. மாட்டிக் கொள்ளும் காப்பு வளையம். பட்டையாய் இருபுறமும் தடித்து நடுவில் நடன மாந்தர்களின் சிறு உருவம்.

ஓட்டலுக்குள் வந்தார்.

மானேஜர், ரிசப்ஷன் அருகில் கையைப் பிசைந்தபடியே நின்று கொண்டிருந்தார்.

"இதை உங்க ஆசாமிங்க யாராவது கையில் போட்டு பார்த்திருக்கீங்களா..?" வளையத்தைக் காட்டி கேட்டார்.

மானேஜர், "இது ரூம் பாய் ரவியோடது..." என்றார்.

ரவி ஓர் ஓரமாய் நின்றிருந்தான்.

"தம்பி இங்க வா..."

"சார்"-ஓடிவந்தான்.

**சுப்ராஜா**

அவனை ஓர் அறைக்குள் அழைத்துப் போனார்.

கையில் வைத்திருந்த வளையத்தை அவன் முன்னே நீட்டினார்.

"இது உன்னோடதுதானே..?"

"என்னதுதான் சார்... இதை கிச்சன்ல செபாஸ்டியனுக்கு இரண்டு நாள் முன்னாடி கொடுத்தது."

ராஜா நேரே கிச்சனுக்குப் போக-

செபாஸ்டியன் குருமா தயாரிப்பில் இருந்தான்.

"செபாஸ்டியன்!"-என்று கூப்பிட்டார்.

திரும்பிப் பார்த்தான்.

**தொடர்ந்து வரும்**

# அழியாப் புகழ் பெற்ற அமரர் பிரட்மன்

**செந்தில்குமரன்**

பிரட்மன் மறைந்தார்!

இந்த வார்த்தையைக் கேட்டதும் உலகம் எங்கும் உள்ள எத்தனை கிரிக்கெட் ரசிக இதயங்கள் ஒரு நிமிடம் துடிக்க மறந்திருக்கும் தெரியுமா?

பிதாமகன் என்ற வார்த்தைக்கு முதன்மையானவர், முத்தவர், முன்னோடி, 'வித்தையில் கரை கண்டவர், என்று பொருள். இன்னொரு விதத்தில் பிதாமகன் என்றால் கடவுளின் குழந்தை என்று கூட பொருள் கொள்ளலாம். மகாபாரதத்தில் பீஷ்மரை பிதாமகன் என்பார்கள்.

அதுபோல கிரிக்கெட்டைப் பொறுத்த வரை மேற்சொன்ன எல்லாவிதங்களிலும் பிதாமகன் என்ற வார்த்தைக்கு மிகப் பொருத்தமானவர் சேர். டொனால்ட் ஜோர்ஜ் பிரட்மன். பெயரைப் 'போலவே 'அகன்ற சாதனைகளுக்கு சொந்தக்காரர்.' கிரிக்கெட் உலகின் சகாப்தம் என்றால் அவர் தான்.

1908-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் பிறந்த பிரட்மன் மற்றவர்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத சாதனைகளை கிரிக்கெட்டில் படைத்தவர்.

1928-ஆம் ஆண்டு தனது 20வது வயதில் முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்துக்கு எதிராக ஆடத் தொடங்கிய பிரட்மன் 1948ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான ஒரு டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற்றவர். இந்த இருபது ஆண்டுகளில் அவர் கிரிக்கெட்டில் சாதித்த விஷயங்களைக் கேட்டால் மூச்சு முட்டும்.

முதல் தர கிரிக்கெட்டில் 28,067 ஓட்டங்கள்.. அதில் 117 சதங்கள், 31 இரட்டை சதங்கள் எடுத்தவர். முன்னூறு ஓட்டங்களுக்கும் மேல் ஐந்து முறையும், ஒருமுறை 400 ஓட்டங்களுக்கு மேலும் ஒரே இன்னிங்ஸில் எடுத்தவர் (மயக்கம் வராமல் இருக்க பக்கத்தில் உள்ள ஏதாவது பொருளை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்)

அஸ்திரேலியாவுக்காக 52 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடி 6996 ரன்கள் எடுத்த பிரட்மன், இதில் 10 இரட்டை சதங்களும் 2 முறை 300-க்கு மேல் ஓட்டங்களும் எடுத்தவர்.

இந்தியாவுக்கு எதிராக 5 டெஸ்ட்களில் ஆடி 715 ஓட்டங்கள் எடுத்தவர். இதில் நான்கு சதங்களும் அடங்கும். இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் நடந்துள்ள டெஸ்ட் தொடர்களில் இதுவரை அந்த சாதனை யாராலும் மிஞ்சப்படவில்லை.

விளையாட்டில் பிரட்மனை அவுட் ஆக்க முடியாமல் நொந்து நொந்து நூலாகிப் போன இங்கிலாந்து கிரிக்கெட் அணி இவரை ஆட்டம் இழக்கச் செய்வதற்காகவே பேட்ஸ்மேனை தாக்கிக் காயப்படுத்தும் 'பொடிலைன்' என்ற புதிய பந்து வீச்சு முறையை அறிமுகப்படுத்தியது. கிரிக்கெட்டில் தனக்கு இருந்த செல்வாக்கை பயன்படுத்தி 'பொடிலைன்' முறையை நடைமுறைப்ப டுத்தியும் விட்டது இங்கிலாந்து அணி.

ஆனாலும் ஒவ்வொரு முறையும் காயப்பட்டது பந்து வீச்சாளர்களும், பந்துகளும் தான்.

தனது கடைசி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக பிரட்மன் களம் இறங்கியபோது 'வெறும் 4 ஓட்டங்கள் எடுத்தால் போதும்; இவரது சராசரி ஓட்ட எண்ணிக்கை நூறு என்று ஆகும்' என்ற நிலை. ஆனால் பிரட்மன் 'டக்' அவுட் ஆனார். அந்த வெற்றியை இங்கிலாந்து நாடே கொண்டாடி மகிழ்ந்தது என்றால் பிரட்மனின் சாதனை பற்றி சொல்ல வேண்டியது இல்லை அல்லவா?

கிரிக்கெட் உலகின் பைபிள் என்று அழைக்கப்படும் விஸ்டன், சென்ற நூற்றாண்டின் தலைசிறந்த வீரர்கள் ஐவரை தேர்ந்தெடுக்க ஒரு வாக்கெடுப்பு நடத்தியது. அதில் பங்குபெற்ற நூறு பேருமே தங்கள் வாக்கை பிரட்மனுக்கு அளித்தனர். சென்ற நூற்றாண்டில் விஸ்டன் விருது பெற்ற ஐவரில் முதன்மையானவர் பிரட்மன்.

டெஸ்ட் வாழ்க்கையில் இவரது சராசரி 99.94. இது இன்று உலகம் எங்கும் விளையாடிக் கொண்டிருக்கும் கிரிக்கெட் சூப்பர் ஸ்டார்களால்கூட நினைத்துப் பார்க்க முடியாத சாதனை. பாதி கூட யாராலும் நெருங்க முடியாது.

1949ஆம் ஆண்டே கிரிக்கெட்டில் இருந்து விலகிய பிரட்மன், அதன்பின் கிரிக்கெட் தேர்வாளராகவும், நிர்வாகியாகவும், வெற்றிகரமான தொழில் அதிபராகவும் விளங்கியவர்.

கிரிக்கெட்டில் இருந்து பிரட்மன் விலகி ஐம்பது வருடம் ஆகிறது. ஆனாலும்கூட கடைசிவரை இவருக்கு கிரிக்கெட் ரசிகர்களிடம் இருந்து கடிதங்கள் வந்து கொண்டே இருந்தது. அப்பேர்ப்பட்ட-மனம் கவர்ந்த மாவீரன் பிரட்மன்.

ஒருமுறை ரீ.வி.யில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்த பிரட்மன் தன் மனைவி ஜெஸ்ஸி மென்சியஸை அருகில் அழைத்து, "சிறு வயதில் நான் எப்படி கிரிக்கெட் விளையாடுவேன் தெரியுமா? இதோ இப்படித்தான்" என்று ரீ.வி.யைக் காட்ட,

ஜெஸ்ஸி ரீ.வி.யை பார்க்க அங்கே



விளையாடிக்கொண்டு இருந்தது யார் தெரியுமா?

இந்திய இளம் புயல் சச்சின் டெண்டுல்கர்!

சச்சின் ஆட்டம் தன்னைப் போலவே உள்ளதாகப் பல முறை பாராட்டு தெரிவித்தவர் பிரட்மன்.

"சச்சின் பேட்டிங் செய்யும் போது எனது பேட்டிங்கை நானே பார்த்து ரசிப்பது போல உள்ளது" என்று மனம் திறந்து பாராட்டியவர் பிரட்மன்.

தனிமையை அதிகமாக விரும்பும் பிரட்மன் 1998 ஆம் ஆண்டு தனது 90வது பிறந்தநாளைக் கொண்டாடியபோது, ஒரு சிலரை மட்டுமே அழைத்தார். அவர்களில் முக்கியமான வி.வி.ஐ.பி. சச்சின்தான்.

பிரட்மனிடம் ஒரு வார்த்தை பேச வாய்ப்புக்கிடைக்காதா என்று உலகெங்கும்-பலரும் ஏன் பல கிரிக்கெட் வீரர்கள்கூட தவம் இருக்கும்போது தனக்கு தானே அந்த வாய்ப்பு தேடிவர ஆடிப்போய்விட்டார் சச்சின். "பிரட்மனை சந்தித்தது என் வாழ்நாளில் எனக்கு கிடைத்த ஒரு மாபெரும் விருது" என்று நெகிழ்ந்து கூறினார் சச்சின் டெண்டுல்கர்.

அத்துடன் சச்சினுக்கு தனது கிரிக்கெட் பேட் ஒன்றையும் பரிசாக வழங்கினார் பிரட்மன்.

"பிரட்மன் மரணம் அடைந்த நாள் என் வாழ்வின் துயரமான நாட்களில் ஒன்று!" என்று உருக்கமாக கூறியுள்ளார் சச்சின்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தன் மனைவி இறந்தபோது, மிகவும் மனம் நொந்து போன பிரட்மன் இப்போது தன் வாழ்க்கை என்ற 'பேட்டிங்'கையும் முடித்துக் கொண்டார்.

சாகும்போது 92½ வயது அந்த கிரிக்கெட் பிதாமகனுக்கு. இன்னும் ஏழு வருடங்கள் இருந்திருந்தால், இதிலும் கூட ஒரு 'சதம்' அடித்திருப்பார். ஆனால் இயற்கைக்குத் தான் கருணை இல்லாமல் போய்விட்டது.

பல வெற்றிடங்கள் ஒரு நொடியில் நிரம்பிவிடும். சில வெற்றிடங்களை யுகங்கள் கடந்தாலும் நிரப்ப முடியாது.

பிரட்மனால் உருவாக்கப்பட்டிருக்கும் வெற்றிடம் இரண்டாவது ரகம். ○

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 48

ஓவியர் கொண்டையா ராஜு தமது படங்களை வரைவதற்கான வர்ணங்களை ஒரு றாத்தல் தேயிலைப்பக்கட் அளவிலான பெட்டிகளிலிருந்து, எனாமல் கோப்பைகளில் பவுடராகக் கொட்டுவார். தண்ணீரை விட்டுக் கூழாகக் கலக்குவார். அத்தோடு, பெரிய சட்டியில் காய்ச்சி வைத்திருந்த வஜ்ஜிரப் பசையையும் (Glue) கொஞ்சம் சேர்த்துக் கொள்வார். இப்படியாக இருபது முப்பது கோப்பைகளில் அவருடைய வர்ணக் கூட்டுகள் இருந்தன.

அவர் உபயோகித்த பிரஷ்கள், வாட்டர் கலர் தூரிகைகள் போல, சிறியனவாக இருக்கவில்லை. ஒவ்வொன்றும் நீண்ட பிடியோடு இருந்தது. 12 அங்குலம் முதல், 18 அங்குலம் வரை நீண்டு, நெடிய குச்சி போல் இருந்தது. வர்ணத்தைப் பூசும் கற்றைப் பகுதியும் விறைப்பாக நின்றது.

நல்ல நெருங்கிய பழக்கம் ஏற்பட்ட பின் ஒரு நாள் ஓவியர் கொண்டையா ராஜுவிடம்-

"ஐயா, நான் தங்களிடம் கொஞ்சம் ஓவியக் கலை கற்றுக் கொள்ளலாம் என்று விரும்புகிறேன். சொல்லித் தருவீர்களா?" என்று கேட்டேன்.

அவர் பதில் சொல்லாமல் தாண்டித் தாண்டி வெளியே போனார். ஒரு கால் ஊனமானவர் அல்லவா?

பதில் சொல்லாமல்.இப்படிப் போகிறாரே. தப்பாகக் கேட்டுவிட்டேனோ? நான் கலங்கி நின்றபோது-

வெளியே போய், வாய்க்குள் அடக்கி வைத்திருந்த தாம்பூலக் கரையலைப் 'புளிச்'சென்று துப்பிவிட்டு மீண்டும் தாண்டித் தாண்டி என்னண்டை வந்தார்.

"ஓவியம் கற்கப் போகிறீர்களா? பேஷ், பேஷ். நன்றாகக் கற்றுக் கொள்ளுங்கள். ஆனால் ஒன்று, ஓவியக் கலையில் நான் சொல்லித் தருவதற்கு எதுவும் இல்லை..."

அவர் பதில் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. இது என்ன? இந்த நூற்றாண்டு கண்ட ஒரு பெரிய ஓவிய மேதை, தான் சொல்லித் தருவதற்கு எதுவும் இல்லை என்கிறாரே!

ஒருவேளை எனக்குக் கற்றுத் தருவது இவருக்கு விருப்பம் இல்லையோ?

அல்லது ஒரு சில நாட்டு வைத்தியர்களைப் போல தமக்குத் தெரிந்த மூலிகை தமக்கே தெரிய வேண்டும். பிறருக்குத் தெரிந்து விடக்கூடாது என்று எண்ணும் குறுகிய நோக்கம் இவரிடமும் குடி கொண்டிருக்கிறதோ! நான் சற்று நேரம் திகைத்திருந்தேன்.

ஓவியர் கொண்டையா ராஜு புன்முறுவலோடு தொடர்ந்தார்.

"நான் என்ன சொல்கிறேன் என்றால், ஓவியக் கலையில் சொல்லித் தருவதற்கு அதிகம் இல்லை.பார்த்துக் கற்றுக் கொள்வது தான் அதிகம். கண்ணால் காண்பதைக் கையால் வரைய முடியுமானால் அப்படிப்பட்ட ஒருவருக்கு சொல்லிக் கொடுப்பதற்கு எதுவும் இல்லை. எதற்கும் இங்கு காரியங்கள் நடப்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள். அதற்கு மேல் ஏதாவது தெரிய வேண்டுமானால் கேளுங்கள். மகிழ்ச்சியோடு சொல்லித் தருகிறேன்-" என்றார்.



"அப்பாடா" என்று பெருமுச்சு விட்டேன் நான்.

அவ்வளவோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. "உண்மையிலேயே உங்களுக்கு ஓர் ஓவியராக வேண்டும் என்று ஆசையிருந்தால், ஏதாவது வரைந்து கொண்டு வந்து காட்டுங்கள். உங்களிடம் திறமை காணப்பட்டால் என்னோடு இந்தியாவுக்கு வாருங்கள். ஓவியராகி விடலாம்" என்றார்.

## எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

"அது நடக்கிற காரியம் இல்லை. ஏனென்றால், படிப்பை விட்டு இந்தியா செல்ல பெற்றோர் அனுமதிக்க மாட்டார்கள். எனவே, திருகோணமலையில் கூடவே இருந்து பார்த்துப் பழகுகிறேன். ஐயா" என்றேன். அவரும் "சரி" என்றார்,

எனக்குத் தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்களை அன்றே கேட்க ஆரம்பித்து விட்டேன்.

ஓவியர் கொண்டையா ராஜு ஓவியக் கலையின் சில நுணுக்கங்களை அன்றிலிருந்து அவ்வப்போது எனக்குச் சொல்லி வந்தார். நான் அறிய விரும்பிய வண்ணக் கலவை பற்றியும், பிரஷ்கள் பற்றியும் விளக்கினார்.

"வாட்டர் கலர் (Water Colour) என்னும் நீர் வண்ணத்தைக் கொண்டு கடதாசியில் தான் (Drawing paper) படம் வரையலாம். துணியில் வரைய முடியாது. துணியில் வரைவதானால் எண்ணெய் வண்ணம் (Oil paint) தான் பயன்படுத்தப் படவேண்டும், எண்ணெய் வண்ணம் மிக விலையானது, வரைவதற்கு அதிக நேரம் பிடிக்கும். அதேபோல காய்வதற்கும் பல நாட்கள் பிடிக்கும். ஒட்டிப் பிடிக்கும். 'சுருள் சீன்' போன்றவற்றை எண்ணெய் வண்ணத்தில் வரையக்கூடாது.

வாட்டர் கலர் 'ட்ரான்ஸ் பேரன்ட்ஸி' (Transparency) ஆனது. ஆகையினால் முதலில் வெளிர் வண்ணங்களைக் கொண்டே வரைய ஆரம்பித்த பின்னர் படிப்படியாக வண்ணத்தடிப்பை (Dark tones) அதிகரிக்க வேண்டும். எடுத்த எடுப்பிலே கடும் வண்ணத்தைத் தீட்டிவிட்டால் அதை மறைத்து வெளிர் வண்ணத்தை அதற்கு மேலே தீட்ட முடியாது. தீட்டினால் முன்பு தீட்டிய படம் வண்ணம் மறையாது.

"ஆகவேதான், விளம்பரத் தட்டிகள், சீன் வகைகள் வரைவதற்கு நாங்கள் டிஸ்டெம்பர் கலர் (distemper colour) பாவிக்கிறோம். டிஸ்டெம்பர் கலர் 'ஒப்பேஸிட்டி' உடையாது. (opacity) ஒன்றை ஒன்று மறைக்கக் கூடியது. கடும் சிவப்பைப் பூசிவிட்டு அதன் மேல் வெளிர் வண்ணமான மஞ்சள் நிறத்தைப் பூசினாலும் கடும் சிவப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். மேலும் விரைவாக வரையலாம். வரைந்தவுடன் காய்ந்து விடும். பின்னர் ஒட்டப் பிடிப்பும் இராது.

"ஆனால் வரையப்பட்ட படங்கள் நனைந்து விடாதபடி மட்டும் பாதுகாக்க வேண்டும். அதற்கும் வழியிருக்கிறது. படத்தை வரைந்துவிட்டு மேலே ஏகமொத்தமா 'கோபல் வார்னிஷ்' (Copal varnish) பூசிவிட்டால், நனைந்தாலும் படம் அவ்வளவாகக் கெட்டு விடாது.

"டிஸ்டெம்பர் கலர்களிலே ஹால்ஸ் டிஸ்டெம்பர் (Hall's distemper) புகழ் பெற்றது. இங்கிலாந்திலிருந்து றாத்தல் கணக்



கில் பெட்டியில் அடைத்து வருகிறது. மொத்தம் 56 வண்ணங்கள் அவர்கள் தயாரிக்கிறார்கள். ஆப்பிள் பச்சையிலிருந்து, தென்னை ஓலைப் பச்சை வரை, வான் நீலத்திலிருந்து கடல் நீலம் வரை, தாமரைச் சிவப்பிலிருந்து கண்டல் இரத்தச் சிவப்பு வரை திருக்கொன்றை மஞ்சளிலிருந்து பசும் பொன் மஞ்சள் வரை, பால் வெள்ளையிலிருந்து கேசக் கறுப்பு வரை 56 வண்ணங்களில் தயாரிக்கிறார்கள். இவற்றையும் வஜ்ஜிரத்தையும் வாங்கி வண்ணக் கலவைகள் செய்து கொள்ளலாம். டிஸ்டெம்பர் கலர் துணியில் மட்டுமன்றி கடதாசியிலும் தீட்டக்கூடிய வண்ணமாகும்."

இவ்வாறு ஒரு பாடசாலை ஆசிரியரைப்போல எனக்குப் பாடம் நடத்தினார் ஓவியர் கொண்டையா ராஜு.

பிரஷ்களைப் பற்றிக் கேட்டேன்.

வாட்டர் கலர் தீட்டுவதற்குப் பாவிக்கப்படும் பிரஷ் 'சேபிள் ஹேர் பிரஷ்' (Sable hair brush) என்று சொல்லப் படும். டிஸ்டெம்பர் கலர் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பிரஷ் 'பிரிஸ்ட்ரில் பிரஷ்' (bristle brush) என்று சொல்லப்படும்.

"வாட்டர், கலர் தீட்டுவதற்கு சேபிள் ஹேர் பிரஷ்தான் மிகச் சிறந்தது. இது மிக விலையானது. வட துருவப் பிரதேசத்திலே ஒரு சிற்றினக் 'கரடி' உண்டு. உருவத்தில் பெரும் முயல் அளவு இருக்கக் கூடியது. பனி எலிகளையும் மீனையும் உணவாக உண்ணும் ஜந்து இது. இதை சேபிள் (Sable) என்றும் ஊர்ஸா (Ursa) என்றும் அழைப்பார்கள். இதன் உரோமத்தைக் கொண்டு செய்யப்படும் பிரஷ்தான் சேபிள் ஹேர் பிரஷ்.

"பிரிஸ்ட்ரில் பிரஷ் என்பது ஒரு வகைத் தாழை மரத்தின் தும்பிலிருந்து செய்யப்படும் பிரஷ், (இப்போது பிளாஸ்டிக்கிலும் செய்கிறார்கள்). இந்த பிரஷ்ஷின் கற்றைப் பகுதி விறைப்பாக, உருண்டையாகவும், கட்டையாகவும் இரண்டு வகைகளில் அமைந்திருக்கும். பிடி நீளமாக இருப்பதால், ஓவியம் தீட்டும் படுதாவை எட்டத்தில் வைத்து, கையை முழு நீளத்துக்கு நீட்டி தூர நின்று வரைய முடிகிறது. அப்போது கண்ணுடைய வீச்சு நோக்கினால், வரையும் படத்தின் அங்க சந்தங்களை அதாவது 'புரேபாஷனை'க் (proportion) கணக்கிட்டுக் கொண்டே வரைய முடிகிறது."

இவ்வாறு மேலும் விளக்கினார் ஓவியர் கொண்டையா ராஜு. அத்தோடு மனித உருவங்களை 'ஸ்கெச்' செய்வதில் கடைப்பிடிக்க வேண்டிய 'டெக்னிக்'குகளையும் சுருக்கமாகக் கூறி, 'லைட் அண்ட் ஷேட் எபக்ட்'டையும், 'ஹைலைட் டிங்' முறைகளையும் சொல்லிக்கொடுத்தார். இரண்டு தடவைகள் மீனலோசனி நாடக சபா திருகோணமலையில் முகாமிட்டபோதும் நான் அவரிடம் சில மாதங்கள் ஓவிய மாணவனாக இருந்தேன்.

ஓவியர் கொண்டையா ராஜுவிடம் நான் கேட்டுத் தெரிந்து கொண்ட மற்றொரு விஷயம் நாடகத் தந்தை என்று அழைக்கப்பட்ட டி.டி.சங்கரதாஸ் சுவாமிகளைப் பற்றிய விவரமாகும்.

நாடகத் தந்தை டி.டி.சங்கரதாஸ் சுவாமிகளின் பெயரை முதன் முதலாக என் முன்னால் உச்சரித்து, அறிமுகம் செய்து வைத்தவர் நாடகப் பழக்குநர் திரு.முத்தப்பாதான் என்பதைக் கடந்த வாரக் கட்டுரையில் கூறியிருந்தேன். அதைத் தொடர்ந்து ஓவியர் கொண்டையா ராஜு அவரைப் பற்றிய முக்கியமான விவரங்கள் சிலவற்றை எடுத்துக் கூறினார். பின்னர் நானாகவே மேலும் விவரங்களைப் படித்து அறிந்து கொண்டேன்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ் நாடகத் துறையிலே ஒரு திருப்பம் ஏற்பட்டது. அதுவரை தமிழ் நாடகங்கள் தெருக் கூத்துக்களாகவும், வட்டக் களரி நாடகங்களாகவுமே ஆடப்பட்டு வந்தன. இங்கொன்றும் அங்கொன்றுமாக மட்டும் பார்ஸீ நாடகங்களையும், மாராஷ்டிர நாடகங்களையும் அடியொற்றி நாடக விலாசங்கள் மேடையேற்றப்பட்டு வந்தன.

கொட்டகை போட்டு, மேடை அமைத்து, திரைச் சீலைகள் தொங்கவிட்டு, செட்டுகள் அமைத்து, லைட்டுகள் பூட்டி, பாடல்களோடு, வசனங்களும் பேசி நடத்தப்படும் 'டிராமா' முறை நாடகங்கள் அதிகம் வழக்கத்தில் வராதிருந்த வேளையில்-

இந்த டிராமாவைத் தமிழ் நாட்டில் சற்று உத்வேகத்தோடு அறிமுகப்படுத்தியவர்தான் ஸ்ரீலஸ்ரீ தா.தா. சங்கரதாஸ் சுவாமிகள் என்பவராவார்.

பாரதியார் பிறப்பதற்கு 15 வருடங்களுக்கு முன், அதாவது 1867 ஆம் ஆண்டில் சங்கரதாஸ் திருநெல்வேலி மாவட்டத்தில், எட்டயபுரத்துக்குச் சமீபமாகவுள்ள ஒரு குக்கிராமத்தில் மறவர் குலத்தில் பிறந்தார். இவர் தகப்பனார் படித்தவர். ராமாயணப் புலவர் என்று சிறப்புப் பெயர் பெற்றவர்.

சங்கரதாஸ், தமது தந்தையாரிடமும் பின்னர் பழநி தண்டாயுதபாணி சுவாமிகளிடம் தமிழ்க் கல்வி கற்றார். தூத்துக்குடியில் உப்புக் கணக்காளராகப் பணி புரிந்தார். அப்போது தமது பெயரைத் தூத்துக்குடி தாமோதரம் சங்கரதாஸ் என்று வைத்துக் கொண்டார்.

பின்னர், தமது 24 ஆவது வயதில் நாடகத் துறையில் புகுந்து சில தெருக் கூத்துகளில் இரணியன், இராவணன், கம்சன், இயமன், சூரபத்மன் போன்ற வேடங்களைத் தாங்கிக் கூத்தாடினார்.

இந்தக் காலத்தில் இவருக்கு நாடகச் சூழலில் ஒரு காதல் ஏற்பட்டு ஏமாற்றத்தில் முடிந்தது. உடனே, இவர் துறவு பூண்டு வடநாடுகளில் அலைந்தார். அங்கும் நாடகக் கவர்ச்சி அவரை விடவில்லை.

**தொகுத்தளிப்பவர்**
**இரா.பத்மநாதன்**

இசை, ஹார்மோனியம், தபேலா ஆகியவற்றைக் கற்றுக் கொண்டு தமிழ் நாடு வந்தார்.

புதுக்கோட்டையில் அந்நேரம் பாரதியார் அரசியல் தஞ்சம் புகுந்திருந்த வேளை, அங்கு இவர் பாரதியாரையும், மற்றும் வ.வே.சு.ஐயர் போன்றவர்களையும் சந்தித்து அளவளாவினார். புதுக்கோட்டை மகாவித்துவான் கஞ்சிரா மான் பூண்டியார்பிள்ளை என்பவர் சங்கரதாஸ் சுவாமிகளைத் திரும்பவும் தமிழ் நாடகத் துறைக்கு இழுத்து விட்டார். புதுக்கோட்டையிலேயே வைத்து இவர் பல டிராமாக்களை எழுதலானார்.

(இன்னும் வரும்)

# வாரம் ஒரு வார்த்தை!

## 11. சிக்கனமும் கருமித்தனமும்

சிக்கனமாயிரு...

ஆனால் கருமியாய் இருக்காதே!

நபிகள் நாயகம் போதனைகள்லே இதுவும் ஒண்ணு

ஒரு சமயம்...

எம் பெருமானார், நபிகள் நாயகம் அவர்கள் கிட்டே ஒரு பெரியவர் வந்தார்.

"எங்கள் ஊர்லே பள்ளிவாசல் இல்லே... அதை எப்படியும் கட்டியாகணும்.

அதுக்குப் பணம் தேவை... என்ன செய்யலாம்?"ன்னு யோசனை கேட்டார்.

அதுக்கு நபிகள் நாயகம் சொன்னார்.

"பக்கத்து ஊர்லே ஒரு செல்வந்தர் இருக்கார்... அவர் பேரு இன்னது... அவர் கிட்டே போய் கேளுங்க... கொடுப்பார்" அப்படின்னார்.

உடனே அந்தப் பெரியவர் அடுத்த ஊருக்கும் போனார். அந்தப் பணக்காரரைப் பார்த்தார்.

அவருக்கு பெரிய அதிர்ச்சி! ஏன் தெரியுமா?

இவரு அங்கே போன நேரத்துலே அந்த பணக்காரர் ஒரு ஆளை தூணிலே கட்டிவச்சி அவன் முகத்துலேயே குத்திக் கிட்டிருந்தார்!

அதைப் பார்த்த இந்த பெரியவர் பக்கத்துலே இருந்தவங்ககிட்டே "ஏங்க இவரு அப்படி அந்த ஆளுமுகத்துலே குத்திக்கிட்டிருக்கார்?"ன்னு கேட்டார்.

"அந்தப் பணக்காரர் அந்த ஆளை கடைக்குப் போயி பருப்பு வாங்கிக்கிட்டு வரச் சொன்னார்.

வாங்கிட்டு வர்றவழியிலே பத்து பருப்பு சிந்திப் போச்சு! அதுக்காக பத்து குத்து குத்திக்கிட்டுருக்கார்.

ஒரு பருப்புக்கு ஒரு குத்து வீதமா கணக்குப் பண்ணி குத்திக்கிட்டிருக்கார்." அப்படின்னு சொல்லியிருக்காங்க! அவ்வளவு தான்...

பணம் கேக்க வந்தவர் பயந்து போய் ஓட்டம் பிடிச்சிருக்கார்.

மறுபடியும் நபிகள் கிட்டே வந்து நின்னார்.

"பணக்காரர் என்ன கொடுத்தார்"ன்னு கேட்டிருக்கார்,

"குத்துதான் கொடுத்தார்.."ன்னு ஆரம்பிச்சி விவரத்தை சொல்லியிருக்கிறார்.

நபிகள் நாயகமோ "மறுபடியும் அவர் கிட்டே போய்கேள்!" அப்படின்னு கட்டளையிட்டார்.

இவரு மறுபடியும் அவர்கிட்டே போனார்.

இந்தத் தடவை என்ன நடந்துகிட்டிருந்தது தெரியுமா?

அந்தப் பணக்காரர் இன்னொரு ஆளை ஒரு மரத்துலே கட்டிவச்சி சாட்டையாலே அடிச்சிக்கிட்டிருந்தார்.

இந்த பெரியவர் அங்கே இருந்தவங்க கிட்டே "ஏன் இப்படி?"ன்னு கேட்டார்.

அவங்க சொன்னாங்க:

"இந்த ஆள் எண்ணெய் வாங்க்கிட்டு வரப் போனான். வர்ற வழியிலே பத்து சொட்டு எண்ணெய் கீழே சிந்திப் போச்சி! அதுக்காக பத்து சவுக்கடி கொடுக்கிறார்! சொட்டுக்கு ஒரு அடி கணக்கு!" அப்படின்னாங்க....

வந்த பெரியவருக்கு வாழ்க்கையே வெறுத்துடும் போல ஆயிட்டுது!

'இந்த கருமி கிட்டே பணம் கேக்கறதை விட பள்ளிவாசல் கட்டறதையே நிறுத்திப்புடறது நல்லது'ன்னு நினைச்சுட்டார்.

ஆமாம்... இவருகிட்டே நன்கொடை கேக்க போயி அவரும் 10 ரூபா பணத்தை கொடுத்துட்டு, ரூபாய்க்கு ஒரு குத்துன்னு மூஞ்சியிலே குத்திக்கிட்டிருந்தார்ன்னா யாரு தாங்கறது? நினைச்சிப் பார்த்தார்.

மறுபடியும் ஓட்டம் பிடிச்சார். நபிகள் கிட்டே வந்து நின்னார்.

"செல்வந்தர் என்ன கொடுத்தார்?"ன்னார்.

"சவுக்கடி!"ன்னார் இவர். விவரத்தையும் சொன்னார்!

"மறுபடியும் போய் கேள்"ன்னு உத்தரவ போட்டார் நபிகள் நாயகம்.

பெரியவர் மறுபடியும்-துணிச்சலை வரவழைச்சிக்கிட்டு அந்த பணக்காரர்கிட்டே போனார்.

நல்ல வேளையா இந்த தடவை அங்கே எதுவும் நடக்கலே! பெரியவர் துணிஞ்சி அவருகிட்டே நெருங்கிப் போனார். வந்த காரியத்தைப் பத்தி சொன்னார்.

"எவ்வளவு ரூபாயிலே பள்ளிவாசல் கட்டப் போறீங்க?"ன்னு அந்த செல்வந்தர் கேட்டார்.

"அதை கட்டி முடிக்க பத்தாயிரம் ஆவும்... நீங்க ஒரு ஐயாயிரம் குடுத்தா மத்தவங்ககிட்டே ஐயாயிரம் வாங்கிக்கலாம்"ன்னார் இவர்.

அதுக்கு அந்தப் பணக்காரர் சொன்னார்,

"இவ்வளவு காலம் உங்க ஊர்லே பள்ளிவாசல் இல்லாமே இருந்ததே தவறு. இத இன்னமும் பலபேரு கிட்டே போயி நன்கொடை கேட்டுகிட்டு காலம் கடத்த வேணாம். நானே பத்தாயிரமும் தர்றேன்... இதுக்கு உதவாத பணம் எதுக்காக எங்கிட்டே இருக்கு?" அப்படின்னு சொல்லி உடனே பணத்தை அள்ளிக்குடுத்தார்.

பெரியவருக்கு தலை சுத்த ஆரம்பிச்சுட்டுது... ஒரே குழப்பம்! நபிகள் கிட்டே வந்தார்.

"பத்து பருப்பு சிந்தினதுக்காக பத்து குத்து குத்தினவர். பத்து சொட்டு எண்ணெய் சிந்தினதுக்காக பத்து சவுக்கடி கொடுத்தவர்-

பள்ளிவாசல் கட்ட ஐயாயிரம் கேட்டா பத்தாயிரம் குடுக்கிறாரே... இது எப்படி?"ன்னு கேட்டார்.

இப்பதான் நபிகள் இதுக்கு விளக்கம் குடுக்கிறார்.

"கருமித்தனம்ங்கறது வேறே! சிக்கனம்ங்கறது வேறே!

அந்த ஆள் கருமியில்லே! சிக்கனத்தை கையாள்றவர்!

அந்த ஆள் சிக்கனமாயிருந்து சேர்த்து வச்சதுனாலே தான் அந்தப் பணம் பள்ளிவாசல் கட்டப் பயன்படுது." அப்படின்னார்.

நபிகள்நாயகம் அவர்களுடைய இந்த வாக்கு தான் கருமித்தனத்துக்கும் சிக்கனத்துக்கும் உள்ள இடை வெளியை நமக்கு புரிய வைக்குது!

இந்த நேரத்துலே நான் ஒண்ணு சொல்லி வைக்கிறேன்...

இனிமேலேயும் நீங்க கடைக்குப் போயி பருப்பு வாங்கிக்கிட்டு வர்ற சந்தர்ப்பம் ஏற்படலாம்.

அப்படி வாங்கிக்கிட்டு வர்றப்ப வழியிலே ஏதாவது சிந்திப் போச்சின்னா...

எத்தனை பருப்பு சிந்திப் போச்சிங்கற விவரத்தையெல்லாம் வீட்டுலே போயி வெகுளித்தனமா சொல்லிகிட்டிருக்காதீங்க. ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்காது!

**தென்கச்சி - கோ. சுவாமிநாதன்**



(வார்த்தைகள் தொடரும்)

# விபரீத ஆசை



**ச.இரா.பாலகிருஷ்ண ஐயர்**

வழக்கம்போல் முகுந்தன் ஷெட்டில் இருந்து தனது புதிய காரை வெளியே கொண்டுவந்து கொண்டிருந்தான். அவன் ஒருவங்கியின் முகாமையாளராகப் பணியாற்றுபவன். அவன் கடமைபுரியும் அந்த தனியார் வங்கி அவனுக்கு நவீன வசதிகள் கொண்ட அக்காரை வழங்கியிருந்தது.

அவன் மனதுக்குப்பிடித்த அகிலாவையே கல்யாணம் செய்தபின், ஐந்துவயது நிரம்பிய ஜீவிகா என்ற குழந்தைக்கும் அப்பாவாகி விட்டான். அவர்கள் வாழ்க்கை எவ்வித துன்பமும் இராது தென்றலாக வீசிக் கொண்டிருந்தது. தினம் அவன் தனது காரை எடுத்துப் பின்னே செலுத்தும்போது, பின்னே பொருத்தப்பட்ட சமிக்ஞை ஒலி ஒரு குழந்தை அலறி அழுவது போல ஒலிக்கும். மற்றைய வாகனங்கள் 'பீப்' 'பீப்' என ஒலியை எழுப்பிப் பின்னோக்கி வருவதைவிட தனது காரில் அவைபோல் இராமல் ஓர் அசாதாரண ஒலி இருக்க வேணும் என்பது அவன் ஆசை.

அக்கார் அவனது ஷெட்டில் இருந்து வெளியே எடுக்கும் போதும் பங்களாவின் வெளியிலுள்ள புல்தரையில் நகரும்போதும் அந்த ஒலியைக்கேட்கும் அகிலா குழந்தை ஜீவிகாவையும் இடுப்பில் தூக்கிக் கொண்டு வந்து வேடிக்கை காட்டுவாள். அதுவும் சிரித்து இரண்டு கைகளையும் தட்டி ஆர்ப்பரிக்கும். தினம் முகுந்தன் போகும்போதும், கைகளை காட்டி அகிலாவும் குழந்தையும், டாட்டா காட்டுவார்கள் அவனது கார் மறையும் வரை.

அன்று ஜீவிகாவின் பிறந்தநாள். வழக்கம்போல முகுந்தன் தனது அலுவலகத்துக்குப் போய் வழமையான வேலைகளை முடித்துவிட்டு அரைநாள் விடுமுறை எடுத்துக் கொண்டு குழந்தைக்கு வேண்டிய உடுப்புக்களையும் கடைகளில் அலைந்து தேடி வாங்கிக்கொண்டான். நேரகாலத்துடன் அகிலாவுக்கும் தொலைபேசியில் தான் விடுமுறை எடுத்துவிட்டதாயும் உணவு வகைகளை நேரகாலத்துடன் சமைத்து முடித்துவிடும்படியும் பிற்பகல் இரண்டு மணிக்காட்சிக்குப் போக ஆயத்தமாய் இருக்கும் படியும் கூறியிருந்தான்.

அகிலாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவசர அவசரமாகச் சமைத்தாள். முகுந்தனின் தாயாருக்கும் வேண்டிய பணிவிடைகளைச் செய்தாள். ஒருகால் பாரிசவாதத்தால் இயங்காது போனதால் அதையும் அகிலாதான் எல்லாம் பார்க்க வேண்டும். குழந்தை ஜீவிகாவுக்கும் குளிப்பாட்டி தலைவாரிப் பின்னி அழகாக வைத்திருந்தாள். ஜீவிகாவும் வெளியே விளையாடப் போய்விட்டாள். முகுந்தன் அலுவலகத்திலிருந்து மிக சந்தோஷத்துடன் வீட்டை நோக்கி காரை செலுத்தி வந்தான். சாத்தியிருந்த கேட்டை இறங்கிவந்து திறந்தான். அவனைக் கண்ட அவனுடைய பமினியன் நாயும் ஓடி வந்து அவனைச் சுற்றி சுற்றி வந்த இருகாலில் எழும்பி நின்று வாலாட்டியபடி நின்றது. அன்று காலை அவனுடைய காரின் பின்னே பொருத்தியிருந்த சமிக்ஞை தரும் ஒலி பழுதடைந்து விட்டதால் வரும் வழியில் அதை ஒரு கராஜில் சரிசெய்து விட்டுத்தான் வீடு வந்து கொண்டிருந்தான். வீடு வந்ததும் காரை பின்னோக்கி ஷெட்டுக்குள் செலுத்திக் கொண்டிருந்தான். அந்த நேரம் குழந்தை அழுவதும் அலறுவதுமாக ஒலித்தது. முகுந்தனுக்கு சந்தோஷம். அது சரியாக வேலை செய்கிறது என்று, ஆனால் ஜீவிகாவை அகிலா குளிப்பாட்டி ஆகாரம் கொடுத்தபின் அது திறந்து கிடந்த ஷெட்டில் போய் விளையாடிவிட்டு அங்கேயே தூங்கி விட்டதும், அவள் மேலேயே முகுந்தன் தன்கார் சென்று கொண்டிருப்பதும் அதனால்தான் அக்குழந்தை நசுக்கிக் கொண்டு அழுது அலறுகிறது என்பதும் அவனுக்கோ வீட்டுக்குள் இருக்கும் அகிலாவுக்கோ தெரிந்திருக்க நியாயமில்லை.

# அம்மா என்றழைக்காத...

காரிலிருந்து தளர்வாக இறங்கி, வாசல் பூட்டுக்கு விடுதலை கொடுத்துவிட்டு, உள்ளே வந்தாள் 'வீணாசூரி'. கழுத்து கனக்கும், பூமாலைகள், தோள்கனக்கும் பொன்னாடை, கரங்கள் தாங்கும் பரிசு மழைகள். பட்டுச்சேலை சரசரக்க, ஒவ்வொன்றாக அருகிலிருந்த மேசையில் கிடத்திவிட்டு, 'பொத்'தென்று விழுந்து சாய்வு நாற்காலியில் அமர்ந்தாள்.

ஒரு காலத்தில் பேப்பரும் பேனை வாங்கக்கூட, காசில்லாமல் இருந்தவள். இன்று நாடுபோற்றும் பேர்பெற்ற 'பெண் எழுத்தாளராக' வளர்ந்திருக்கிறாள். இன்று கூட 'தமிழ் இளைஞர் பேரவை', அவளுக்காக நடத்திய பாராட்டு விழாவில் கலந்து விட்டுத்தான் வந்திருக்கிறாள். எழுதி, எழுதி எழுத்துலகில் தனக்கென ஓரிடத்தைத் தக்கவைத்துவிட்டாள்.

இன்றைய விழாவை எண்ணிப் பார்க்கப்பார்க்க, இன்பமயமாக இருந்தது வீணாவுக்கு. நாலாபக்கமும் தொங்கும் பனர்களும் பலூன்களும் அவளையே வாழ்த்தின. அவள் காரிலிருந்து இறங்கியது முதல், மேடைக்குச் செல்லும் வரை இரசிகர்கூட்டம் அலைமோதி,



**லக்ஷிகாஹேமசந்ரா-திருகோணமலை**

அவளைத் திக்குமுக்காடச் செய்துவிட்டன. அவள் பேசும் போது அரங்கமெங்கும் நிலவிய நிசப்தம், அவள் பேசிமுடிய கரகோஷமாக மாறி, அரங்கத்தையே அதிரவைத்தன. ரசிகர்களும், விமர்சகர்களும் அவளுக்குச் சூட்டிய மாலைகள், அவளது மூக்குவரை உயர்ந்தது. அவளது எழுத்தாற்றலைப் பாராட்டி, அவளுக்குப் பொன்னாலான பேனை வழங்கினர். நிகழ்ச்சி ஆரம்பித்தது முதல் முடிவடைந்து அவள் காரில் ஏறும் வரை,

"எழுத்தாள் வீணாசூரி! வாழ்க!!",

"பெண்ணினத்தைக் காக்க வந்த புதுமைப் பெண்! வாழ்க! வாழ்க!!" என்று வாழ்த்தொலி செவியைச் செவிடாக்கியது.

எல்லாவற்றையும் நினைக்க நினைக்க, அவள் மீதே அவளுக்குப் பெருமிதம் ஏற்பட்டது.

'எத்தனை வாய்கள்?!' 'எத்தனை வார்த்தைகள்?!'

'எவ்வளவு கூச்சல்கள்?!'

'எத்தனை இலட்சம் மக்கள். எத்தனையாயிரம் வார்த்தைகளால் என்னை வாழ்த்தினர்'? இன்றைய நாளில் எல்லோராலும் பேசப்படும் நான்கு பிரமுகர்களில் வீணாசூரியும் ஒருத்தி.

ஒரு பக்கம் ஆனந்தம் நெஞ்சை நிமிர்த்தினாலும், மறுபக்கமோ துக்கம் தொண்டையை அடைத்தது.

'எத்தனையாயிரம் வாய்கள் என்னை எப்படி வாழ்த்தினாலும், 'அம்மா' என்று என்னை அழைக்க எனக்காக ஒரு வாய்கூட இல்லையே?! அந்த ஒரு வார்த்தைக்காக நான் எவ்வளவு ஏங்கினாலும், யாருமே என்னை அப்படி அழைப்பதற்கு இல்லையே! இவ்வளவு பேர், புகழ், பணம், பதவி அனைத்தையும் தந்த இறைவன், எனக்கொரு மழலைச் செல்வத்தைத் தராமல் போய்விட்டானே' கண்கள் பனிக்க யோசித்துக் கொண்டிருந்தவேளையில், காரை பாக்பண்ணிவிட்டு, அவள் கணவன் சூரி வந்தான்.

கதிரையில் சோர்ந்து போய், அமர்ந்திருக்கும் தன் இனியவளை நினைத்துப் பெருமைப்பட்டுக்கொண்டே, அவள் அருகில் வந்தமர்ந்தான்.


"ஹேய் வீணா! இன்னைக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கன். எத்தனபேர், எத்தனவிதமா உன்னப் பாராட்டினாங்க. எத்தனை மாலை, எத்தனை பரிசு, வாவ்! கீழ ஒடியன்சோட இருந்து பார்க்கயில, எனக்கே உன்னயவந்து, கட்டிப்புடிச்சு 'கிஸ் பண்ணணும்போல இருந்திச்சு..." நீளநீளமாகப் பேசிக் கொண்டிருந்தவன், மனைவியின் வாடிய முகத்தைக் கண்டதும் பதறியவனாக, "ஹேய்! வீணா!! என்னம்மா? என்ன ஆச்சு?" என்று அவளை உலுப்பினான். தனது சோகங்களை இறக்கி வைக்க ஒரு சுமைதாங்கி கிடைக்கவும், உடனே அவன் மார்பில் முகம் புதைத்து, கதறி அழுதாள் வீணாசூரி.

அவளது கவலையின் காரணத்தைப் புரிந்து கொண்ட சூரி, அவள் அழுதுமுடியும்வரை, மௌனமாக அவளது முதுகைத் தடவியவாறே அணைத்திருந்தான். அணை உடைத்துப் பாயும் ஆற்றின் வெள்ளம் வற்றுவது போல அவளது கவலை அடங்கவும், மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

"அம்மா! வீணாக்குட்டி!! இங்க பார். கல்யாணம் ஆகி பத்து வருசம் முடிஞ்சாச்சு. இனிமேல் எங்களுக்கு குழந்தைகள் கிடைக்க வாய்ப்பில்லையெண்டு டொக்டர்ஸ் சொல்லிட்டினம். எத்தன நாளுக்கு, நான் கம்பனியையும், நீ கதைகளையும் கட்டிப்பிடிச்சிட்டு அழுகிறது? எங்களுக்கும் வாழ்றதுக்கு ஒரு இலட்சியம் வேணும். யோசிச்சுப்பார்.

இனி, உன்ர வறட்டுப் பிடிவாதத்த மூட்டைகட்டிவச்சிட்டு, என்னோட சொல்லக் கேளு. எங்களுக்காக ஒரு நல்ல குழந்தையா பார்த்து, அநாதை ஆஸ்ரமத்தில இருந்து தத்தெடுத்து வளர்ப்போம். நீ கூட, உன்னோட எத்தன கதைகளில, 'அநாதைச் சிறுவர்க்கு வாழ்வளிப்போம்' எண்டு எழுதியிருக்க. அதயெல்லாம் எழுத்தில மட்டுமில்லாம செயல்லேயும் காட்டணும். நாங்க எங்களுக்கெண்டு ரெண்டு, மூணப் பெத்து நாட்டோட சனத் தொகையை கூட்டறதவிட, இருக்கிற ஒரு அநாதைப்பிள்ளையையாவது நல்ல நிலைக்குக் கொண்டு வரலாம் தானே?" ஆறுதலாகவும் ஆனால் உறுதியாகவும் சூரி கூறிய அந்த ஆலோசனையை மௌனமாக யோசித்துவிட்டு, ஆமோதித்தாள் பெண் எழுத்தாளர் 'வீணாசூரி'

# கறுப்புப்பட்டி



**அக்னஸ் சவரிமுத்து-வட்டகொட**

மாலைக் கொழுந்து நிறுவை. எல்லாப் பெண்களும் நிறுத்துவிட்டு போய்க்கொண்டிருக்க, வரிசையின் கடைசியிலிருந்து எண்ணினால் ஆறாவது ஆளாக வந்து தனது கூடையைத் தூக்கி நிறுவைத் தட்டில் கொட்டினாள் அங்கம்மா; ஐந்து கிலோவைக் காட்டியது தராசு.

"இது சரிவராத காரியம்; காலைலேருந்து பகல் நிறுவைக்கு ஒன்பது கிலோ; அரநேரம் பூராவும் எடுத்து அஞ்சி, மொத்தம் பதினாலு கிலோ; இது யார்ர ஏமாத்துற வேல; இந்த ஒரு கெழமையா நானும் பாத்துக்கிட்டுத்தான் வர்ரேன்; அஞ்சாறு பேரு,- யார்னு ஆள சொல்ல மாட்டேன்; பதினைஞ்சு கிலோவுக்கு கொறையாவே நிறுத்து வருது; நாளைக்கும் இப்டிருந்தா அரப்பேருதான் சொல்லிப்புட்டேன்; எங்களயென்னா வெளையாடுறவன்கன்னு பாத்தியா நீயெல்லாம்"?.

அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தையெல்லாம் கொட்டினான் ஐயா சாமிக் கங்காணி.

"இருவது கிலோகூட ஒரு நாளைக்கி எடுக்க முடியாத ஆளள்லாம் எதுக்கு வேலைக்கி வர்ர? பேசாம வீட்டுல இருக்க வேண்டியதுதானே!"

எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளினாற்போல கங்காணியின் பேச்சுக்கு மெருகூட்டினார் கணக்கப்பிள்ளை.

"ஏங்கங்காணி! சத்தியாக்கிரக முன்னா என்னானு தெரியுமா ஒங்களுக்கு? ஸ்லோ வேல ஸ்லோ வேலன்னு சொல்லிக்கிட்டு பேயா அறையிநாளுல கொழுந்தெடுக்க; இருவது கிலோவுக்கு மேல போட்டா அது ஸ்லோ வேலயா? நா... யென்னா கொழுந்தெடுக்க தெரியாத பொம்பளையா?; வரண்டுபோன காலத்துலகூட ஆளே பத்துகொகுங்கொறவா போடறப்போ நா.. முப்பதுக்குக்கூட போடறது தெரியாதா? இத்தனைக்கும் கறுப்புப்பட்டிய கட்டிக்குங்க; ஸ்லோ வேல செஞ்சி கிலோ கொறைச்சி எடுத்த தோட்டத்துக்கு நட்டத்த உண்டாக்குங்கன்னு எங்ககிட்ட சொன்ன வய்ங்க பொண்டாட்டிபுள்ளயெல்லாம் முப்பது, முப்பத்தஞ்சி, நாப்பது கிலோன்னு நிறுக்குது. கறுப்புப்பட்டிய குடுத்ததும் குடுத்தானுங்க-அதுவுஞ் சப்போட்வாக்குல; பெரிய தலயாப் பாத்து, ஆள்பாத்து அழகு பார்த்து குடுத்தானுங்க. வெளிப்பகட்டுக்கு கறுப்புப்பட்டிய கட்டுனவள்க-கூட நெறைய எடுத்துக்கொட்டுறாளுக; சில்லாவுக்குப் போனா அவங்ககிட்ட ஒரு பேச்சி; இங்க வந்து செய்யுறதெல்லாம் அநியாயம். இதெல்லாம் ஒன்றுந் தெரியாதமாதிரி கதைச்சி கிண்டல்பண்றிங்களா எங்கள?" என்று ஆக்ரோஷத்துடன் கேட்டாள் அங்கம்மா.

"அங்கம்மாக்கா! வாய்கொழுத்து எல்லாத்தையுஞ் சொல்லுறே; நாளைக்கு ஒம் மகென் இருக்கிற காம்பிறாவுக்கு டிமிக்கி குடுக்கப்போறானுக". என்றாள் சின்னதாயி.

"டிமிக்கி குடும்பானுகளா? அப்படினா நேரா சில்லாவுக்கே போயி இவய்ங்கவுட்டு வல்லகாட்டயெல்லாம் புட்டு வச்சி அமுக்கிப் புடமாட்டேன்; என்னமோ இவய்ங்க தா..ன் சங்கத்த கட்டிக்காக்கிற மாதிரி கதச்சி மத்தவங்கள ஏமாத்துறமாதிரி என்னெயும் ஏமாத்த ஏலாது; நா..நல்ல ரோஷமுள்ள தலைவர் பரம்பரைலேருந்து வந்தவ" என்றாள் தலையை நிமிர்த்தி சின்னதாயைப் பார்த்தபடி.

"அப்பிடி சொல்லு அங்கம்மாக்கா; நாம கடவுளுக்கு நீதியா நடந்து, தலைவர்மாரு சொல்றபடி கேட்டு எதுக்கும் தலைய சாச்சிக்கிட்டு போறம்பாரு அதனால நம்மல முட்டாளுகன்னு நெனச்சிகிட்டானுக. எல்லாரும்" என்று அங்கம்மாவின் பேச்சிக்கு அழுத்தம் கொடுத்தாள் ரத்தினம்மா.

"இந்தா பாரு, நீயெல்லா..ம் சட்டங் கதைக்கவும், போராட்டம் பண்ணவுமா இங்க வந்தே? வாய மூடிக்கிட்டு கொழுந்து நிறுக்கப்போறியா இல்லாட்டி பேரு இல்லாம போவப் போறியா?" கண்களில் தீப்பறக்க அவர்களைப் பார்த்துக் கத்தினான் கங்காணி.

"நாஞ் சொல்லுறத கொஞ்சங் கேக்குறீங்களா? இப்ப நடக்கிறது தொழிலாளிகளோட நன்மைக்காக செய்யுற சத்தியாக்கிரகம்; கங்காணியும் ஒரு தொழிலாளி, ஒங்க சம்சாரமும் ஒரு தொழிலாளி. அதவுட்டுப்புட்டு மொதலாளிகமாதிரி எங்கள அடக்குமொற பண்ணாதீங்க" என்று பதிலுக்குக் கத்தினாள் அங்கம்மா.

என்ன நடக்கப்போகிறதோ என்ற கலக்கத்துடன் நின்றிருந்த கணக்குப்பிள்ளை "கங்காணி ஆறுமணியாகப்போகுது; கெதியா கொழுந்த நிறுத்து முடிச்சிருங்க" என்று கூறியதும் தமது கூடைகளிலுள்ள கொழுந்தை நிறுத்துவிட்டு எதுவரினும் ஏற்கத்தயார் என்ற மிடுக்குடன் அங்கம்மாவும் அவளது சகாக்களும் வீடுகளை நோக்கி நடை போட்டனர்.

# பேரழகி

**இணுவில் உத்திரன்**

'அன்புள்ள கஸ்தூரிக்கு', என்றுதொடங்கி 'இப்படிக்கு உன் அன்புக்காக ஏங்கும் கோகுலன்.' என்று முடித்திருந்த அந்தக் கடிதத்தை ஒரு தடவை வாசித்துமுடித்தாள் கஸ்தூரி.

அவளுடைய முகத்தில் ஒரு தெளிவு. "ஹலோ கோகுலன் நீங்கள் நல்லாவே லவ்லெற்றர் எழுதுறீங்கள். சந்தோசம். ஆனால் உங்கடை லவ்வை என்னாலை ஏற்றுக்கொள்ள முடியாது. உங்களுக்கும் வழமையான பதில்தான். அதாவது நீங்கள் வருகிற ஏ.எல் எக்சாமிலை மூன்று ஏ.பி றிசல்ற் எடுத்திட்டு வந்தீங்கள் என்றால் உங்கடை காதலைப்பற்றி யோசிக்கலாம். அதுவரைக்கும் இந்த கடிதத்தை நீங்களே வைத்திருங்கோ," என்று அந்த கடிதத்தை அவனிடமே கொடுத்துவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள் கஸ்தூரி.

உயர்தரப் பரீட்சையை எதிர்நோக்கி இருக்கும் அந்த மாணவர் மத்தியில் கஸ்தூரி ஒரு தேவதையாகத் தெரிந்தாள். பல மாணவர்கள் அவளுடைய காதலுக்காக போட்டிபோட்டுக் கொண்டு இருந்தார்கள். ஆனாலும் அவள் எல்லோருக்குமே இந்த மாதிரியான பதிலைத்தான் கூறிவந்தாள். சிலர் கஸ்தூரிக்கு ஆணவம் என்றார்கள். சிலர் 'லெவல்' என்றார்கள். வேறு சிலரோ அவளுக்கு காதலன் ஒருவன் இருப்பதாகக்கூட கூறினார்கள். "இதெல்லாம் ஜெயராம் கிளப்பிவிட்ட புரளிதான்!" என்றார்கள் சிலர். ஏனென்றால் ஜெயராமுக்கு கஸ்தூரியைப் பிடிக்காது.

"ஏடி கஸ்தூரி உனக்கு இது நல்ல சந்தர்ப்பம். விருப்பமான ஒருவனை தெரிஞ்சு எடுத்துக் கொள்." என்று ஆலோசனை கூறுவாள் லாவண்யா. சுகியும் லாவண்யாவும்கூட நல்ல சினேகிதிகள். சுகி எதையுமே பிறட்டிக்கலாகவே திங்பண்ணக்கூடியவள். 'மாணவர் மத்தியில் தோன்றும் காதல் நிலையில்லாதது' என்ற கருத்து அவளிடம் என்றுமே உண்டு. ஆனால் லாவண்யா அப்படி அல்ல, தோழி! கலிங்கத்துப் பரணியை எடு! அதிலே கடைதிறப்பு என்ற பகுதியை படித்துப்பார்! "காதலுக்காய், கடைக்கண் வீச்சுக்காய், நோதலும் இன்பம். நோயும் ஓர் இன்பம். ஆதலினால் காதல் செய்வோம் வா!" இது சந்தோசகாலம். காதலையும் கற்று மறந்திட வேண்டும். என்று கூறுவாள். ஆனால் இந்த கருத்துக்கள் எதுவுமே கஸ்தூரியின் மனதில் எதுவித மாற்றங்களையும் ஏற்படுத்திவிடவில்லை.


அன்று அந்த கல்வி நிலையத்தில் ஒரே மாணவர் கூட்டம். இன்று காலை உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகி இருந்தன. சிலர் சிரித்துக்கொண்டு நின்றார்கள். சிலர் அழுதுகொண்டு நின்றார்கள். கஸ்தூரி சுகியை பொறுத்தவரை ஓரளவு நல்ல பெறுபேறுகள் கிடைத்து இருந்தன. அப்போது கஸ்தூரியை நோக்கி வந்தான் கோகுலன். "கஸ்தூரி அண்டைக்கு நீங்கள் மூன்று ஏ தானே கேட்டு இருந்தீங்கள். இண்டைக்கு எனக்கு நாலுபாடமும் ஏ சித்தி கிடைச்சிருக்கு. அதுக்காக என்னை நீங்கள் லவ் பண்ணுங்கோ என்று கேட்கப்போவது இல்லை. அந்த நினைப்பையே நான் கைவிட்டுவிட்டன். ஐயாம் சொறி." என்று சொல்லிவிட்டு போனான்.

அடுத்து ஜெயராம், "கஸ்தூரி எனக்கு மூன்று ஏ கிடைச்சிருக்கு!" என்று ஒரு சிரிப்பை உதிர்ந்து விட்டு போனான். அடுத்து ரூபன், "கஸ்தூரி எனக்கு நாலு ஏ கிடைச்சிருக்கு. உங்களுக்கு நாலு பி தானே



முதலிலை நீங்கள் நல்ல றிசல்ற் எடுங்கோ!" என்று கூறிவிட்டு போனான். அதேபோல் லிங்கன், தீபன்,... அவளுடைய நிலையைப் பார்க்க சுகிக்கு வருத்தமாக இருந்தது. "கஸ்தூரி பார்த்தியா இது உனக்கு தேவை தானா?" என்று கேட்டாள்...

"அதனால் என்ன சுகி, இவையள் எல்லாம் படிச்சு நல்ல றிசல்ற் எடுத்து இருக்கினம். என்னாலை யாருமே குட்டிச்சுவர் ஆகவில்லையே? என்ரை இந்த உருவம் மற்றவையளை எந்தவிதத்திலையும் பாதிச்சிடக்கூடாது. என்னை நிறையப் பேர் சுத்திக் கொண்டு திரிஞ்சினம். அதேவேளை நான் ஒருதனை காதலிச்சு மற்றவர்களை ஏமாத்தவும் விரும்பேல்லை. ஏனென்றால் காதல் தோல்வி எண்டு சொல்லிக்கொண்டு தாடியும் வளர்த்து படிப்பும் இல்லாமல்.. வேண்டாம் சுகி என்னாலை யாரும் பாதிக்கப் படவேண்டாம். அதனாலைதான் எல்லாரையும் படிச்சிட்டு வரச்சொன்னன். சுகி இந்த வயதிலை வாறதுகூட ஒரு முழுமையான காதல் இல்லை. ஏதோ ஒருவித இமோசன் அவ்வளவுதான். அதைகொஞ்சம் திசை திருப்பிவிட்டால் போதும் மாறிவிடும். ஆரம்பத்திலை என்ர காதலுக்காக விழுந்து விழுந்து படிச்சிருப்பினம். போக போகப் அதுவே படிப்பிலை ஒரு ஈடுபாட்டை நிச்சயமாக கொடுத்திருக்கும். அதனால் நல்ல றிசல்ட் எடுத்து இருக்கினம். இண்டைக்கு ஒரு சுப்பிரியாரிட்டி கொம்பிளைக்ஸ். வாழ்க்கையிலை எதையுமே ஜெயித்து விடலாம். என்ற தன்னம்பிக்கை, நிறையவே இருக்கு. அதனாலை இப்பவெல்லாம் நான் ஒரு தூசியாக தெரியிறன். இது எனக்கு சந்தோசம் தான். சுகி எனக்கு ஒரு இன்ஜினியர் மாப்பிள்ளை வேணும் எண்ட நோக்கத்திலை நான் எல்லாரையும் படிக்க சொல்லவில்லை. எனக்கு திருமணம் செய்து வைக்க வீட்டிலை அப்பா அம்மா அண்ணா என்று நிறையப் பேர் இருக்கினம். சுகி நீயாவது என்னைப் புரிஞ்சுகொள்ள மாட்டாயா?" என்று கஸ்தூரி கேட்டபோது, அவள் கண்கள் கலங்கி இருந்தன. சுகியினுடைய கண்களும்தான்! சுகியினுடைய கண்களில், மனதில் இன்றுதான் கஸ்தூரி அழகியாக அல்ல, பேரழகியாக தெரிந்தாள். ☹



# காதல் நோயின் தன்மை!

## இலக்கிய நயம்

'மானஸ மைனே வரூ...'

'கறுத்தம்மா'வுக்காகத் தேடியலையும் பரீக்குட்டியின் பாடல் வரிகள் காற்றில் சோகத்தைக் கலந்து மிதந்து வந்து நெஞ்சையடைத்தது.

கடலில் அலைகளும் கரையில் சோகங்களும் வற்றுவதேயில்லையா?

மிதிலாவுக்கு நெஞ்சுக்குள் என்னவோ செய்தது. இதென்ன இது... என்றுமில்லாத நெகிழ்ச்சி நெஞ்சுக்குள்!

அவளுக்கு வினோதமாக இருந்தது.

காதல் வயப்பட்டுக் கரைந்து உருகி உருகிப் பேசும் சினேகிதிகளைப் பார்த்து வியந்திருக்கிறாள்.

'அடைய முடியாப் பொருளின் மீது ஆசை தீராது' என்று ஆண்கள், தம்மை வெறுத்தொதுக்கும் பெண்கள் பின்னாலேயே வெட்கம் விட்டு அலைவதும், இவர்களும் ஒரு கட்டத்தில் அவர்களிடம் மையலாகி அவர்கள் நினைவாகவே உருகுவதும் அவளுக்குப் பலசமயம் வேடிக்கையாகவும் சில சமயம் எரிச்சலாகவும் இருக்கும்.

தொலைபேசிகளில் மணிக்கணக்காகப் பேசிக் கொள்வதும், பிறந்தநாளை, காதலர் தினத்தைக் காத்திருந்து-பரிசுப் பொருட்கள், வாழ்த்தட்டைகள் தருவதற்கு அந்தரித்துத் துடிப்பதும், தூக்கம் கெட்டு விழித்திருந்து கிழித்து கிழித்துக் கடிதங்கள் எழுதுவதும், தன் நடத்தைகள் எல்லாவற்றையுமே அந்த யாரோ ஒருவனுக்காக மாற்றிக் கொண்டு படபடப்புடன் புலம்பிக் கொண்டிருக்கும் சினேகிதிகளைப் பார்த்தால்,

'இதென்ன பைத்தியக்காரத்தனம்?' என்றுதான் அவளுக்குத் தோன்றும்.

பேசக் கூடத் தைரியம் இல்லாமல் போகிற வழிகளில் இளைஞர்கள் காத்துக் கிடப்பதும், அவர்களுக்காகவே இவர்கள் என்னென்னமோ அலங்கரிப்புகளுடன் அழகு காட்டி நடந்து செல்வதும் பார்க்கையில் மிதிலாவுக்கு ஆபாசமாகக் கூட இருக்கும்.

அவளுக்கு காதல் என்பது ஒரு வசீகரிப்பாகத் தோன்றியதே இல்லை.

அஜித், விஜய், சூர்யா, பிரசாந்த் என்று தோழிகள் உருகும்போது ஆச்சரியமாக இருக்கும்.

ஏன் இவர்கள் ஆண்கள் என்றாலே இப்படி வழிகிறார்கள்?

அதேபோல அவர்களும், ஊர்வசியைத் தேடும் புரூரவனைப் போல "கூவியழைத்தும் வரவில்லை... என் குரலைக் கேட்கவும் மனமில்லை. பார்க்கவும் ரசிக்கவும் துடிக்கிறேன். என் பாடலைக் கேட்டுமேன் வர வில்லை...?" என்று தாடி வளர்த்துச் சோகமாய்ப் பாடிக் கொண்டு திரிவதையும் சகிக்க முடியவில்லை.

"வாழ்க்கையில் நீ நேசிக்கிற அல்லது உன்னை நேசிக்கிற ஒருவரிடம் நீ முட்டாளாக இருந்துவிட்டால் போதும். அதை மீறி வேறொன்றும் கிடையாது இந்த வாழ்க்கையில்..." என்று சொல்கிற தோழிகளிடம் அவள் அடித்துப் பேசியிருக்கிறாள்.

"என்னால் முட்டாளாக இருக்க முடியாது. காதலே வாழ்க்கையல்ல. எனக்கு என் சுதந்திரம் முக்கியம். எதற்காகவும் என் இயல்புகளைத் தொலைக்க முடியாது.

இன்னொருவனுக்காக நான் என்னையே இழந்து நிற்பதா? 'நீயில்லால் வாழ்க்கை இல்லை' என்று அவனுக்குள் என் உலகத்தை மூடி வைத்துவிடுவதா?"

அதெல்லாம் சுத்தப் பிதற்றல் என்றே அவளுக்குத் தோன்றும்.

காதலின் எதிர்பாராத அடி இப்படித்



தன் மீது விழும் என்று அவள் நினைத்திருக்கவில்லை.

திக்குத் தெரியாத காட்டில் திடீரெனப் பூப்பூத்துத் திகைக்க வைக்கிற அதிசயம் தன் வாழ்விலும் நேரும் என்று அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

நெருங்கிய தோழியின் திருமண வீட்டில்தான் அவனைப் பார்த்தாள் மிதிலா.

கனடாவிலிருந்து வந்திருந்தான், அவனது நண்பனின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக.

வைபவத்தில் எல்லோர் முன்னிலையிலும் பேசினான்.

"காதலிக்காமலே இருப்பதை விட காதலித்துத் தோல்வியடைவது மகத்தானது" என்று டென்னிசனின் கருத்தைச் சொல்லிப் பேச ஆரம்பித்தான்.

என்னை அவன் பேச்சில் இழந்தேனா? அல்லது சதா அலைந்தபடி இருக்கும் அந்தக்

தருவது **முழுடில்யன்**

கண்களிலா? அல்லது எந்நேரமும் அவன் இதழோரத்தில் மின்னிக்கிடந்த அந்தக் கொலைக் கருவியிலா? அலட்டலில்லாத நடவடிக்கைகளா? அமைதியான அந்த சாந்த சொரூபமா?...

எது? எது அவளை அவனிடத்தில் ஈர்த்தது என்பதை அவளால் உணர்ந்துகொள்ளக் கூடவில்லை.

அவனிடமிருந்து பார்வையை வேறுபுறம் திருப்பிக்கொள்ள வேண்டும் என்று அவளது அறிவு பலமுறை எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை.

அவன் தன் பேச்சை ஒரு கவிதையுடன் முடித்தான்.

'தண்டவாளத்தில்
தலைசாய்த்துப் பூத்திருக்கும்
ஒற்றைப் பூ
என் காதல்
நீ நடந்து வருகிறாயா
ரயிலில் வருகிறாயா?'

தன்னிடம் வந்து அவன் பேசுவான் என்று அவள் எதிர்பார்த்தது நடக்கவில்லை.

அவளுக்குள் அடித்த சூறாவளியை உணராதவனாக அவன் கனடா திரும்பிப் போனான்.

'சலனமற்ற குளத்து நீரில்
கல்லெறிந்து போனவன்
நீ இன்னும்
அல்லாடிக்
கொண்டிருக்கிறது
பரிதாபத்துக்குரிய என் பிம்பம்'

என்று தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டாள். தன்னை லட்சியமே செய்யாமல் பிரிந்து போய்விட்டவனுக்குப் பின்னால் செல்லும் நிலையைத் தன் நெஞ்சுக்கு ஏற்படுத்திவிட்ட இந்தக் காதல் நோயின் தன்மைதான் என்ன? என்று கேட்டுப் பார்த்து வியந்து கொண்டாள்.

**செற்றவர் பின்சேறல் வேண்டி**
**அளித்தரோ**
**எற்றென்னை உற்ற துயர்.**

(குறள்: 1256)

# ஸ்போர்ட்ஸ்

## தொடரை வென்ற இந்தியா

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலியா 3 டெஸ்ட் கொண்ட தொடரில் இந்தியாவிடம் 2-1 என்ற கணக்கில் தோல்வியடைந்துள்ளது. தொடர்ந்து 16 டெஸ்ட்களில் வெற்றி பெற்றுச் சாதனை படைத்த அவுஸ்திரேலியா, அடுத்தடுத்து 2 போட்டிகளில் தோல்வி கண்டுள்ளது.

இந்தியாவுக்கெதிராக சென்னையில் நடந்த 3வது டெஸ்ட் போட்டியில் 2 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்து, டெஸ்ட் தொடரை இழந்தது அவுஸ்திரேலியா.

சுருக்கமான ஸ்கோர் விபரம்:

அவுஸ்திரேலியா: முதல் இன்னிங்ஸ்:- 391 (ஹெய்டன் 203, மார்க் வோவ் 70, ஹர்பஜன் சிங் 7-133) இரண்டாவது இன்னிங்ஸ் 264 (மார்க் வோவ் 57,ஹர்பஜன் சிங் 8-84)

இந்தியா: முதல் இன்னிங்ஸ் 501 (டெண்டுல்கர் 126, தாஸ் 84, ட்ராவிட் 81) இரண்டாவது இன்னிங்ஸ்- 155 (லக்ஷ்மன் 66, மில்ஸர் 3-41)

3 டெஸ்ட்கள் கொண்ட இப்போட்டித் தொடரை வெல்லக்காரணமாக இருந்தவர் இந்தியாவின் ஹர்பஜன் சிங். இவர் இத்தொடரில் சிறப்பாகப் பந்து வீசி, 32 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் 3 டெஸ்ட் கொண்ட தொடர்களில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய 3வது வீரராக விளங்குகிறார் ஹர்பஜன் சிங்.

முதலாவதாக இருப்பவர் இங்கிலாந்தின் முன்னாள் வீரர் ஜோர்ஜ் லோமான். இவர் தென்னாபிரிக்க அணிக்கெதிராக 3 டெஸ்ட் கொண்ட தொடரில் 35 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அடுத்தவர் நியூஸிலாந்தில் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ரிச்சர்ட் ஷாட்லி. இவர் அவுஸ்திரேலியாவுக்கெதிராக 3 டெஸ்ட் கொண்ட தொடரில் 33 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

## முதல்வன்-வோல்ஷ்

டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முதலாவது பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஷ்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க வீரர் ஜக்ஸ் கலிஸை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் இச்சாதனையைப் படைத்தார்.

38 வயதான வோல்ஷ் சரியாக ஒரு வருடத்திற்கு முன், டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திச் சாதனை படைத்திருந்த இந்திய முன்னாள் கப்டன் கபில்தேவின் (434 விக்கெட்டுக்கள்) சாதனையை முறியடித்திருந்தார்.

வோல்ஷ் 500வது விக்கெட்டை தனது 129வது டெஸ்ட் போட்டியில் வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

## ஷார்ஜாவில் இந்தியா இல்லை

ஷார்ஜாவில் வரும் ஏப்ரல் 8ம் திகதியிலிருந்து 17ம் திகதி வரை நிகழவிருந்த முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இருந்து இந்தியா வாபஸ் பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய 3 நாடுகள் இந்த ஷார்ஜா முத்தரப்புச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றி விளையாட ஏற்பாடாகியிருந்தது.

இந்திய அரசாங்கமே, இந்திய கிரிக்கெட் அணி ஷார்ஜா போட்டியில் பங்கேற்கத் தடை விதித்துள்ளது. இதுபற்றி இந்தியக் கட்டுப்பாட்டுச் சபைக்கும் அறிவிக்கப்படுமென இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் உமாபாரதி தெரிவித்துள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் ஆகிய அணிகளுக்கிடையே கிரிக்கெட் போட்டிகள் நிகழவிருந்து பின்னர் நிராகரிக்கப்பட்ட நான்காவது சம்பவம் இதுவாகும்.

முதலில் 1999-2000 ஆண்டு கனடாவில் நடைபெறவிருந்த சஹாரா கோப்பைப் போட்டி. இரண்டாவது கடந்த வருட இறுதியில் பாகிஸ்தானுக்கு இந்தியா மேற்கொள்ள இருந்த சுற்றுப்பயணம். மூன்றாவது குஜராத் பூகம்ப நிதிக்காக ஷார்ஜாவில் நடைபெறவிருந்த ஒருநாள் தொடர். இறுதியாக ஷார்ஜா முத்தரப்புப் போட்டி.

அண்மையில் இந்திய அணி மீது கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக வெளிவந்த குற்றச்சாட்டுக்களின் வெளிப்பாடாகவே ஷார்ஜா போட்டியில் இருந்து இந்திய அணி வாபஸ் பெறப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

எனினும் காஷ்மீரின் கார்கில் பகுதியில் இந்தியா-பாகிஸ்தான் நாடுகளிடையே நடந்த எல்லைப்போர் காரணமாகவே பாகிஸ்தானுடன் இந்திய அணி விளையாட மறுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, "இந்திய கிரிக்கெட் அணியுடன் எந்தவொரு போட்டியிலும் பாகிஸ்தான் அணி விளையாடாது" என்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடன் விளையாடவிருந்த 4 போட்டித் தொடர்களை இந்தியா நிராகரித்ததை அடுத்தே பாகிஸ்தான் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. எனினும் ஷார்ஜா போட்டியில் கலந்து கொள்ள பாகிஸ்தான் ஷார்ஜாவுக்கு செல்கிறது.

# சிந்தியா பதில்கள்

✹ **இரண்டாது ஒருநாள் போட்டி எப்படி சிந்தியா?**

க.சாந்தரூபன், கொழும்பு-07.

வெற்றியின் மகிழ்ச்சியை விடுங்கள். 'சற்றே விலகி இரும் பிள்ளாய்!' என்று தாழ்த்தப்பட்ட நந்தன் சொன்னதற்கு விலகி வழிவிட்டது நந்தி. நம்ம ஆனல்ட் கேட்டுக் கொண்டபோது, வெள்ளைத் தோல் ஆண்ட பரம்பரை விலகாமல் நின்றது நெருடலாக இருந்தது.

✣✦✣

✹ **இந்திய இராணுவம் உலகில் மூன்றாம் இடத்தில் உள்ளது என்று நான் சொல்லுகின்றேன். எனது நண்பனோ ஐந்தாம் இடம் என்கின்றான். எது சரி?**

ஐ.விநாயகமூர்த்தி, பொகவந்தலாவ.

உங்கள் இருவரது அபிப்பிராயங்களுக்கும் இடையில் இருக்கிறது விடை.

✣✦✣

✹ **சூரியன் எப்.எம். நடத்திய பி.எம்.மித்ரா வின் மாயாஜால் நிகழ்ச்சி பார்த்தீர்களா?**

எஸ்.வினோதினி, கொழும்பு-06.

போயிருந்தேன். இன்னொருவர் நம்மை ஏமாற்றுவதை புளகாங்கிதத்தோடு இரசிக்கும் இடமல்லவா அது!

✣✦✣

✹ **தேன்கிண்ணத்தில் எனது கவிதை பிரசுரமாவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?**

எம்.ரி.குமரன், வத்தளை.

முன்னோடிக் கவிஞர்கள் எழுதிய கவிதைகளை நிறைய தேடிப் படியுங்கள். உங்கள் கவிதையை எழுதி, அதைப் பெட்டி ஒன்றினுள் பத்திரமாக வைத்துவிடுங்கள். நாலைந்து வாரங்களில் அல்லது மாதங்களில் திரும்பவும் எடுத்து அதைப் படித்துப் பாருங்கள். யாரோ எழுதிய கவிதை என்று நினைத்துப் படியுங்கள். உங்களுக்குப் பிடித்திருந்தால், அதன் பிறகு முரசுக்கு அனுப்புங்கள். பிரசுரமாகும்.

✣✦✣

✹ **காதலுக்குக் கண்ணில்லை என்பது உண்மையா?**

செ.கலை, கொஸ்லாந்தை.

அப்படித்தான் தோன்றுகிறது. லூயி கெரோல் என்பவரின் இந்தக் கவிதையைப் பாருங்கள்:

அவளுக்குக் கரடியைப்
போல மென்மையான
உடல். அவள் சிரித்தால்
கழுதைப்புலி போல
இருக்கிறது. யானையைப்
போல அதிரடியாக
நடக்கிறாள். கழுத்து சற்றே
ஒட்டகச் சிவிங்கி மாதிரி.
நான் அவளைக்
காதலிக்கிறேன். நம்புங்கள்!
சத்தியமாக,
உயிருக்குயிராய்க்
காதலிக்கிறேன்!

✣✦✣

✹ **அன்றைய சினிமாப் பாடல் ஒன்றையும் இன்றைய பாடல் ஒன்றையும் ஒப்பிடுவீர்களா?**

க.கமலதாசன், வந்தாறுமூலை.

அன்று வாலியின் பாடல். 'மதுரையில் பிறந்த மீன்கொடியை..' என்று ஆரம்பித்து பெண்ணையே தமிழகமாகவும், அவள் அங்கங்களை ஒவ்வொரு ஊருடனும் ஒப்பிட்டு எழுதினார்.

இன்று நால்வகை நிலங்களையும் பெண்ணில் கண்டு அறிவுமதி எழுதுகிறார்.

'குன்றினில் குறிஞ்சி கண்டேன். கோல இடைதனில் மருதம் கண்டேன். கண்களில் நெய்தல் கண்டேன் கைவிரல் அழகினில் முல்லை கண்டேன்...'

✣✦✣

✹ **த.வி.பு. தலைவரின் பிள்ளைகள் வன்னியில் மற்றெல்லோரையும்விட அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்கிறார்களே?**

இரா.வைகுந்தன், யாழ்ப்பாணம்.

அதற்கேன் ஆதங்கப்படுகிறீர்கள்? அடுத்த தலைமை படிப்பறிவுள்ளதாக வளருவதையிட்டு மகிழ வேண்டியதுதானே?

✣✦✣

✹ **சூரியன், சுவர்ண ஒலி, சக்தி ஆகிய தனியார் வானொலிகள் பற்றி...?**

மொஹமட் இர்ஹாம், காத்தான்குடி-05.

பகலெல்லாம் பாடல்களாகவும் போதாக் குறைக்கு சங்கர் மகாதேவன், ஹரிஹரன், மாயாஜால் என்று தலைநகர் இளசுகளுக்கு கேளிக்கை தந்து கவர்வது சரி. அமைதியான இரவு நேரங்களிலாவது நாடகம் பயனுள்ள பேட்டிகள், புத்திசாலித்தனமான பாடல் தொகுப்புகள், இலக்கியத்தரமான நிகழ்ச்சிகள்.. என்று உழைப்பும் சிரத்தையும் எடுத்துக் கொள்ளலாமே.. ஊஹும்.. கேட்க மாட்டார்கள். அவரவர் விளம்பரதாரர்களுக்குரிய நேயர்களைக் கவர்ந்துகொண்டால் போதும் என்று செயற்பட்டு வருகிறார்கள், விடுங்கள்!

✣✦✣

✹ **பெண்களின் பின்னால் சுற்றுவது சரியா, தவறா?**

அன்புத்தாய், நல்லூர்.

காயங்களின்றித் தப்பிக் கொள்வது அந்தப் பெண்களின் கருணையுள்ளத்தைப் பொறுத்தது. ஆனால், எந்தப் பெண்ணுக்குமே தன் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கும் நபர் மீது நல்லபிப்பிராயம் கிடையாது.

✣✦✣



'பார்வை ஒன்று போதுமே' படத்தில் குணால்-மோனல்

✹ **நக்மாவை மிஞ்சிய ஜோதிகா போல சிம்ரனை மிஞ்சுவாரா மோனல்?**

இ.கார்த்திகேயன், ஹட்டன்.

மோனல். முதல் படமே கோணல்.

✣✦✣

✹ **வாழ்க்கையில் துன்பமே இல்லாமல் வாழ்வதற்கு என்ன செய்யலாம்?**

ஏ.ஆர்.ஹகீமா, புதிய காத்தான் குடி.

621 இலிருந்து 630 ஆம் குறள் வரைக்கும் உங்களுக்கான பதில்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

✣✦✣

✹ **சமீபத்தில் உங்களை மிகவும் நெகிழ வைத்தது எது?**

எம்.எம்.இமாம்ஹசன், ஹெம்மாதகம.

மீண்டும் மகேந்திரனின் 'ஜானி' படம் பார்க்க நேர்ந்தது. பாடல்களை விடுங்கள். படம் முழுவதும் நம்மைக் காட்சிகளுக்குள் கொண்டு சென்றுவிடுகிற பின்னணி இசை... சிம்பொனி வராவிட்டால் என்ன இளையராஜாவின் அந்நாளைய ஒவ்வொரு படமும் ஒவ்வொரு சிம்பொனி போலத்தான் நம்மை மடிமீது போட்டுத் தலை வருடிக் கொடுக்கிறது.

# கால் திருடனும் அரைத்திருடனும்

திருடன் கார்த்திகேயனின் கடைசி மகனான கால் திருடன் சவரத் தொழிலாளியையும் துணிக்கடைக் காரனையும் ஏமாற்றிவிட்டு ஏராளமான விலையுயர்ந்த துணிகளுடன் வீடு வந்து சேர்ந்ததை தந்தை கார்த்திகேயன் வெகுவாகப் பாராட்டினான்.

துணிக்கடையில் அடமானமாக வைக்கப் பட்டிருந்த சவரத்தொழிலாளியின் மகன் திரு திருவென்று விழித்த வண்ணம் துணிக் கடையின் ஒரு மூலையில் நின்று கொண்டி ருந்தான்.

பகல் முழுவதும் வியாபாரத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த முதலாளி மாலையாகியதும் கால் திருடனால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சவரத் தொழிலாளியின் மகனை அவதானித்தார். அதன் பின்னர்தான் துணிகளைக் கட்டிக் கொடுத்த கடைச் சிப்பந்தியை அழைத்துத் "துணி மூட்டையுடன் போனவன் திரும்பி வரவில்லையா?" என்று விசாரித்தார்.

சிப்பந்தி "இன்னும் வரவில்லை?" என்று கூறினான். சிறுவனைப் பார்த்ததும் முதலாளிக்குக் சந்தேகம் ஏற்பட்டது. அந்தச் சிறுவனை தன்னிடம் அழைத்து வரும்படி கூறினார்.

சிறுவன் வந்ததும் அவனிடம் "உன் அப்பா யெறிந்துவிட வேண்டும்'என்று கருதியவனாக தலையாரியை அழைத்தான்.

அவனிடம் "நகரத்தில் திருட்டுக்கள் அதிகமாக நடைபெறும் என்று தெரிகிறது. ஆகவே உடனடியாக தடுத்தேயாக வேண்டும்! இன்றிரவு நகருக்குள் சென்று அந்தத் திருடனைக் கைது செய்து நாளைக் காலையில் என்னிடம் கொண்டு வர வேண்டும்!" என்று கட்டளையிட்டார்.

சவரத் தொழிலாளியை அழைத்து அவனுடன் அவர் மகனை அனுப்பி வைத்துவிட்டு கடை முதலாளியிடம், "எப்படியாவது உனது துணிகளை உன்னிடம் சேர்க்க ஆவனை செய்கிறேன். நீ போய் வா," என்று கூறி அனுப்பினார்.

அன்று மாலை திருடன் கார்த்திகேயன் தனது மகன் அரைத்திருடனை அழைத்து, "உனது தம்பி தந்திரோபாயங்களைக் கையாண்டு விலையுயர்ந்த பட்டுப்புடவைகளை கொண்டு வந்து சேர்த்துள்ளான். இன்றிரவு உன்னுடைய கைவரிசையைக் காட்ட வேண்டும். பொழுது விடிவதற்குள் நீ சேகரிக்கும் ஆகியவற்றையும் கொடுத்து அவளுடைய கணவன்தான்தான் என்று கூறி நம்பவைத்தான்.

திருமணமாகி சாந்தி முகூர்த்தம் நடைபெறுவதற்கு முதல் நாளே தன்னை மனைவியாக ஏற்றவன் எங்கோ சென்று விட்டான். இதனால் தன் கணவனை சரியாகப் பார்த்தறியாத அந்தப் பெண் இந்தத் திருடனையே தன் கணவனென நம்பிவிட்டாள்.

தலையாரி தன் மருமகனை சரியாக உபசரிக்க முடியவில்லையே என்று கவலைப்பட்டான். இத்தனை நாள் கழித்து வீடு திரும்பிய என்னுடன் இருந்து கதை பேசுமாறு திருடன் அழைத்தான்.

ஆனால் தலையாரியோ, அவசரப்பட்டுக் கொண்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். அவர் அவ்வாறு பதற்றப்படுவதற்கு என்ன காரணம் என்று திருடன் விசாரித்தான்.

தலையாரி தான் அன்றிரவு திருடனை பிடித்தாக வேண்டும், இல்லாவிட்டால் அரசனுடைய தண்டனைக்கு ஆளாக வேண்டிவரும் என்று திருடனிடம் சொன்னான்.


திருடனைப் பிடிப்பதற்கு உதவியாக தானும் தன் மாமனுடன் வருவதாக அரைத்திருடன் கூறினான்.

எவ்வளவோ கூறியும் கேட்காமல் தலையாரியுடன் திருடன் புறப்பட்டுச் சென்றான். இடையில் நகரின் எல்லைப்புறத்தில் அமைக்கப் பட்டிருந்த தொழுமரத்தை தலையாரி போய்ப் பார்த்து, அது சரியாக வேலை செய்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்தான். அரைத் திருடன் தொழுமரத்தைப்பற்றி ஏதும் அறியாதவன்போல், அதன் விவரத்தைக் கேட்டான்.

## மன்னாதி மன்னன் 52

ஏன் இன்னும் வரவில்லை?" என்று வினவினார்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியாமல் சிறுவன் மேலும் விழித்தான். முதலில் ஆதரவாகக் கேட்ட முதலாளி அடுத்தடுத்து கொஞ்சம் கோபமாகக் கேட்டார். சிறுவன் பயந்து போனான். அழுது கொண்டே "எங்கப்பா



இங்கெல்லாம் வராமாட்டார். எங்க வீட்டருகே தெருவோரத்தில் தான் பகல் முழுவதும் நின்று கொண்டிருப்பார்" என்று கூறினான்.

அவனுடைய இந்தப் பதில் கடை முதலாளியின் கோபத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.

"உன் வீடு எங்கே இருக்கிறது? உன் அப்பாவின் தொழில் என்ன?" என்று கேட்டான்.

அதற்குப் பையன், "எங்கப்பா எங்கள் வீட்டருகே இருந்துகொண்டு சவரம் செய்து கொண்டிருப்பார்!" என்றதும், கடை முதலாளிக்கு ஒன்றுமே புரியவில்லை. மீண்டும் மீண்டும் சிறு பையனைக் கடிந்து கொண்டு, "நீ என்ன சொல்லுகிறாய்? காலையில் உன்னையும் அழைத்துக் கொண்டு இங்கு வந்து துணிப்பொட்டலத்தை எடுத்துக் கொண்டு போனானே அவன் உன் தகப்பன் இல்லையா?" என்று வினவினார்.

"இல்லையய்யா அந்தத் துணிகளை வாங்கிக் கொண்டு போனவரை இன்றுதான் நான் கண்டேன். வேறு எதுவும் எனக்குத் தெரியாது. இது தவிர வேறு என்ன நடந்தது என்று தெரியாது. எனது அப்பாவிடம் முகச்சவரம் செய்து கொண்டு அதற்கான கூலியை இங்கு கடையில் பணத்தை மாற்றித் தருவதாகக்கூறிக்கொண்டே அவர் என்னை விட்டுவிட்டுச் சென்றார்."

இவ்வாறு அந்தச் சிறுவன் கூறிய பின்னர் தான் கடைமுதலாளிக்கும் சிப்பந்திகளுக்கும் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாகத் தெரிய வந்தது.

கடை முதலாளி சிறுவனையும் அழைத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்று மன்னரிடம், முறையிட்டான்.

'ஒரே திருடன் அன்று நடந்த திருட்டை சிறப்பாகச் செய்திருக்கிறான். அவனை எப்படியும் பிடித்தாக வேண்டும். இல்லாவிட்டால் அந்நகரத்தில் தொடர்ந்தும் இம்மாதிரி தந்திரமான திருட்டுக்கள் நடைபெறக்கூடும், ஆகவே முளையிலேயே இதனைக் கிள்ளி திருட்டுப் பொருட்களை என்னிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று அனுப்பி வைத்தான்.

அரைத்திருடன் நகரத்துள் வந்து தன் கண்முன் தென்பட்ட முதலாவது குடியானவனைப் பார்த்து, "ஐயா இந்த நகரத்தில் இன்று நடைபெற்ற முக்கியமான செய்தி என்ன?" என்று வினவினான்.

அந்தக் குடியானவன் அன்று பகலில் நகரத்துக்கு வந்திருந்த திருடன் ஒருவன் ஒரு சவரத்தொழிலாளியையும், துணிக்கடைக் கார முதலாளியையும் ஏமாற்றிவிட்டு ஏராளமான விலையுயர்ந்த துணிகளையும் களவாடிச் சென்று விட்டான்.

அந்தத் திருடனைப் பிடிப்பதற்கு இன்று அரசர் தலையாரியை அனுப்பி வைத்திருக் கிறார். திருடனை தலையாரி இன்றிரவுக்குள் பிடிக்காவிடில், பாவம் அவனுக்கு கடும் தண்டனை கிடைக்கும்," என்று சொன்னான்.

இந்த விவரங்களையெல்லாம் கேட்டு அறிந்துகொண்ட அரைத்திருடன் அடுத்த தெருவுக்குச் சென்று தலையாரியைப் பற்றி விசாரித்தறிந்து கொண்டான். தலையாரிக்கு ஒரேயொரு மகளென்றும் அவளை மணம் முடித்த ஒருவன் சில நாட்களிலேயே காணாமல் போய் விட்டான் என்றும் தலையாரியின் கதையை அறிந்து கொண்டான்.

அரைத்திருடன் ஒரு துணிக்கடைக்குச் சென்றான். அங்கு வகைவகையான துணிகளை விலை கொடுத்து வாங்கிக் கொண்டான். வேறு கடைகளுக்கும் சென்று வகை வகையான மிட்டாய்கள், கண்ணாடி வளையல்கள் ஆகியவற்றையும் வாங்கிக் கொண்டு நேராக தலையாரியின் வீட்டையடைந்தான்.

தலையாரியைக் கண்டு, பலவருடங்களுக்கு முன்னர் வீட்டைவிட்டுப்போன மருமகன் தானேதான் என்று கூறினான்.

தலையாரியின் மகளையும் கண்டு தான் கொண்டு வந்த மிட்டாய்கள், வளையல்கள்

### இராஜகுமாரன்

"திருடனைப் பிடித்து மாட்டி வைப்பதற்கு உள்ள பொறிதான் இந்தத் தொழுமரம்!" என்று தலையாரி விளக்கினான்.

திருடன் பல கேள்விகளையும் கேட்டு, "இது எவ்வாறு வேலை செய்கிறது? என்று தெரியவில்லையாதலால், மாமா நீங்கள் என்னை இந்தத் தொழுமரத்தில் மாட்டிக் காட்டுங்கள்!" என்று கேட்டான்

மருமகன் பிடிவாதமாக தன்னை தொழுமரத்தில் மாட்டி ஆப்பு வைத்து அடித்துக் காட்டுமாறு திரும்பத் திரும்பக் கேட்டான். தலையாரி மறுத்தான்.

அப்போது திருடன் நீங்களாவது இந்தத் தொழுவத்தில் ஒரு தடவை மாட்டப்பட்டு நில்லுங்கள். நீங்கள் சொல்லியது போல் இந்த ஆப்பினை அடித்துப் பார்க்கிறேன். பின்னர் நீங்கள் உங்களை விடுவித்துக் கொள்ளலாம். இந்தத் தொழுவம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதை அறியவே ஆசைப்படுகிறேன்!" என்று கெஞ்சிக் கேட்டான்.

*(மன்னன் வருவான்...)*

# காதில பூ கந்தசாமி

**கீ**ழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:.................... ஒப்பம்:..................



**நோட்டீஸ் பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

**பொய்யறி மேதை**

*சென்ற ஆண்டின் அதி பெரிய பொய் எது? என்ற கேள்விக்கு பல வாசகர்களின் பதில்களில் தெரிவு செய்யப்பட்ட பதில்:- கடந்த 2000 ஆண்டை உலகம் முழுவதுமே புதிய மிலேனிய ஆரம்பமாக கொண்டாடியதே அதி பெரிய பொய். அது சென்று முடித்த மிலேனியம் ஆண்டு, புதிய மிலேனியத்தில் முதலாம் ஆண்டு இந்த ஆண்டே (2001)*

பரிசுக்குரியவர் தாவரானி, யாழ்ப்பாணம்.

அபிமான வாசகர் போட்டியில் மூன்றாவது: காதிலைப் பூ கந்தசாமியை அதிகம் சினமுட்டக்கூடியவாறு பத்துச் சொற்களுக்குள் ஒரு வசை வாக்கியம் எழுதுக. முடிவுத் திகதி ஏப்ரல் 30. பெறுபேறுகள் ஜூன் முதல் வாரத்தில்.

**மு**ட்டாள்களே வணக்கம். இன்று முட்டாள் தினச் செய்தியை காதில பூ கந்தசாமி மிகப் பெருமையுடன் வழங்குகிறார்.

"**மு**ட்டாள்களாக இருப்பது பல விதத்தில் நல்லது என்பதை முதலில் நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள். முட்டாளாய் இருந்தால் சிந்திக்கத் தேவையில்லை. உலகிலே மிகச் சிரமமான பணி சிந்திப்பதே. சிந்திக்காது செயலாற்றக்கூடிய திறமை முட்டாள்களுக்கு மட்டுமே உண்டு. முட்டாளாய் இருந்தால் செய்யும் காரியத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அதன் விளைவைப் பற்றியும் கவலைப் படத்தேவையில்லை. முட்டாளாய் இருந்தால் எவருக்கும் பணிபுரியலாம். எத்தகைய பணியையும் புரியலாம். முட்டாளாய் இருந்தால் எந்த அவமானத்தையும் சகித்துக் கொள்ள முடியும். அத்தோடு முட்டாள்களாய் இருந்தால் மனசாட்சி, இரக்கம், கருணை, நன்றி, நேர்மை, வாய்மை, தூய்மை, உண்மை, நன்மை என்ற விடயங்களுக்கெல்லாம் மதிப்பளிக்கத் தேவையில்லை. நாமும் யாரையும் மதிக்கத் தேவையில்லை. எம்மை யாரும் மதிக்கிறார்களா என்று கவலைப்படவும் தேவையில்லை. எதையும் விளங்கிக் கொள்ளத் தேவையில்லை. எதையும் யாருக்கும் விளக்க வேண்டிய தேவையும் இல்லை. முட்டாள்களாய் இருந்தால் எதையும் கேள்வி கேட்க வேண்டிய தேவை இல்லை. உண்மையில் பதில் சொல்வதைவிடக் கேள்வி கேட்கவே அதிகம் சிந்தனை தேவைப்படுகிறது. அதனால் முட்டாள்களுக்கு அந்தத் தொல்லை இல்லை. தவறுகள் புரிந்தாலே அவற்றையிட்டு கேள்வி கேட்கத் தோன்றும். முட்டாள்களுக்கு தவறுகள் புரிவதில்லையென்பதால் அவர்களிடம் கேள்விகளே இல்லை. கேள்வி கேட்பதாலேயே இப்போது அதிகம் ஆபத்துக்கு உள்ளாக நேரிடுகிறது என்பதால் இப்போது பலர் முட்டாள்களாய் இருப்பதே புத்திசாலித்தனமென ஏற்றுக்கொள்கிறார்கள். உண்மையான முட்டாளுக்கு தான் ஒரு முட்டாள் என்பதே புரிவதில்லை. அதனால் அவனுக்கு தான் முட்டாளாய் இருப்பதுபற்றிய கவலையேதும் இருப்பதில்லை.

ஆதலால் சகோதர சகோதரிகளே, நாம் முட்டாள்களாக இருப்பதே உசிதம். உங்களில் சிலருக்கு உங்களை நீங்களே முட்டாளாக்கிக் கொள்வது எப்படியென்ற கேள்வி எழலாம். நான் ஏற்கெனவே சொல்லியுள்ளேன். முட்டாள்களுக்கு கேள்வியே ஏழாதென்று. இப்படியான ஒரு கேள்வி எழுந்தால் உங்களிடம் எங்கேயோ சிறிது புத்திசாலித்தனம் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கிறது என்பது அர்த்தமாகும். அதனால் அதையும் அறவே ஒழித்துக் கட்டுவதற்கு முயலுங்கள். முட்டாளாக இருப்பதற்கான அடிப்படைத் தகைமை நம்ப முடியாதவற்றை நம்புவதும் நம்பத் தகுந்தவற்றை நம்பாதிருப்பதுமே. நம்ப முடியாதவற்றை நம்புவதற்கு எம்மை இலகுவாகப் பயிற்றுவிக்கக்கூடிய சாதனமொன்று இன்று எமக்குக் கிடைத்திருக்கிறது. அதுதான் சினிமா! தனியொருவனால் எத்தனை பேரையும் உருட்டி உருட்டி உதைக்கலாம், குண்டடிபட்ட காயத்தோடும் வசனம் வசனமாய்ப் பேசலாம், ஒரு நாலைந்து ஏக்கர் நிலப்பரப்பை ஏழெட்டு முறை க்தாநாயகியோடு சுற்றிச் சுற்றியோடியபடி சொட்டுக் களைப்புமில்லாமல் சுருதி பிசகமல் டூயட் பாடலாம் என்பதெல்லாவற்றையும் நாம் ரெடிமேடாய் ஏற்றுக்கொண்டுதான் தியேட்டர் கதவுக்குள்ளே நுழைகிறோம். தமிழ்ச் சினிமாவை, ரசிக்கக்கூடிய பக்குவத்தை எம் மூளை பெற்றுக்கொண்டு விடுமாயின் நாம் முட்டாள்களாகக்கூடிய பக்குவத்தை எய்திவிட்டோம் என்பதற்கு அது நல்ல உரைக்கல்லாக அமையும். எனவே நாம் நம்ப முடியாதவற்றை நம்பப் பயில்வதற்கு சினிமாவை நல்ல சாதனமாகப் பயன்படுத்தலாம். ஆனால் அதுமட்டுமே எம்மை முட்டாள்களாக உருவாக்கப்போதுமானதல்ல. நம்பத் தகுந்தவற்றை நம்பாதிருப்பதற்கும் நாம் பயில வேண்டும். எம் முன்னோர்கள் பூமி உருண்டை என்பதை நம்ப மறுத்தார்கள். பூமியே சூரியனைச் சுற்றுகிறதென்பதையும்கூட நம்ப மறுத்தார்கள். அதனால் அவ்வாறு கூறிய விஞ்ஞானிகளையெல்லாம் தண்டித்தார்கள். அதுபோல் இப்போதும் நாம் நம்பாதிருக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன. தோல்வியை நம்ப மறுத்த ஹிட்லர் எமக்கு நல்ல வழிகாட்டி. நீங்கள் ஏற்கெனவே பலவற்றை நம்ப மறுத்தபடிதான் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். அவ்வாறுதான் நீங்கள உள்ளீர்கள் என்பதையே நீங்கள் நம்ப மறுப்பீர்கள். நல்லது. அதுதான் உங்கள் முட்டாள்தனத்துக்குரிய மற்றொரு தகைமை. அவ்வாறே என்றென்றும் முட்டாளாக இருக் கக் கடவீரென வாழ்த்தி இந்த முட்டாள் நிகழ்த்திய முட்டாள் தனமான முட்டாள் தின உரையை முட்டாள் தனத்துடன் கேட்ட அனைத்து முட்டாள்களுக்கும் என் முட்டாள் வணக்கங்கள் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி!

முட்டாள் தின உரைகேட்டு மூளை சூடேறிப்போனவர்களுக்கு ஒரு முட்டாள் கதை:

**பே**னாட்ஷா ஒருமுறை வயலின் ஒற்றை வரம்பொன்றால் நடந்து போன போது முன்னால் ஒரு முரடன் வந்துகொண்டிருந்தானாம். யாராவது வரம்பால் இறங்கி வழிவிட வேண்டிய நிலையில் முரடன் பேனாட்ஷாவைச் சினத்துடன் பார்த்து, "நான் முட்டாள்களுக்கு வழி விடுறதில்லை" என்றானாம். உடனே பேனாட்ஷா வரம்பிலிருந்து இறங்கிவிட்டுத் தயவாய்ச் சொன்னார், "நான் விடுறனான்!"

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lsplk.com/arul
436337


# அடிதடி ராணி





அமெரிக்கத் தொலைக்காட்சித் தொடர்களில் மிகவும் பிரபலமான ஒன்றுதான் 'ஸினா' வீரப்பெண் அரசி ஸினாவின் சாகச் செயல்கள்தான் இத் தொடரின் முக்கிய அம்சம்.

அமெரிக்காவில் மிகப்புகழ்பெற்ற இத் தொடர் உலகின் பல நாடுகளில் ஒளிபரப்பப் பட்டு (நம்நாட்டிலும்தான்) பெரும் புகழ்பெற்றுள்ளது.

இந்துமதம் மற்றும் யூதர்களின் புராண இதிகாசக் கதைகளும் இத்தொடரில் பயன்படுத்தப்படுகின்றன. ஸினா என்ற பெண் வலிமை, அதிகாரம், மற்றும் மேலாண்மை போன்றவற்றிற்கு எடுத்துக்காட்டாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

இதில் ஸினா பாத்திரமேற்று நடிப்பவர் லூஸி லாலெஸ். நியூஸிலாந்து நடிகையான இவர் இப்பாத்திரத்திற்கு வலுவூட்டுவதற்காக வாள் சண்டை, குதிரையேற்றம், கராத்தே போன்ற பல பயிற்சிகளைக் கற்றுள்ளார்.




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# புதிது

சிறார்கள் மட்டுமன்றி இளம் பெண்களின் கண்களையும் கருத்துக்களையும் கவர்பவை பொம்மைகள்.

அந்த வகையில் சந்தைக்குப் புதிதாக வந்திருக்கும் பொம்மைகளில் இதுவும் ஒன்று. கண்ணைக் கவரும் மஞ்சள் வர்ணத்தில் மெதுமெதுவென்றிருக்கும் இப்பொம்மையின் பெயர் 'ட்வீட்டி'

பார்ப்பவர்களின் பார்வையை விலகவிடாது சொக்க வைக்கும் இந்தப் பொம்மையின் விலை ஆயிரத்து 150 இந்திய ரூபாய்.

# பறக்கும் பட்டம்





மெகாபைற் பட்டம் உருவாக்கப்படும் போது அதன் உள் உடல் அமைப்பினை சீராக்க ஈடுபட்ட கலைஞர்கள் இறுதிநேரப் பணிகளைச் செய்துகொண்டிருப்பதையே மேலே உள்ள படம் காட்டுகிறது. பட்டம் பறக்கவிடப்படுவதில் இருவர் ஈடுபட்டிருப்பதைக் கீழே காணலாம்.

பட்டம் விடுவது பல நாடுகளில் ஒரு உல்லாச விளையாட்டாக வளர்ந்து வருகிறது. பல்வகை உருவங்களில் பல வர்ணங்களில் பலவகை அளவுகளில் வடிவங்களில் பட்டங்கள் தயாரிக்கப்பட்டு வானில் பறக்கவிடுவது பலரையும் கவர்ந்திழுக்கும் விளையாட்டு. இப்போது சர்வதேசரீதியில் பட்டங்களைத் தயாரித்து சில நாடுகளில் வருடாந்த விழாவாகக் கொண்டாடப்படுகிறது. பிரித்தானியாவில் 1997 செப்டம்பர் 7ம் திகதியன்று இடம்பெற்ற பிறிஸ்ரல் சர்வதேச பட்டம் விடும் கொண்டாட்டத்தில்

நியூஸிலாந்தைச் சேர்ந்த பீற்றர் லின் என்பவர் தயாரித்த-உலகிலேயே மிகப் பெரிய பட்டம் எனக் கணிக்கப்பட்ட 'மெகாபைற்' என்ற பட்டம் பறக்க விடப்படுவதையே படத்தில் காண்கிறீர்கள்.

விசித்திரமான ஒரு தேள் போல் தோற்றமளிக்கும் இந்தப்பட்டத்தின் (வால்வரையிலான) நீளம் 64மீற்றர் (110 அடி). அகலம் 22 மீற்றர் (72அடி).



# 1வது பிறந்தநாள் வாழ்த்து



**விவக்ஷ் 23.03.2001**

HOLLANDல் வசிக்கும் ராஜன்-சுகி தம்பதிகளின் செல்வப் புதல்வன் **விவக்ஷ்** தனது முதலாவது பிறந்தநாளை 23.03.2001 அன்று HOLLAND, DENHAAG நகரில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார். இவரை HOLLANDல் உள்ள அப்பா, அம்மா, அம்மம்மா, மாமா, பெரியப்பா, பெரியம்மா, யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் இருக்கும் பாட்டி, கொழும்பு தெஹிவளையில் உள்ள அப்பப்பா அப்பம்மா, மாமா, அத்தை, அன்பு மச்சாள் விதுஷிகா மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் விவக்ஷை நல்லூர் கந்தனின் அருள் பெற்று சீரும் சிறப்புடன் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழக வென வாழ்த்துகின்றனர்.

தகவல்: ராஜன்

# விளாசல்



வெற்றி மேல் வெற்றி பெற்று வந்த அவுஸ்திரேலிய அணியின் வேக நடைக்கு முட்டுக்கட்டை போட்டவர் இந்தியத் துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ். லக்ஷ்மன்.

கல்கத்தாவில் நடந்த 2வது டெஸ்ட்டில், இன்னிங்ஸால் தோற்கும் நிலையில் இருந்த இந்திய அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தாலே போதும் என்ற நிலையில் ஆடியது. இருப்பினும் இன்னிங்ஸ் தோல்வியில் இருந்து முதலில் விடுபட்டு, பின்னர் தோல்விப் பாதையில் இருந்து வெற்றி பெற வழி சமைத்தவர்தான் லக்ஷ்மன்.

இவர் இப்போட்டியில் 281 ஓட்டங்களை விளாசி, அணியை வெற்றி பெற வைத்ததோடு, டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் அதிக ஓட்டங்களைக் குவித்த இந்தியர் என்ற சாதனையையும் தனதாக்கிக் கொண்டார். அத்துடன் ஓர் இன்னிங்ஸில் அதிக பவுண்டரிகளை அடித்த (44) இந்திய வீரராகவும் திகழ்கிறார். 26 வயதான ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத்தைச் சேர்ந்த லக்ஷ்மனின் முழுப்பெயர் வெங்கிபுரப்பு வெங்கட சாய் லக்ஷ்மன் என்பதாகும்.